விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 சித்திரை 14 சனிக்கிழமை (27.04.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 129

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

பொதுமக்களின் பாதுகாப்புக்காக

# வடக்கில் சிறப்பு பொலிஸ் பிரிவு ஆரம்பிப்பு!

**(யாழ்ப்பாணம்) பொதுமக்களின் பாதுகாப்பு கருதி வடக்கில் சிறப்பு பொலிஸ் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது என பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.**

அத்துடன், மேல் மாகாணம் வடக்கு, மேல் மாகாணம் தெற்கு மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரிவுகள், கொழும்பு மற்றும் களுத்துறை மாவட்டங்களின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரிவுகள் மற்றும் பாணந்துறை பொலிஸ் அத்தியட்சகர் பிரிவிலும் இந்த சிறப்பு விசாரணைப் பிரிவு தனித்தனியாக அமைக்கப்பட்டுள்ளன.

நாட்டில் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இட்ம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல்களை அடுத்து பொதும்க்களின் பாதுகாப்பை உறுதி செய்ய இந்த சிறப்பு விசாரணைப் பிரிவுகள் பொலிஸ் திணைக் 23

## பாடசாலைகள் மே 6ம் திகதியே ஆரம்பமாகும்

ஜனாதிபதி ஊடகப்பிரிவு

(கொழும்பு)

நாட்டின் அனைத்துப் பாடசாலைகளும் பல்கலைக்கழகங்களும் மே 6ஆம் திகதியே ஆரம்பிக்கப்படும் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று இடம்பெற்ற 24

## வட பகுதியின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது

வட மாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் றொசான் பெர்னாந்து

(கண்டாவளை)

நாட்டில் ஏற்பட்டுள்ள குண்டுத் தாக்குதல்களை அடுத்து மேற்கொள்ளப்பட்டுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகளின் அமைவாக வடக்கு மாகாணத்தின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என வட மாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் றொசான் பெர்னாந்து தெரிவித்துள்ளார்.

நேற்று கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் 24

# நாடளாவிய ரீதியில் அனைத்து வீடுகளையும் சோதனையிடுக!

ஜனாதிபதி மைத்திரி கடும் உத்தரவு



(கொழும்பு)

நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து வீடுகளையும் சோதனைக்குட்படுத்துமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பணிப்புரை விடுத்துள்ளார்.

நிரந்தர வதிவிடங்களில் வசிப்போரை பதிவு செய்யுமாறும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

அடையாளம் தெரியாதவர்கள் சில பகுதிகளில் தங்கியுள்ளதால் விசேட சுற்றிவளைப்புகளை மேற்கொள்ளுமாறும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

இதேவேளை, கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதல்களை தொடர்ந்து நாடளாவிய ரீதியில் 24

## வதந்திகளை பரப்பினால் 5 வருட சிறை

பாதுகாப்பு அமைச்சு

(கொழும்பு)

சமூக வலைத்தளங்களில் பொது மக்களையும் பாதுகாப்புத் 23

பொலிஸ்மா அதிபரிடம்

## 2 மணி நேரம் வாக்குமூலம்

(கொழும்பு)

நாட்டில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் 23

ஜனாதிபதியானதும் இஸ்லாமிய

## தீவிரவாதத்தை துடைத்தெறிவேன்

கோத்தபாய அதிரடி

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போவதாக முன்னாள் பாதுகாப்புச் செயலா 23

அம்பாறை- கல்முனை, சாய்ந்தமருது பகுதியில்

# ஐ.எஸ் அமைப்பினரின் மறைவிடம் சுற்றிவளைப்பு




## குண்டுகள் வெடிப்பு; துப்பாக்கி சண்டை; மறு அறிவித்தல் வரை ஊடரங்கு அமுல்

***(அம்பாறை) அம்பாறை- கல்முனை, சாய்ந்தமருது பகுதியில் ஐ.எஸ் அமைப்பினரின் மறைவிடம் ஒன்றை சுற்றிவளைத்த போது படையினர் மீது குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இதனையடுத்து துப்பாக்கிச் சூடுகளும் நடத்தப்பட்டுள்ளன. இதனால் கல்முனையில் மறு அறிவித்தல் வரை ஊரடங்குச்சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.*** ***(23-ம் பக்கம்...)***

## கல்முனை- சாய்ந்தமருதில் தற்கொலைத் தாக்குதல்

பொதுமகன் உட்பட மூவர் பலி



(அம்பாறை)

கிழக்கு மாகாணம் கல்முனை- சாய்ந்தமருது பகுதியில் சுற்றிவளைப்புத் தேடுதலை முன்னெடுத்த பொலிஸ் மற்றும் படையணிகளை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தற்கொலைக் 23

ஐ.எஸ் பயங்கரவாதத்தை

## இலங்கையிலிருந்து முற்றாக ஒழிப்போம்

ஜனாதிபதி சூளுரை

(கொழும்பு)

ஐ.எஸ் பயங்கரவாத செயற்பாடுகளை இலங்கையிலிருந்து முற்றாக ஒழித்துக்கட்டும் பலம் எமது நாட்டின் பாதுகாப்புத் துறையிடம் உள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்த பயங்கரவாத இயக்கத்தை இலங்கையிலிருந்து அடியோடு ஒழித்து விரைவாக 23

## பத்தாயிரம் இராணுவம் நாடு முழுவதும் பாதுகாப்பில்

இராணுவப் பேச்சாளர் சுமித் அத்தப்பத்து



(கொழும்பு)

அவசரகால ஒழுங்கு சட்ட விதிகள் அமுலுக்கு வந்த பின்னர் நாட்டின் பாதுகாப்பு நிமித்தம் பயங்கரவாதத்தை முடக்குவதற்காக நாடு முழுவதும் 10ஆயிரம் இராணுவத்தினர் பாதுகாப்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக இரா 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 31ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

எங்கள் அன்புத் தெய்வமே
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து சென்றதையிட்டு
ஆறாத் துயரில் தவிக்கின்றோம்
கண்ணிமைக்கும் பொழுதினிலே காலன் உங்களை
கவர்ந்து சென்றானே
நாங்கள் எண்ணிக்கூட பார்க்கவில்லை
இப்படி எம்மைத் தவிக்கவிட்டு சென்று விடுவீர்கள் என்று!
இருந்தாலும் எமைவிட்டு சென்று விட்டீர்களே
ஏற்க மறுக்கிறது மனம் உங்கள் பிரிவை
இருந்தாலும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

எங்கள் தாயாரின் பிரிவுச் செய்தி கேட்டு நேரில் வந்தும் தொலைபேசி ஊடாகவும் எமக்கு ஆறுதல் அளித்த பல வழிகளில் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதோடு இன்று (27.04.2019) நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்வதோடு அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அமரர்
## பத்மநாதன் அன்னலட்சுமி

தோற்றம்: 21.04.1939 மறைவு: 28.03.2019

தகவல்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
103/1, கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(8585)

# மணிவிழா நாயகனுக்கு மனம் நிறைந்த வாழ்த்துக்கள்



## திரு.கார்த்திகேசு சிவம்
{(Sp.Trd (Sci), B.Ed (Sci)}

(ஆசிரிய ஆலோசகர் - விஞ்ஞான பாடம், வடமராட்சி கல்வி வலயம்)

சேவைக்கால விபரங்கள்

| | | |
|---|---|---|
| 01. யா/இமையாணன் அ.த.க.வித்தியாலயம் | (ஆசிரியர்) | 1988.10.21 - 1990.12.31 |
| 02. பலாலி ஆசிரியர் கலாசாலை | (ஆசிரியர்) | 1991.01.01 - 1992.12.31 |
| 03. யா/குடத்தனை அ.மி.த.க.பாடசாலை | (ஆசிரியர்) | 1993.01.01 - 1996.12.31 |
| 04. யா/இமையாணன் அ.த.க.வித்தியாலயம் | (ஆசிரியர்) | 1997.01.01 - 2010.05.04 |
| 05. யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி | (ஆசிரியர்) | 2010.05.05 - 2010.12.31 |
| 06. வடமராட்சிக் கல்வி வலயம் | (ஆசிரிய ஆலோசகர்) | 2011.01.01 - 2019.04.26 |

ஏப்ரல் 27 2019

உமையாளின் மகனாம் சிறீமுருகன் அருள்பாலிக்கும்
இமையாணன் செல்விவளவு சிறப்புறு மனைதனிலே
கார்த்திகேசு சின்னமணி கனிவான இல்லறத்தால்
பார் புகழப் பிறந்திட்ட புத்திரனாம் சிவம்

கதிர்காமக் கந்தனின் கருணையினால் பிறந்தவர்
கல்வியால் உயர்வடைந்து மதிப்பினைப் பெற்றவர்
அவனியிலே சேவைதனை சிறப்புடனே செய்தவர்
ஆசிரிய ஆலோசகராய் ஓய்வினைப் பெறுபவர்

அகவையாம் அறுபதுதனை காண்பவரே வாழி வாழி
அருளாசி பெற்று வாழ்ந்திடவே வாழி வாழி
மணி விழா நாயகனே வாழ்த்துகின்றோம் வாழி வாழி
உதிரத்து உறவுகள் நாம் வாழ்த்துகின்றோம் வாழி வாழி

அன்புடன் வாழ்த்துவோர்: கார்த்திகேசு சின்னமணி குடும்பம் | நாகேந்திரம் பிள்ளை குடும்பம்
கோபாலகிருஷ்ணன் பூலோகம் குடும்பம் | குட்டித்தம்பி ஈஸ்வரி குடும்பம்
யோகலிங்கம் உமா குடும்பம் | சிறீநவக்கிளி ரகுமதி குடும்பம்
ஈஸ்வரலிங்கம் கௌரி குடும்பம்

செல்விவளவு,
இமையாணன், உடுப்பிட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையை தங்களுக்கான நிலப்பரப்பாக பிரகடனம் செய்த ஐ.எஸ்.பயங்கரவாதிகள்!

(கொழும்பு)

ஐ.எஸ்.பயங்கரவாத அமைப்பால் இலங்கை தங்கள் அமைப்பிற்கான பூமி என அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் இராணுவ புலனாய்வுப் பிரிவிற்குத் தகவல் கிடைத்துள்ளதாக விமானப்படை புலனாய்வுப் பிரிவு அறிக்கை வெளியிட்டுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

கொழும்பு விமானப்படைத் தலைமையகத்தில், புலனாய்வுப் பிரிவு அலுவலகத்திலிருந்து இதற்கான கடிதம் கடந்த 23 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கை பூமியை தங்கள் ஆட்சியை அமைப்பதற்கான இடமாக ஐ.எஸ்.பயங்கரவாத அமைப்பு திட்டமிட்டுள்ளதெனவும் அந்த நடவடிக்கையை எதிர்வரும் காலங்களிலும் முன்னெடுக்கப்போவதாகவும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த நோக்கத்திற்காக தொடர்ந்து தற்கொலைக் குண்டுத் தாக்குதல் மேற்கொள்வதற்கும் கிறிஸ்தவர்களை இலக்கு வைத்து தாக்குதல் மேற்கொள்வதற்கும் வெளிநாட்டவர்கள் இருக்கும் இடங்களில் தாக்குதல் மேற்கொள்வதற்கும் அரச மற்றும் தனியார் சொத்துக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்துவதற்கும் மக்கள் அதிக மாகக் கூடும் இடத்தில் தாக்குதல் மேற்கொள்ளுதல் போன்ற பயங்கரவாதச் செயற்பாடுகள் மேற் கொள்வதற்கும் தயாராகுவதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த எச்சரிக்கைக் கடிதம் தொடர்பில் விமானப்படையின் ஊடகப் பிரிவிடம் விளக்கம் கோரியதாகவும் எனினும் செய்தியை உறுதி செய்யவோ நிராகரிக்கவோ இல்லை என குறித்த ஊடகம் சுட்டிக்காட்டிள்ளது. (இ-7)

## ஐ.எஸ்.தீவிரவாத அமைப்பை அமெரிக்காவே உருவாக்கியது

### விமலின் கட்சி கண்டுபிடிப்பு

(கொழும்பு)

பயங்கரவாதத்தை ஒழிக்கும் நடவடிக்கைகளில் அமெரிக்காவின் எப்.பி.ஐ. பிரித்தானியாவின் எம்.ஐ.5 ஆகிய விசாரணை குழுக்களை தலையிட வைக்க வேண்டாம் எனவும் இவர்கள் இலங்கைக்குள் நுழைந்தால் இலங்கைக்கும் எதிர்காலத்தில் ஆப்கானிஸ்தான், ஈராக், லிபியா, சிரியா போன்ற நாடுகளுக்கு ஏற்பட்ட நிலைமை ஏற்படும் என தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் தற்போது செயற்படும் பயங்கரவாத்தை, விடுதலைப் புலிகளை முற்றாக அழித்த இலங்கை இராணுவத்திற்கு அழிக்க முடியும்.

ஐ.எஸ். என்ற இஸ்லாமிய அரசு அமைப்பு அமெரிக்காவின் புலனாய்வுப் பிரிவான சி.ஐ.ஏ. உருவாக்கிய அமைப்பு. அமெரிக்கா இந்தப் பயங்கரவாத அமைப்பு அல்லது அதன் ஆதரவாளர்களை நாடுகளுக்குள் அனுப்பி அவர்கள் மூலம் மிலேச்சத்தனமாக பயங்கரவாதத் தாக்குதல்களை நடத்துகிறது என்பது தற்போது உறுதியாகியுள்ளது.

கொடூரமான பயங்கரவாதத் தாக்குதல்கள் நடக்கும் நாடுகளுக்கு உதவும் போர்வையில், அமெரிக்கா தனது இராணுவத்தை அனுப்பும். அந்தப் பயங்கரவாதத் தாக்குதல்கள் குறித்து விசாரிக்க எப்.பி.ஐ. விசாரணையாளர்களை அனுப்பும்.


அமெரிக்கா எண்ணெய்வளம், இயற்கை வளங்கள் மற்றும் இராணுவ ரீதியான முக்கிய இடங்களில் அமைந்துள்ள நாடுகளில் நுழைய இந்த வழிமுறையை பின்பற்றுகிறது. ஈராக், லிபியா, சிரியா மற்றும் ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகள் அமெரிக்காவின் வேட்டைக் களமரக மாறின.

விடுதலைப் புலிகளை அழித்த இலங்கைப் படையினருக்கு வெளிநாட்டுப் படையினரின் உதவிஎந்த வகையிலும் தேவைப்படாது. இலங்கைப் படையினர் மிக விரைவில் இந்த இஸ்லாமிய பயங்கரவாதத்தைத் தோற்கடிப்பார்கள்.

விடுதலைப் புலிகளை தோற்கடிக்கும் போருக்கு தலைமை தாங்கிய உயர் இராணுவ அதிகாரிகள், திறமையான புலனாய்வு அதிகாரிகளை உரிய இடங்களில் நியமித்து இந்தப் பயங்கரவாதத்தை தோற்கடிக்க நடவடிக்கை எடுக்குமாறு முப்படைத் தளபதியான ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

புலிகளை தோற்கடிக்க வழங்கிய ஒத்துழைப்புக்களை இஸ்லாமிய பயங்கரவாத்தை தோற்கடிக்க வழங்க வேண்டும் என பொதுமக்களிடம் கோரிக்கை விடுப்பதாகவும் ஜயந்த சமரவீர தெரிவித்தார். (இ-7)

## பள்ளிவாசலிலிருந்து 47 வாள்கள் மீட்பு!



(கொழும்பு)

பள்ளிசாவல் ஒன்றிலிருந்து 47 வாள்கள் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு கொம்பனித்தெரு-பள்ளிவீதி பகுதியில் அமைந்துள்ள பள்ளிவாசல் ஒன்றிலிருந்தே இந்த வாள்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பள்ளிவாசல் மதகுருவின் கட்டிலின் கீழிருந்தே குறித்த வாள்கள் மீட்கப்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பாக மத குருவிடம் பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ-7)

### வதந்திகளை பரப்புவோரை கட்டுப்படுத்தாவிட்டால்

## இலங்கையில் சமூக ஊடகங்கள் நிரந்தரமாக கட்டுப்படுத்தப்படும்

### ஜனாதிபதி எச்சரிக்கை



(கொழும்பு)

இலங்கை சமூக ஊடகங்கள் ஊடாக வதந்திகளை பரப்புவோரை அடையாளப்படுத்த முடியாவிட்டால் சமூக ஊடகங்கள் நிரந்தரமாக கட்டுப்படுத்தப்படுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எச்சரித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில், ஊடகப் பிரதானிகளுடன் நேற்று வெள்ளிக்கிழமை காலை நடத்திய சந்திப்பில் ஜனாதிபதி மேற்கண்டவாறு எச்சரித்தார்.

தவறான விடயங்களைப் பரப்புவோரை அடையாளப்படுத்த, சமூக ஊடகங்களைச் சார்ந்தவர்கள் உதவ முன்வராவிட்டால் இந்நடவடிக்கையை எடுக்க நேரிடும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

அத்தோடு, ஊடகங்களும் சமூகப் பொறுப்புடன் செயற்பட வேண்டுமென வலியுறுத்திய ஜனாதிபதி, நாட்டில் சுமுகநிலை தொடர்வதற்கு அனைத்து வகையிலும் ஊடகங்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார். அத்தோடு, விசேடமல்லாத செய்திகளையும் விசேட செய்தியென ஊடகங்கள் தற்போது வெளியிடுகின்றன என ஜனாதிபதி தெரிவித்தார்.

கடந்த ஈஸ்டர் ஞாயிறு தினத்தன்று நாடளாவிய ரீதியில் அடுத்தடுத்து குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டதைத் தொடர்ந்து, சமூக ஊடகங்கள் தற்காலிகமாக முடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சஹ்ரான் ஷங்ரிலாவில் பலி



(கொழும்பு)

ஈஸ்டர் தினத்தன்று இலங்கையில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்களின் சூத்திரதாரி எனக் கருதப்பட்ட சஹ்ரான் ஹாசிம் என்ற மௌலவி இறந்துவிட்டதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்ற ஊடகப் பிரதானிகளுடனான சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஷங்ரிலா நட்சத்திர ஹோட்டலில் நடந்த தாக்குதலில் அவர் உயிரிழந்துவிட்டதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

எனினும், அதனை உறுதிப்படுத்துவதற்கு மரபணு பரிசோதனை செய்யப்படவுள்ளதென இச்சந்திப்பில் கலந்துகொண்டிருந்த புலனாய்வுத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அத்தோடு, 2017ஆம் ஆண்டு முதல் சஹ்ரான் மௌலவி இலங்கை அரசாங்கத்தால் தேடப்பட்டு வந்துள்ளார். அதன் பின்னர் இந்தியாவிற்கு தப்பிச்சென்ற அவர், அங்கிருந்து ஐ.எஸ். உடன் தொடர்பைப் பேணி வந்துள்ளார். அதனைத் தொடர்ந்து இலங்கையில் தாக்குதல் நடத்தியுள்ளார் என புலனாய்வுத் துறை அதிகாரி தெரிவித்தார்.

இலங்கைத் தொடர் குண்டு வெடிப்பு தாக்குதல்களின் பின்னணியில் செயற்பட்டதாக கூறப்படும் சஹ்ரான் மௌலவி. தௌஹீத் ஜமாத் அமைப்பின் ஒருங்கிணைப்பாளராக செயற்பட்டு வந்துள்ளார். எனினும், அரசாங்கத்திற்கு எதிராக அவர் சமூக ஊடகங்களில் வெளியிட்ட கருத்துக்களைத் தொடர்ந்து தமது அமைப்பிலிருந்து அவரை நீக்கிவிட்டதாக தௌஹீத் ஜமாத் அமைப்பு நேற்று முன்தினம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கொழும்பில் குண்டுத் தாக்குதல் 150 தொலைபேசிகளுடன் கண்டியில் ஒருவர் கைது

(கொழும்பு)

கொழும்பு சினமன் கிரான்ட் ஹோட்டலில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் மேற்கொண்டவரின் உறவினர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கண்டி கலஹா பிரதேசத்தில் வைத்து குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நபர் சின மன் கிரான்ட் ஹோட்டலின் பாதுகாப்புப் பிரிவில் பணியாற்றி யவர் என விசாரணையில் தெரி யவந்துள்ளது.

கைது செய்யப்பட் டவரிடமிருந்து 150 கையடக்க தொலைபேசிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்னை 'அலட்சியம்...' மும்பை 'லட்சியம்'

## ரோகித், மலிங்க அபாரம்

ஐ.பி.எல்., தொடரின் 'பிளே-ஓப்' சுற்றுக்கு முன்னேற வேண்டும் என்ற லட்சியத்துடன் விளையாடிய மும்பை அணி 46 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சென்னை அணியை வீழ்த்தியது.

இந்தியாவில், ஐ.பி.எல்., கிரிக்கெட் தொடரின் 12வது சீசன் நடக்கிறது. சென்னையில் உள்ள சேப்பாக்கம் மைதானத்தில் நடந்த லீக் போட்டியில் 'நடப்பு சம்பியன்' சென்னை அணி, மும்பை அணியை எதிர்கொண்டது. சென்னை அணியில் வழமையான அணித் தலைவர் தோனி, ரவிந்திர ஜடேஜா, டு பிளசி நீக்கப்பட்டு துருவ் ஷோரே, முரளி விஜய், சான்ட்னர் சேர்க்கப்பட்டனர். மும்பை அணியில் பென் கட்டிங், மயங்க் மார்கண் டேவுக்கு பதிலாக எவின் லீவிஸ், அனுகுல் ராய் (அறிமுகம்) தேர்வாகினர். நாணயச் சுழற்சியில் வென்ற சென்னை அணித் தலைவர் ரெய்னா, களத்தடுப்பை தேர்வு செய்தார்.

**குயின்ரன் ஏமாற்றம்**

மும்பை அணிக்கு அணித் தலைவர் ரோகித் சர்மா, குயின்ரன் டி கொக் ஜோடி ஆரம்பம் கொடுத்தது. தீபக் சகார் வீசிய ஆட்டத்தின் முதல் பந்தை பவுண்டரிக்கு அனுப்பி ஓட்டக் கணக்கை ஆரம்பித்தார் ரோகித். இரண்டாவது ஓவரை வீசிய ஹர்பஜன் சிங், 4 ஓட்டம் மட்டுமே வழங்கினார். சகார் வீசிய 3வது ஓவரின் முதலிரண்டு பந்தில் ஒரு சிக்சர், ஒரு பவுண்டரி விளாசிய குயின்ரன் (15), 4வது பந்தில் ஆட்டமிழந்தார். மீண்டும் 'சுழலில்' அசத்திய ஹர்பஜன் சிங், 4ஆவது ஓவரில் ஒரு ஓட்டம் மட்டுமே விட்டுக் கொடுத்தார்.

**ரோகித் நம்பிக்கை**

அடுத்து வந்த எவின் லீவிஸ், சகார் வீசிய 5வது ஓவரில் 2 பவுண்டரி அடித்தார். இந்த ஓவரின் கடைசி பந்தில் ரோகித், தன்பங்கிற்கு ஒரு பவுண்டரி அடிக்க 16 ஓட்டங்கள் கிடைத்தது. தொடர்ந்து அசத்திய ரோகித், ஹர்பஜன் வீசிய 8வது ஓவரில் 2 சிக்சர் பறக்கவிட்டார். இவருக்கு ஒத்துழைப்பு கொடுத்த லீவிஸ், இம்ரான் தாகிர் வீசிய 9வது ஓவரில் தொடர்ச்சியாக ஒரு சிக்சர், ஒரு பவுண்டரி அடித்தார். சான்ட்னர், டுவைன் பிராவோ பந்தில் தலா ஒரு பவுண்டரி விளாசினார் ரோகித். இரண்டாவது விக்கெட்டுக்காக 75 ஓட்டங்களைச் சேர்த்த போது சான்ட்னர் 'சுழலில்' லீவிஸ் (32) சிக்கினார்.

பொறுப்பாக ஆடிய ரோகித், இந்த சீசனில் தனது முதல் அரைசதத்தை பதிவு செய்தார். இம்ரான் தாகிர் பந்தில் குர்னால் பாண்ட்யா (1) வெளியேறினார். தாகிர் வீசிய 16வது ஓவரில் 2 பவுண்டரி, ஒரு சிக்சர் விளாசிய ரோகித (67), சான்ட்னரிடம் சரணடைந்தார்.

20 ஓவர்களில் மும்பை அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 155 ஓட்டங்களை எடுத்தது. ஹர்திக் பாண்ட்யா (23), பொலார்ட் (13) ஆட்டமிழக்காமல் இருந்தனர். சென்னை அணி சார்பில் சான்ட்னர் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

**ரெய்னா ஏமாற்றம்**

ஏற்கெனவே 'பிளே-ஓப்' சுற்றுக்கான இடத்தை உறுதி செய்த சென்னை அணியினர் அலட்சியமாக விளையாடினர். மலிங்க 'வேகத்தில்' வோட்சன் (8) ஆட்டமிழந்தார். அணித் தலைவர் ரெய்னா (2) நிலைக்கவில்லை. மற்றொரு ஆரம்ப வீரர் முரளி விஜய், ஹர்திக் பாண்ட்யா வீசிய 4வது ஓவரில்தொடர்சியாக ஒரு பவுண்டரி, ஒரு சிக்சர் விளாசினார். குர்னால் பாண்ட்யா 'சுழலில்' அம்பதி ராயுடு (0), கேதர் ஜாதவ் (6) போல்டாகினர். 'அறிமுக' அனுகுல் ராய் பந்தில் துருவ் ஷோரே (5) ஆட்டமிழந்தார். பொறுப்பாக ஆடிய முரளி விஜய் (38) ஆறுதல்தந்தார்.

**மலிங்க அசத்தல்**

பிராவோ (20) பெரிய அளவில் சோபிக்கவில்லை தீபக் சகார் 'டக்-அவுட்' ஆனார். மலிங்க வீசிய 18வது ஓவரில் ஹர்பஜன் சிங் (1), சான்ட்னர் (22)ஆட்டமிழந்தனர். சென்னை அணி 17.4 ஓவரில் 109 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து தோல்வியடைந்தது. இம்ரான தாகிர் (0) ஆட்டமிழக்காமல் இருந்தார். மும்பை அணி சார்பில் மலிங்க 4 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.



விளாசும் ரோகித்



# அறிவித்தல்

**பிரதேச வைத்தியசாலை, வரணி**
**நோயாளர் நலன்புரிச் சங்கம்**

**28.04.2019 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு இடம்பெறவிருந்த வரணி பிரதேச வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரிச் சங்க பொதுக் கூட்டமானது தவிர்க்க முடியாத காரணத்தினால் மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.**

**செயலாளர்**
**நோயாளர் நலன்புரிச் சங்கம்**
**பிரதேச வைத்தியசாலை,**
**வரணி.**

(8594)

# விஸ்டம் தொழில் நுட்பக் கல்லூரி

இல.63, சிவன் வடக்கு வீதி,வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

**எமது மாணவர்களுக்கான அறிவித்தல்**
27/04/2019 சனி, 28/04/2019 ஞாயிறு ஆகிய இரு தினங்களும் பாதுகாப்புக் காரணங்களுக்காக அனைத்து வகுப்புக்களும் நிறுத்தப்பட்டுள்ளன என்பதை அறியத்தருகிறேன்

– நிர்வாகி –

மேலதிக தகவல்களுக்கு :- 077 248 7774

(C-6222)

# வேலையாள் தேவை

**சமையலாளர்**

தங்கம்மா முதியோர் இல்லத்தில் தங்கி நின்று நிரந்தரமாக வேலை செய்யக்கூடிய 50 வயதுக்கு மேற்பட்ட சமையலாளர் தேவை. அனுபவமுள்ள பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

நேர்மையானவராகவும் உடல்நலம் உடையவராகவும் இருத்தல் வேண்டும். 15 இற்கு உட்பட முதியோர்களுக்கு முழுநேர உணவு சமைத்து வழங்கக் கூடியவராக இருத்தல் வேண்டும். மாதம் 2 நாட்கள் விடுமுறை வழங்கப்படும். உரிய சம்பளம் வழங்கப்படும்.

**● முதியோர்களைச் சேர்த்தல்**


55 வயதுக்கு மேற்பட்ட எதுவித உதவிகளும் அற்ற ஆண், பெண் இருபாலாருக்கும் நவீன வசதிகள் கொண்ட முற்றும் முழுதும் இலவசமாக சேவை வழங்கப்படுகின்றது.

.(C-6218)

தொடர்புகளுக்கு: தங்கம்மா முதியோர் இல்லம்
புதுக்குளம், கனகராயன்குளம்.
Dr. குணசிங்கம்- 076 248 2766



# மரண அறிவித்தல்



**கந்தையா**
**விக்னேஸ்வரகடாக்ஷன்**
**(டாக்டர் சாமி)**
**(ஓய்வுபெற்ற பல்வைத்தியர்**
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்)**

அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும் 11A, St.Lucias Lane, Kottakena மற்றும் 54, Hundred - Acress Lane, Amersham, HP79BX, London என்பவற்றினை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா விக்னேஸ்வரகடாக்ஷன் அவர்கள் கடந்த 24.04.2019 புதன்கிழமை அன்று சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சுந்தரம்மா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான கந்தஞானியார் - வேதநாயகி தம்பதிகளின் பாசமிகு மருமகனும் ஜெகதீஸ்வரியின் அன்புக் கணவரும் கிருபாலர் (வைத்தியர்-Uk), பேரருள் (Uk), அமரர் மஹோதரர் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் சிவஅருட்செல்வி (Uk), சஞ்சீவன் (கணக்காளர் - Uk) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஹசித்யன், அக்ஷயன், ப்ருத்திகன், சஜினி, சனந்தன் ஆகியோரின் பாசமிகு பேரனாரும் அமரர்களான சச்சிதானந்தம், பாலசுந்தரம் (சட்டத்தரணி - மலேசியா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் அமரர் இன்பம் மற்றும் நாகேஸ்வரி (Uk), நடராஜா (இளைப்பாறிய அதிபர் - அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியா சாலை), அருணகிரிநாதன் (இளைப்பாறிய உபதபாலதிபர் - உப தபாலலுவலகம், அராலி தெற்கு), ஞானசம்பந்தன் (இளைப்பாறிய வங்கி உத்தியோகத்தர் - இலங்கை வங்கி பிரதான கிளை யாழ்ப்பாணம்), அமரர் ஞானேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் சண்முகசுந்தரம் (பல்வைத்தியர் - மலேசியா), உமைதேவி (மலேசியா), லலிதாம்பிகை (மலேசியா) ஆகியோரின் பாசமிகு சிறிய தந்தையாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.04.2019) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் அராலி தெற்கிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலி தெற்கு பூனாவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(8588)

மாதாஸ் கோவில் ஒழுங்கை,
அராலி தெற்கு.
வட்டுக்கோட்டை.

தகவல்:-
மனைவி மற்றும்
பிள்ளைகள்

தொ.பே: 0775686388, 0760682405, 00447962183707, 00447545044031

# அறிவித்தல்

யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி மற்றும் யாழ்ப்பாணம் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி என்பனவற்றுக்கு முன்பாகச் செல்லும் பிரதான வீதி மற்றும் கொழும்புத்துறை வீதியின் பகுதிகளைப் பாடசாலை நாட்களில் காலை 7.00 மணிமுதல் 8.00 மணி வரையும் பிற்பகல் 1.00 மணி முதல் 2.00 மணிவரையும் ஒரு வழிப்பாதையாக மட்டும் பயன்படுத்த முடியும் என்பதை வீதிப் பாவனையாளருக்கு இத்தால் அறியத் தருகின்றேன். இவ்வீதி ஒழுங்கினை கிரமமாகக் கடைப்பிடித்து ஒத்துழைக்குமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கின்றேன்.




மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துப்பாக்கிச் சூட்டில் வர்த்தகர் உயிரிழப்பு

(முல்லேரியா)

முல்லேரியா பொலிஸ் பிரிவின் ரணபிம மாவத்தை வடக்கு பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 7.45 மணியளவில் இந்த துப்பாக்கி சூட்டுச் சம்பவம் இடம் பெற்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த இனந் தெரியாத மூன்று நபர்களால் இந்த துப்பாக்கி சூடு நடத்தப்பட்டதுடன் துப்பாக்கி சூட்டில் காயமடைந்த நபர் முல்லேரியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்த நபர் 38 வயதுடைய வர்த்தகர் என விசாரணைகளின் பின் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 10 06 1961

விண்ணில் 28 03 2019



27.04.2019

சித்த மருத்துவக் கலாநிதி
உயர்திரு செல்வக்கண்டு லோகநாதன் அவர்கள்
(சமாதான நீதவான்)

கத்துகின்ற கடல் சூழ்ந்த கவின் மிகுந்த மன்னாரின்
முத்தெனவே மிளிர்ந்தவருள் ஒருவரெனப் பேரெடுத்தீர்
முத்தைத்தரு பத்தியென்ற முத்தான திருப்புகழால்
முப்பொழுதும் முருகனவன் திருவடியைப் பணிந்திடுவீர்
சித்தரெல்லாம் நமக்களித்த மருத்துவத்தைக் கற்றறிந்து
கைதேர்ந்த வைத்தியராய்க் கடமையினை ஆற்றி நின்றீர்
வித்தகரே விண்ணுலகில் நீரின்று வாழ்ந்தாலும்
இத்தரையில் உம்மையென்றும் எமதுள்ளம் மறவாது!

"மரகதம் கிளினிக்"
அமின் திரையரங்குப் பிரதான சாலை,
மூர்வீதி, மன்னார்.

(8587)

சின்னையா சிவபாலன்,
கோண்டாவில்


# பிரதிப் பாதுகாப்புச் செயலாளர் நியமனம்



(கொழும்பு)

தற்காலிக பிரதிப் பாதுகாப்புச் செயலாளராக துசித்த வனிகசிங்க நிமிக்கப்பட்டுள்ளார்.

பாதுகாப்பு செயலாளராகக் கடமையாற்றிய ஹேமசிறி பெர்னாண்டோ தனது இராஜினாம கடிதத்தை ஜனாதிபதிக்கு கையளித்ததை அடுத்து துசித்த வனிகசிங்க பிரதிப் பாதுகாப்புச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தொடர் குண்டுத்தாக்குதல் தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் அறிவித்திருந்தும், இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு அறிவிக்காமையின் காரணமாக பாரிய விளைவுகள் ஏற்பட்டன.

இந் நிலையில் பொலிஸ்மா அதிபரையும் பாதுகாப்புச் செயலாளரையும் பதவி விலகுமாறு எழுந்த அழுத்தங்களினாலேயே பாதுகாப்புச் செயலாளராகவிருந்த ஹேமசிறி பெர்னாண்டோ தனது இராஜினாமா கடிதத்தை ஒப்படைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)


## மரண அறிவித்தல்

## அமரர் லட்சுமி நல்லையா



யாழ். புங்குடுதீவு 8 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் நாவலர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட லட்சுமி நல்லையா அவர்கள் 23.04.2019 செவ்வாய்க்கிழமை அன்று யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்- தெய்வானைப் பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ் சென்றவர்களான கணபதிப் பிள்ளை- இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற நல்லையா அவர்களின் அன்பு மனைவியும் தர்மபாலன் (முன்னாள் அதிபர் புங்குடுதீவு மகா வித்தியாலயம்), காலஞ்சென்ற மஞ்சுளா மற்றும் சியாமளா, பிரேமளா, கிருஷ்ணபாலன் ஆகியோரின் அன்புத் தாயாரும்,

காலஞ்சென்றவர்களான நடராஜா, தர்மலிங்கம் மற்றும் நல்லதங்கம் சிவபாக்கியம், ராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான அன்னம்மா, முத்தாச்சி, பூமணி, கந்தையா ஆகியோரின் அன்பு மைத்துனியும், மதிவதனராணி, கிருபானந்தவாரி (அம்பிகாவதி), தியாகராஜா (முனீஸ்வரா கபே), காலஞ்சென்ற தவராஜா மற்றும் வித்யா ஆகியோரின் அன்பு மாமியாரும், பவித்திரன், பவித்திரா, நிரோஜிதன்- சாமினி, நிருசாந்- நுஜி, சிந்துஜன், ஜனனி, நிரூபன், தர்ஷன், துஷாரா, பிரசாந் (இந்திரா ஹாட்வெயார்), சஜன், , லோஜிதா, ரவீன், ஷெய்லி, ஷாயா ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஜூடிஷ்ரன், நிஜோரா, ஆரியன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை நாளை 28.04.2019 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் கோம்பையன் மணல் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(8586)

தகவல்:- குடும்பத்தினர்.
தர்மபாலன்(மகன்)
இல. 258/2, நாவலர் வீதி,
இலுப்பையடிச் சந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 221 9718
077 673 1018



## கரவெட்டி பிரதேச செயலர் பிரிவு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

பதிவு இல.NJ/41
பதிவுத் திகதி- 28.12.2001
பதவி வெற்றிடம்
பதவி: எழுதுனர்
குறியீட்டு இல. 302/16
சம்பள அளவுத்திட்டம்- 13160-105×10-115×10-15360
பால் :- ஆண்/ பெண்

பூரணப்படுத்தப்பட்ட சுயவிபரத்துடன் விண்ணப்பத்தை 04.05.2019 ஆம் திகதிக்கு முன்னர் தலைவர், கரவெட்டி பிரதேச செயலர் பிரிவு, கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம், நாவலர்மடம், கரவெட்டி எனும் முகவரிக்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்கின்றோம். (சி-6216)

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவு,
கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்,
நாவலர்மடம் கரவெட்டி.

தலைவர்
திரு. வ.கணேசமூர்த்தி


## இராசி பலன்

**மீனம்:** பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் கைகூடும், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு.

**மேடம்:** யோகமான நாள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைக்கலாம், புதிய முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள்.

**இடபம்:** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் ஏற்படலாம், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடங்குவீர்கள், நல்லவர்களை சந்தித்து நலம் காணும் நாள்.

**மிதுனம்:** வரவைக் காட்டிலும் செலவு கூடும், வேலைச்சுமை அதிகரிக்கும் நாள், கவலைகள் தீர பரம்பொருளை வழிபட வேண்டிய நாள், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது.

**கும்பம்:** சாப்பிடக் கூட நேரமில்லாமல் சில வேலைகளைச் செய்யும் சூழ்நிலை ஏற்படலாம், பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கடகம்:** நீண்ட நாளைய நண்பர் ஒருவரின் சந்திப்பு இடம் பெறலாம், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, கௌரவமான நாள்.

**மகரம்:** ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, பயணத்தால் பலனுண்டு, உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**சிம்மம்:** பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், மறைமுக எதிர்ப்புகள் மாறும், தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும்.

**தனுசு:** கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் கிட்டும், குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு.

**விருச்சிகம்:** பொதுவாழ்வில் புகழ் கூடும், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும், காரிய அனுகூலமுண்டு, வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**துலாம்:** செல்லும் இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், வாகன சுகமுண்டு, கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள்.

**கன்னி:** மன நிறைவு கூடும் நாள், பல நாட்களாக தள்ளிப் போட்ட காரியமொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

கிரகநிலை: சுக், | சூரி,புத | செவ் | ராகு | சந் | சனி, குரு, கேது,

சந்திராஷ்டமம்: பூசம்

27.04.2019
சித்திரை 14, சனிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு
அட்டமி முன்னிரவு 7.04 மணிவரை
திருவோணம் பின்னிரவு 3.52 மணிவரை
சுபநேரம் 2.59-4.29 மணிவரை
இராகுகாலம் 8.59-10.29 மணிவரை
நடேசர் அபிஷேகம்

வளவன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மூன்று மாதங்களில் 210 நோயாளர்கள்

# யாழில் வேகமாகப் பரவும் உண்ணிக் காய்ச்சல்

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

**யாழ்.மாவட்டத்தில் தைபஸ் காய்ச்சல் (உண்ணிக் காய்ச்சல்) வேகமாகப் பரவி வருவதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் சுகாதாரக் கல்விப் பிரிவு எச்சரித்துள்ளது.**

யாழ்.குடாநாட்டில் கடந்த மூன்று மாதங்களுக்குள் 210 நோயாளர்கள் இனங்காணப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டதாக அந்தக் கல்விப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த உண்ணிக் காய்ச்சல் விலங்குகள் மூலமாக மனிதனுக்குப் பரவுகின்றது.

(ரிக்கற்சியே) எனும் ஒருவகை பக்றீரியா தெள்ளு, உண்ணி மூலம் பரவுவதோடு நாய், பூனை, எலி, மாடு ஆகிய பிராணிகளோடு ஒட்டி வாழ்கின்றது.

இக் காய்ச்சல் ஏற்படும் போது நிகழும் அறிகுறிகளாக காய்ச்சல், தலையிடி, உடலின் மறைவான இடங்களில் ஏற்படும் தழும்புகள், உடல் பலவீனம், இருமல், 5-7 நாட்களில் தோன்றும் செந்நிறப்புள்ளிகள் ஆகியன இதன் அறிகுறிகளாகத் தென்படும்.

இவ் உண்ணிக் காய்ச்சலில் இருந்து பாதுகாப்பதற்கான முன்னாயத்த நடவடிக்கையாக வீட்டில் வளர்க்கும் பிராணிகளை தொலைவில் கட்டி வைத்தல், பற்றைகளை வெட்டுதல், வளர்ப்புப் பிராணிகளை தொட்டால் சவர்க்காரம் போட்டு குளித்தல், வளர்ப்புப் பிராணிகளை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்துதல் ஆகிய வழிமுறைகள் மூலம் உண்ணிக் காய்ச்சலைக் கட்டுப்படுத்த முடியுமென அப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (இ-10)

# நல்லை ஆதீனத்தில் ஓம்சாந்தி யாக பூஜை

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் அமைதிக்காகவும் அண்மையில் நாட்டில் ஏற்பட்ட துன்பியல் நிகழ்வால் மரணித்தவர்களுக்கும் இன்று முற்பகல் 10 மணிக்கு நல்லூர் கோவிலில் ஆத்மசாந்தி பூஜையும் அதனைத் தொடர்ந்து நல்லை ஆதீனத்தில் வணக்கத்துக்குரிய ஆதீனம் சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் மற்றும் யாழ்.மாவட்ட சின்மயா மிஷன் சிதாகாசானந்தா சுவாமிகள் ஆகியோர் பிரசன்னத்துடன் சிவஸ்ரீ இராஜேஸ்வர சுகுமாரக் குருக்களின் தலைமையில் நல்லை ஆதீனத்தில் ஓம் சாந்தி யாக பூஜையும் நடைபெறும்.

இந்நிகழ்வில் யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் ச.பாலச்சந்திரன் மற்றும் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொன்.பாலசுந்தரம்பிள்ளை மற்றும் கல்வியியலாளர்கள், சமூகவியலாளர்கள், சமயப்பெரியார்கள் கலந்து கொள்வர் என யாழ். நண்பர்கள் அமையம் அறிவித்துள்ளது. (இ)

# அச்சுவேலி கைத்தொழில் பேட்டை அபிவிருத்திக்கு 100 மில்.ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி கைத்தொழில் பேட்டையை மேலும் அபிவிருத்தி செய்யும் நோக்கில் வர்த்தக மற்றும் வாணிப அமைச்சின் கீழ் இயங்கும் இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையால் 100 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

2018-2019 வரையான காலப் பகுதியில் இடம்பெறும் அபிவிருத்தி வேலைப்பாடுகளை வினைத்திறனாக்குவதற்கும் கைத்தொழில் முயற்சியாளர்களை கவரும் நோக்கில் இத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

இத்திட்டத்தில் 25 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழிலாளர்களை ஊக்குவிப்பதற்காக அவர்களின் உற்பத்தி நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படும் மின் சாதனங்களுக்கான மின் சிட்டை வரிக்கு 50 வீத மானியம் வழங்கப்பட்டது.

மேலும் கைத்தொழில் பேட்டையில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களைக் கொண்டு செல்வதற்கும் உற்பத்தி நடவடிக்கையின் போது வெளியேற்றப்படும் கழிவுகளை வெளியேற்ற வடிகால் வசதிகளும் ஏற்படுத்தப்படும்.

மேலும் கைத்தொழில் மையத்தை சூழவுள்ள பகுதிகள் மற்றும் தொழிற்சாலை உள்ளகப் பகுதிகள் வரை மின் இணைப்புச் செய்வதற்காக 75 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது.

எனவே இத்திட்டத்தின் மூலம் சிறந்ததொரு கைத்தொழில் ஊக்குவிப்பு மையத்தை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கையில் திட்டங்கள் யாவும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

# கடவுள் சுவாமிகளின் 114வது ஜெயந்தி தினம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் உடுவில் கிழக்கு மௌனகுரு சிவஸ்ரீ முருகுப்பிள்ளை சுவாமிகளின் (கடவுள் சுவாமிகள்) 114 ஆவது ஜெயந்தி தின விழா நாளை 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் தொண்டைமானாறு செல்வச் சந்நிதியான் ஆலயத்தில் நடைபெறும். இதில் பஜனை, ஆன்மீகச் சொற்பொழிவு என்பன இடம்பெறும். (இ-5)

## தனியார் பேருந்து சங்கங்களிடமும்

# பேருந்து தரிப்பிட வாடகையை நகர சபை அறிவிட வேண்டும்

(சாவகச்சேரி)


தூர சேவை நடத்தும் தனியார் பேருந்து சங்கங்களிடமும் சாவகச்சேரி பேருந்து தரிப்பிடத்திற்கான வாடகையை நகரசபையினர் அறவிட வேண்டுமென நகரசபை உறுப்பினர் க.கஜிதன் வலியுறுத்தியுள்ளார். அண்மையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

ஆட்டோ சங்கம், இ.போ.ச. மற்றும் உள்ளூர் தனியார் பேருந்துச் சங்கங்கள் நகரசபையிடம் பேருந்து தரிப்பிடத்திற்கான வாடகையைச் செலுத்தியே தரிப்பிடத்தைப் பயன்படுத்துகின்றன.

அதுபோலவே தூர சேவை நடத்தும் தனியார் பேருந்து சங்கங்களும் வாடகையைச் செலுத்தியே தரிப்பிடத்தைப் பயன்படுத்த வேண்டும். இ.போ.சபையினர் சாவகச்சேரி நகரசபைக்கு பேருந்து தரிப்பிடத்திற்கான வாடகையை 12 வருடங்களாகச் செலுத்தாமல் இழுத்தடிப்புச் செய்த நிலையில், கடந்த வருட இறுதியில் சபை உறுப்பினர்களின் முயற்சியால் 12 வருட வாடகைப் பணமும் ஒரே தடவையில் செலுத்தப்பட்டதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-30)




## சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



(யாழ்ப்பாணம்)

ஓய்வுநிலை தபாலதிபர் நா.குகநேசன் அகில இலங்கை சமாதான நீதவானாக கடந்த புதன்கிழமை யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதி அ.பிறேம்சங்கர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

காரைநகரை பிறப்பிடமாகவும் நல்லூர் முத்துவிநாயகர் வீதியை வதிவிடமாகவும் கொண்ட இவர் காரைநகர் வலந்தலை கிழக்கு அ.மி.த.க.பாடசாலை, யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, யா/காரைநகர் இந்துக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவனுமாவார்.

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் காப்பாளராகவும் சமய, சமூகத் தொண்டுகளிலும் ஈடுபட்டு வருகிறார். (இ-5)

# தொழில் வாய்ப்பற்றிருக்கும் இளைஞர்,யுவதிகள் பதிவு

(சாவகச்சேரி)

யாழ்.மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் சாவகச்சேரி, கோப்பாய் பிரதேச செயலகங்களும் மாவட்ட தொழில் நிலையமும் இணைந்து ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவினூடும் தொழில் வாய்ப்பற்றிருக்கும் இளைஞர், யுவதிகளைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் நாளை மறுதினம் 29 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 3.00 மணிவரை அந்தந்த கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் இடம்பெறவுள்ளது.

பதிவு செய்யும் தொழிலற்ற இளைஞர், யுவதிகளுக்கு அரச தனியார் துறைகளில் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்தல்,தொழில் பயிற்சி வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்தல், சுயதொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல், பரீட்சைகளுக்கான வழிகாட்டல் செயலமர்வுகளை நடத்துதல், உயர் கல்வி வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்தல்,தொழில் வழிகாட்டல் ஆலோசனைகளை வழங்குதல், தொழில் வெற்றிடங்கள் தொடர்பான தகவல் வழங்குதல்,உளவியல் ஆய்வினூடாக தனித் திறமைகளை வெளிக்கொண்டு வருதல் போன்ற சேவைகள் தொடர்ச்சியாக வழங்கப்படவுள்ளன.

எனவே தொழில் வாய்ப்பற்றிருக்கும் அனைத்து இளைஞர், யுவதிகளும் இவ் வாய்ப்பினை தவறாது பயன்படுத்திக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

0212219359 என்ற தொலைபேசி இலக்கத்துடன் மாவட்ட தொழில் நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-14)

# சமாதானத்தை கட்டியெழுப்ப சகலரும் ஒன்றிணைவோம்

## இந்துமத குருமார் ஒன்றியம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

நாட்டில் தற்போது இடம்பெறுகின்ற, இடம்பெற்ற பதற்றமான சூழ்நிலையில் சகல இன மக்களும் பொறுமை, சகிப்புத்தன்மை என்கின்ற உயரிய பண்புகளைப் பின்பற்றி வாழ வேண்டுமென சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அன்பு, பரஸ்பரம் நம்பிக்கை ... செலுத்தும் உயர்வான தர்மத்தால் நாட்டில் நிலையான சமாதானத்தைக் கட்டியெழுப்ப, சகலருக்கும் இறையருள் கிடைக்க எல்லாம் வல்ல பரம்பொருளை வேண்டி நிற்கின்றோம் என சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத் தலைவர் கு.ஜெகதீஸ்வரக்குருக்கள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். (இ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் பதவி வெற்றிடங்கள்

யாழ்ப்பாணம் கல்வி வலயத்திற்குட்பட்ட பின்வரும் பாடசாலைகளில் அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.யா/ இளையதம்பி இந்து வித்தியாலயம் -வகை II

2.யா/ நீர்வேலி சி.சி.த.க பாடசாலை -வகை III

**தகைமைகள்**

வகை II பாடசாலைகளுக்கு இலங்கை அதிபர் சேவை தரம் 2 உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இலங்கை அதிபர் சேவை தரம் -2 உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறாதவிடத்து அல்லது தெரிவுகள் இடம்பெறாதவிடத்து இலங்கை அதிபர் சேவை தரம் -3 கவனத்தில் கொள்ளப்படும்.

வகை III பாடசாலைகளுக்கு இலங்கை அதிபர் சேவை தரம் 3 ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து மாத்திரம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- விண்ணப்பிக்க விரும்புபவர்கள் விண்ணப்ப முடிவுத் திகதியில் ஆகக் குறைந்தது மூன்றாண்டு காலம் சேவையாற்றக் கூடிய வயதெல்லை உடையவராக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரி தற்போது அதிபராக கடமையாற்றும் பாடசாலையில் 3 வருட கால சேவையை நிறைவு செய்திருந்தால் மட்டுமே விண்ணப்பிக்க முடியும் பொருத்தமான அதிபர் தரத்தினை உடைய பாடசாலையை சேவை நிலையமாக கொண்டிராதவர்களுக்கும் உதவி, பிரதி அதிபராகக் கடமையாற்றும் அதிபர் சேவையை சேர்ந்த வர்களுக்கும் இந்நிபந்தனை பொருத்தமற்றது.

குறிப்பு: மேற்படி பதவிகளுக்கு யாழ்ப்பாண கல்வி வலயத்தைச் சேர்ந்தவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிக்க விரும்புவோர் மாதிரி விண்ணப்பப் படிவத்தை வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று பூரணப்படுத்தி பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 2019.05.11 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் "வலயக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம் , செம்மணி வீதி , நல்லூர்" எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "அதிபர் பதவிக்கான விண்ணப்பம் - 2019" எனக் குறிப்பிடவும் என யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா அறிவித்துள்ளார். (இ)

# இந்து ஆலயங்களுக்கும் பாதுகாப்பு வேண்டும்

(கொழும்பு)

கொழும்பு உள்ளிட்ட நாட்டிலுள்ள இந்து ஆலயங்களுக்கும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்புக்களையடுத்து நாட்டிலுள்ள கிறிஸ்தவ தேவாலயங்களுக்கு பொலிஸாரும் படையினரும் பாதுகாப்பு வழங்கி வருகின்றனர். இதேபோன்று முஸ்லிம் பள்ளிவாசல்களுக்கும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்து ஆலயங்களில் தொடர்ச்சியான பூசை வழிபாடுகள் இடம்பெறுவதனால் அங்கும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் ஆலய தர்மகர்த்தாக்கள் அரசியல் தலைவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தனவின் இணைப்புச் செயலாளருடன் நேற்று முன்தினம் கலந்துரையாடியதாகவும் அதற்கான ஏற்பாடுகளை அமைச்சருடன் கலந்துரையாடி மேற்கொள்வதாக அவர் உறுதியளித்துள்ளதாகவும் முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினரும் தமிழர் பணிக்குழுவின் தலைவருமான நல்லையா குமரகுருபரன் தெரிவித்தார். (இ-7)


**UNIVERSITY OF JAFFNA, SRILA**

**ACCELARATING HIGHER EDUCATION EXPANSION AN**

**OPERATION – WORLD BANK PRO**

**VACANCIES**

The University of Jaffna, Sri Lanka will entertain applications for the under mentioned posts from suitably qualified persons up to 15th May 2019 for the Development Oriented Research Project (DOR), Faculty of Engineering, Kilinochchi under the Accelerating Higher Education Expansion and Development (AHEAD) Operation implemented of the Ministry of City Planning, Water supply and Higher Education and the University Grants Commission.

The aim of this DOR project is to develop a novel, energy-positive wastewater treatment coupled with microalgae cultivation. The selected candidates are expected to involve in the development of bioreactors, indoor/outdoor testing of microalgae cultivation, microalgae derived bio-lipid production and mathematical modeling of bioprocesses.

**1.RESEARCH ASSISTANT - 01 POST - ON CONTRACT**

**REQUIRED QUALIFICATIONS AND EXPERIENCE**

1. Bachelor's Degree in Science, Engineering, and Agriculture OR related fields which is recognized by the UGC. Priority will be given to special degree or first class honors
2. A track record of research as evidenced by publications/ presentations as an undergraduate or post graduate would be an added advantage.
3. Prior research experience pertinent to Gas chromatography AND/OR Analytical chemistry is desirable

**Age :** Not more than 35 years

**PROFESSIONAL COMPETENCIES REQUIRED**

- High level of proficiency in written and spoken English.
- Ability to function effectively in a team environment inspiring trust and cooperation of other team members.
- High level of IT literacy, especially in the areas of Word, Excel, email and internet.
- Knowledge in statistics and computational methods
- Knowledge in basic microbiology
- Proven analytical skills
- Ability to work independently in a research team
- Ability to solve technical and methodological issues that arise during the course of the research

**2. RESEARCH ASSISTANT cum PROJECT ASSISTANT - 01POST - ON CONTRACT**

**REQUIRED QUALIFICATIONS AND EXPERIENCE**

1. Bachelor's Degree in Science, Engineering, and Agriculture OR related fields which is recognized by the UGC. Priority will be given to special degree or first class honors
2. A track record of research as evidenced by publications/ presentations as an undergraduate or post graduate would be an added advantage.
3. Prior research experience pertinent to bioreactors is desirable

**Age :** Not more than 35 years

**PROFESSIONAL COMPETENCIES REQUIRED**

- High level of proficiency in written and spoken English.
- Proven ability to handle Operation activities related to Finance and Procurement activities in the University in accordance with the World Bank Guidelines.
- Ability to function effectively in a team environment inspiring trust and cooperation of other team members.
- High level of IT literacy, especially in the areas of Word, Excel, email and internet.
- Ability to communicate effectively orally in Sinhala or Tamil.
- Ability to communicate in English with the World Bank, Ministry of City planning, Water supply and Higher Education, UGC, OMST and others.
- Knowledge in statistics and computational methods
- Proven analytical skills
- Ability to work independently in a research team
- Ability to solve technical and methodological issues that arise during the course of the research

**REMUNERATION AND OTHER CONDITIONS**

**RESEARCH ASSISTANT**

- A monthly payment of LKR 55,000/= (inclusive of CLA) and applicable EPF & ETF will be paid.

**RESEARCH ASSISTANT cum PROJECT ASSISTANT**

- A monthly payment of LKR 70,000/= (inclusive of CLA) and applicable EPF & ETF will be paid.

**OTHER BENIFTS** : Selected candidate can register for MPhil with University of Jaffna and the Registration fee for MPhil Programme will be covered by the the project depending on the candidate's eligibility.

**CONTRACT PERIOD**: This is a full-time position. Initially the contract appointment shall be for a period of 12 months. The position may be renewed based on performance and need during the period of the Operation.

**METHOD OF RECRUITMENT**: By interview. Successful candidate should be able to start work immediately.

**CONDITIONS OF SERVICE**

Selected candidates if presently serving in a Government Department/ Corporations/ Statutory Boards will have to obtain his/ her release through their respective appointing authority.

**HOW TO APPLY**

Applicants who are interested in the above posts are requested to submit their application through E-mail to ots@univ.jfn.ac.lk in the prescribed form available in the University of Jaffna website www.jfn.ac.lk. Originals should be submitted at the interview. Date for interview will be notified to the eligible candidates through E-mail.

NOTE: Applicants in the Service of Government, Corporations and Statutory Board can submit their application directly. When they present for the interview they should bring a hardcopy forwarded through the Head of Institution concerned.

**Please refer University Website for further information.**

**REGISTRAR**

(C-6219)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்–170

## தரமான கல்வி: சிந்திக்க சில விடயங்கள்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

இந்த தலைப்புக்கும் பசுமைப்புரட்சிக்கும் என்ன சம்பந்தம் என நீங்கள் நினைக்கலாம். ஏன் இல்லை என்பதற்கான விடயம் வலுவாக இருக்கின்றது. அதனால் இதனை மையப்படுத்தியிருக்கின்றேன். இனியொரு பசுமைப்புரட்சி தரமானதாக எதனையும் செய்யத்துடிக்கின்றது எனலாம். அதிலும் தரமான விதை, தரமான உள்ளீடுகள், தரமான அவசியமான தொழில்நுட்பம், தரமான உற்பத்தி, தரமான பொதிசெய்தல், எதிர்பார்த்த தரமான சந்தை வாய்ப்பு இவற்றுக்கும் மேலாக தரமான விவசாய கல்வி இவ்வாறாக பல விடயங்களுள் கவனத்தைச் செலுத்த வேண்டியிருக்கின்றது. மேலும் இந்த அறிவைக் கொடுக்கும் அனைத்து கல்வியும் தரமானதாக (**Quality Education**) இருந்தால் மட்டுமே நாம் மேற்கூறியவை பற்றி சிந்திக்கலாம். செயற்படலாம். அவ்வாறாயின் தற்போதுள்ள கல்வி தரமானதாக இல்லையா? என்னும் வினாவும் எழுகின்றதல்லவா?

இவ்வருடத்தின் மார்ச் மாதம் எமது நாட்டில் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவின் (**University Grants Commission**) அனுசரணை யுடன் தரமான கல்வியை உலகளவில் நிர்ணயஞ் செய்கின்ற நிறுவன இணையத்தின் உலகளாவிய மாநாடும் (**Interna tional Networking of Quality Assurance Agencies for Higher Education - INQAAHE**) ஆசிய பசுபிக் நாடுகளுக்கிடையில் உள்ள தரமான கல்வியை நிர்ணயஞ்செய்கின்ற ஆணையத்தின் உலகளாவிய மாநாடும் (**Asia Pacific Quality Network - APQN**) பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடத்தப்பட்டன. இம் மாநாடுகளில் 50 நாடுகளுக்கு மேலான பிரதிநிதிகள் பங்கெடுத்தமை சிறப்புக்குரியதாகும். இவ்வாறான தரமான கல்வி பற்றிய உலகளாவிய மாநாடுகள் எமது நாட்டில் நடைபெற்றமையினால் இங்குள்ள பல் கலைக்கழகங்களிலும் உயர் கல்வி நிலையங்களிலும் தரமான கல்வி பற்றி எமது கல் வியியலாளர்கள் மற்றும் விரிவுரையாளர்களும் அறிந்து கொள்வதற்கான அரிய வாய்ப்பாக அமைந்திருந்தது. **INQAAHE** மாநாட்டின் கருவாக அமைந் தது "நம்பிக்கையை கட்டியெழுப்புதலாகும் (**Trust Building**)". தரமான கல்வியில் நம்பிக்கையை கட்டியெழுப்புதலென்பது மிக முக்கியமான விடயமாக கருத்திற் கொள்ளவேண்டியதாகின்றது. நம்பிக்கையை எப்படி கட்டியெழுப்புவது? தற்போது எமது சமூகத்தில் நம்பிக்கையை கட்டியெழுப்புதல் என்பது விமர்சனத்திற்குரியதும் விழிப்புக்குரியதுமாகும்.

வடமாகாண கல்வி பற்றி பல குறைகளும் நிறைவுகளுமாக விமர்சனத்திற்குள்ளாகி இருக்கின்ற நிலையில் தரமான கல்வி பற்றிய சில குறிப்புக்களை இந்த இடத்தில் பதிவு செய்வது பொருத்தப்பாடானதாக இருக்கும் என எண்ணுகின்றேன். நாம் சிறந்திருக்கின்றோமா அல்லது தாழ்ந்திருக்கின்றோமா என்னும் தர்க்கத்திலேயே பலர் மும்முரமாக ஈடுபட்டுக்கொண்டிருப்பதனை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. தர்க்கத்தில் ஈடுபட வேண்டும் என்பதில் மாற்றுக்கரு த்து எதுவுமில்லை. குறைகளை களைவது பற்றி நிச்சயமாக தர்க் கிக்க வேண்டும். ஆனால் தர்க் கிப்பவர்கள் பலர் தாங்கள் என்ன செய்து கொண்டிருக்கின்றார்கள். தங்களது பக்கத்து நியாயத்தை முன்வைக்க முன்னர் தங்களது பங்களிப்பு என்ன? என்ன செய்திருக்கின்றார்கள் என பார்த்தால் அவர்களுக்குள்ளேயே இதற்கான விடை கிடைத்துவிடும். அப் படியாக தாங்கள் பெரிதாக செய்ததற்கு என்று ஒன்றுமேயில்லை என்பதாக முடிந்து விடும். வாய்ச் சொல்லில் நாம் அனைவரும் வீரரடி என்பது தானே எம்மவர்களுக்கு மிகப் பொருத்தமான சொற்பதமாக அமைந்திருக்கின்றது. பாட்டெழுதி பெயர் வாங்கும் புலவர்களுக்கு மத்தியில் குற்றங்கண்டே.. பரிசு வாங்குபவர்களும் இருக்கவே செய்கின்றார்கள் என்பது தான் மனதை நெருடும் செய்தியாகும். கல்விப்புலம் சார்ந் தவர்கள் அனைவரும் உத்தமர்களாகவே இருந்திருந்தால் அவர்களின் சமூகத்திற்கான அக்கறை முழுமையானதாக இருந்திருந்தால் நிச்சயமாக வடமாகாணம் இலங்கையில் முதன்மை மாகாணமாக வந்திருக்கும், வரும். ஆனால் ஒவ்வொருவரின் பணியும் ஏதோ ஒன்றை செய்தால் போதுமானது என்பதோடு மட்டுப் படுத்தப்பட்டிருப்பதும் அதையும் மீறி ஆசிரியத் தொழிலுக்கான அர்ப்பணிப்பினை முழுவதுமாக செய்யாததும் வடமாகாணத்தின் தேவைபற்றியும் அங்குள்ள மாணவர்கள் மற்றும் ஆளணி பற்றியும் போதுமானளவிற்கு அலசி ஆராயாததும் இவற்றுக்கான அடிப்படைக் காரணங்களாக நாம் இனங்கண்டு கொள்ளலாம். சுருக்கமாக "கற்க கசடற கற்றவை கற்றபின் நிற்க அதற்குத்தக" என எடுத்துக்கூறிய வள்ளுவப் பெருந்தகையின் கூற்று சிறப்பாகவே தரமாக கல்வியை விளக்கியிருப்பதனை காணலாம். கற்றதனாலாய பயனை ஒருவர் பெறுகிறார் என்றால் அதுவே தரமான கல்விமுறையின் வெற்றியெனலாம். தரமான கல்வி பற்றி வள்ளுவப் பெருந்தகை திருக்குறளில் பலநூறு ஆண்டுகளுக்கு முன்னர் எடுத்துக்கூறியதை உலக வங்கி திட்டங்களுக்குள்ளாக தற்போது நாம் மீட்டுப்பார்க்கும் நிலைக்குள் வந்திருப்பது தான் வேடிக்கையாகவும் விந்தையாகவும் இருக்கின்றது.

மாறாக முன்னைய காலங்களில் இருந்த அதிபர்கள், ஆசிரியர்கள் போல அதே கண்டிப்பு, அதே அர்ப்பணிப்பு, கடமையின் பால் கொண்ட ஈர்ப்பு, ஆளுமை, தலைமைத்துவம் (**Leadership**), பொறுப்புக்கூறல் (**Accountability**) என்பன தற்போது எதிர்பார்த்த அளவுக்கு இல்லை என்னும் குற்றச்சாட்டுக்கும் அப்பால் இன்றும் தங்களை ஆசிரியத் தொழிலில் முழுமையாக அர்ப்பணித்து தங்களையே உருக்கி மாணவர்களை நாட்டின் தலைசிறந்த முன் மாதிரியாக உருவாக்கும் ஆசிரியர்களும் ஆங்காங்கே இருக்கின்றார்கள். ஆனால் அவர்களை முழுமையாக இனங்காண இச்சமூகமும் கல்வித்துறையும் தவறிவிடுகின்றது. சிறந்த தலைவர்களாக அதிபர்கள், தலைமை ஆசிரியர்கள் இன்னும் பொறுப்புடைய ஆசிரியர்களை கொண்டதாக வடமாகாணமும் இருந் திருக்கின்றது இன்னமும் இருக் கின்றது. ஆதலால் எடுத்த மாத்திரத்தில் ஆசிரியர்கள் அனைவரும் பொறுப்பற்றவர்கள், எதுவுமே செய்யாதிருப்பவர்கள் என கருதக்கூடாது. உண்மையாக உழைப்பவர்களை இது நோக டிக்கச் செய்யும். தம்மையே அர்ப் பணித்து மாணவர்களை உயரவைக்கும் ஆளுமைகளை எதற் கும் துணிந்து முடிவெடுக்கும் தனித்துவத்தைக் கொண்டு ஆர்ப்பரிக்காது அமைதியாக இருக்கும் ஆசிரியர்களை எமது சமூகம் கண்டு கொண்டதில்லை. அரசியல் பலமும் ஆதிக்கமும் கொண்ட தாக மாற்றங்கண்டுள்ள இச்சமூ கம் பொருத்தமானவர்களை சரியான இடத்தில் இருத்திப் பார்த்ததுமில்லை. அதனால் தன் னையே தாழ்த்திக் கொண்டுள்ள தனை உணர்ந்ததுமில்லை. ஆசிரியர்கள் அரசியல் கற்பிக்கலாம் ஆனால் அரசியல் ஆசிரியத்துவத்துக்குள் வந்தேறக்கூடாது. ஆசிரியர் எப்படியிருக்க வேண்டும்,எப் படிக் கற்பிக்க வேண்டும்,எப்படி வாழ வேண்டும் என்பதனை அரசியல் கற்பிக்கக்கூடாது. ஒரு காலத்தில் ஆசிரியத்துவத்தினை முழுமையாக மதித்திருக்கின் றோம் என்றால் அது ஆசிரியத்து வத்தின் முழுமையான வெளிப்பாட்டின்பிரதிபலனே தவிர வேறேதுவுமில்லை. தன்னுடைய திறமையை முன்னகர்த்தி உயராமல் எப்படியும் எவரைப்பிடித்தும் முன்னேறும் எண்ணம் கொண்ட ஒருவர் எப்படி முன்மாதிரியான உயர்வான ஆசிரியராக கருதப் பட முடியும். தரமான கல்வி முறை பற்றி விமர்சிக்கும் போது அத னைக் கற்பிப்பவர்களின் தரத்தைப் பற்றியும் கவனத்தில் கொள்ள வேண்டும் அல்லவா. ஆசிரியர் மாணவர் உறவுமுறை என்பது தூய்மையானதும் களங்கமற்றதுமாக இருக்க வேண்டும். இந்த உறவு முறையில் தவறு நேர்கி ன்றது என்றால் அதற்கு ஆசிரியர் முழுப்பொறுப்பும் ஏற்க வேண்டும். நேர்மையாக, தூய்மை யானவராக கற்றல் கற்பித்தல் என்பதனை சரிவர செய்கின்ற ஆசிரியர் எந்தப்பிரச்சினைக்கும் உள்வர வாய்ப்பே இல்லை. மாறாக குடித்து கும்மாளமிடும் ஆசிரியர் ஒருவர் எப்படி தனது மாணவரை திருத்த முடியும். திருத்துவதற்கு அருகதையுள்ளவர் ஆவார்? ஆசி ரிய மாணவர்களாக கல்வி கற்பவர்கள் முதுகல்வி கற்கும் போது தமது வரவை 40 சதவீதத்தில் வைத் துக்கொண்டு பாடசாலைக்கு மாணவர்கள் முழுமையாக வர வேண்டும் என எப்படி எதிர்பார்ப்பார்? ஆசிரியர் என்பவர் புனிதனாக முழுமையாக வாழ வேண்டும். அவர் பேச்சு, நடை, பணிவு, ஒழுக்கம், சிந்தனை, பார்வை, பொறுப்பெடுத்தல், இறைபக்தி என்பனவற்றிற்கு உதாரணமாக வாழ்ந்து காட்டவேண்டும். எப்படியும் இருந்து விட்டு கல்வியில் தலைமைத்துவத்தை ஏற்பதற்கு அவருக்கே அந்த தகுதியிருக்கின்றதா என பார்க்க வேண்டாமா? இதனை அப்படியானவர்களை தெரிவுசெய்யும் அறிஞர் குழாம் கருத்திலெடுக்க வேண்டாமா? தமக்கு எவர் வேண்டப் பட்டவரோ அவரை முன்னிறுத்தி தங்களுக்கு தேவையானவற்றை பூர்த்தி செய்து கொள்ளல்தான் தரமான கல்வியின் வெளிப் பாடோ? இப்படிப் பல வினாக்கள் எம்முன் எழுந்திருக்கின்றன. இவற்றுக்கு உடனடியாக பதில் சொல்ல கல்வித்தளம் இயலாதிருக்கின்றது என்பது தான் நிஜம். இதற்கு காலம் தான் பதில் சொல்லும்.

ஒரு காலத்தில் எமது நாட்டின் அனைத்து அமைச்சுக்களிலும் முக்கிய பொறுப்புக்களில் கோலோச்சிய எங்கள் மூளைகள் எங்கே? போர் நடைபெற்ற காலத்தில் கிடைத்ததை வைத்துக்கொண்டு புதிது புதிதாக கண்டுபிடித்து எந்த இடரையும் சமாளித்த வல்லமை கொண்ட அந்த மூளைகளும் எங்கே? புலம்பெயர்ந்து தங்களது கால்களை அயல்நாடுகளில் வலுவாக பதித்திருக்கும் இளஞ் சந்ததியின் ஊக்கம் எங்கே? அந்த மூளைகள் ஒன்றும் எங்கும் செல்லவில்லை. வடமாகா ணத்திலேயே இருக்கின்றன. புலம்பெயர்ந்தாலும் வடமாகாணத்தைப் பற்றி சிந்தித்துக் கொண்டேயிருக்கின்றன. வடமாகாண அபிவிருத்தி பற்றி பலர் கருத்துக் கூறுவதும் கூடியிருந்து கருத்தமர்வுகளை நடத்துவதும் எதையும் செய்துவிடாது என்பது எமது அனுபவத்தின் வெளிப்பாடு. முயற்சி என்பது அனைத்து மட்டங்களிலும் செய்யப்பட வேண்டும். இதற்கான திட்டமிடல்கள் கல்விக் கண்கரிசனையாயிருக் கின்ற அனைவருக்கும் பொருத்த மாக செய்யப்படல் வேண்டும். இல்லையில்லை இவ்வள்வும் சரியாக நடைபெறுகின்றதாயின் ஏன் க.பொ.த. சாதாரண தர மற்றும் உயர்தர பரீட்சைப்பெறுபேறுகள் எதிர்பார்த்த ளவில் இல்லை? காரணங்கள் பல இருக்கின்றன. அவை ஒவ்வொன்றையும் தனித்தனியாக அலசி ஆராய்ந்தால் எதிர்பார் த்த விடை கிடைக்கும்.

வடமாகாணத்திற்கு தற் போது தேவையானது தரமான கல்வி என்பதில் மாற்றுக்கருத்து ஏதுமில்லை. இதில் தரமான கல்வி என்பதனை எப்படி வரையறை செய்வது என்பது பற்றி [illegible] எமது தேவைகளைப் பூர்த்தி செய்யும் முழுமையான கல் வியை தரமான கல்வி எனலாம். கற்கின்ற எந்த கல்வியி னாலும் முழுமையான பயன்பாடு கிடைக்குமாயின் அதனை தரமான கல்விக் குள்ளே உள்ளடக்கிவிடலாம். இங்கேபயன் பாடு என்பதில் பல விடயங்கள் உள்ளடக்கப்பட் டிருக்கின் றன. தரமான கல்வி யினால் சமூகத்தில் சிறந்த பிரஜை யாக, தன்னுடைய தொழிலை, எதிர்காலத்தை இன்னும் வாழ்க்கையை சிறந்த முறையில் செப்பனிடக் கூடியதாக, பொருட்செல்வத்தை ஈட்டக்கூடியதாக, தங்களது வாழ்வாதாரத்தை பேணிப்பாதுகாக் கக்கூடிய வல்லமையுடையவராக சாந்தியும் சமாதானமு முடைய சமூகத்தை கட்டியெழு ப்பும் கற்களாக தமது முழு மையான வாழ்க்கையை வரையறை செய்பவராக உரு வாக்குவதே தரமான கல்வியின் பெறுபேறாகும். ஆனால் இவையனைத்தும் தற்போது இருக்கும் கல்விமுறைக்குள் நோக்கங்களாக அடையாளப் படுத்தப்பட்டிருந்தாலும் நாம் எதிர்பார்த்த விளைவு கிடைக்கப்பெறவில்லை. அந்த வகையில் தரமான கல்வியின் தேவைப்பாடு முழுமையாக உணரப்பட்டிருக்கின்றது.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 184

போட்டி நிறைந்த இந்த உலகில் மாணவர்களை போட்டிக்கு தயார்ப்படுத்தலிலேயே எமது கல்விமுறை முழுவதுமாக தனது சக்தியைச்செலவு செய்து கொண் டிருக்கின்றதேயன்றி மேற்கூ றப்பட்ட தரமான கல்வியின் அடிப்படையில் அல்ல. கறகின்ற கல்வியினால் பயனெதுவும் இல்லையென்றால் அந்த கல்விக்காக பல ஆண்டுகள் செலவழிப்பதன் தேவை என்ன என்னும் வினாவுக்கு நாம் அனைவரும் சரியான விடை கண்டாக வேண்டும். மாறாக எந்தக் கற்கை என்றாலும் அதனது முக்கியத்துவத்தை முழுமையாகப் புரிந்து கொண்டு அதன்படி கற்கைநெறி அமையுமாயின் அந்த கற்கையினை பெற்ற மாணவர்கள் தமது தொழில், வருமானம், சமூக அந்தஸ்து, மேற்கொண்டு முன்னேற்றம் என்பனவற்றை முழுவதுமாக அனுபவிப்பார்களாயின் அதனை தரமானதென வரையறுக்கலாம். தரமான மாணவர்களின் வெளிப்பாடும் அவர்களின் பங்களிப்பும் நாட்டின் மனித வளத்தை அதிகரிப்பதற்கு உறுதுணையாக இருக்கும்.

தமது சொந்த மொழிபேசி முன்னேறிய நாடுகளை சற்று அலசிப்பார்த்தால் ஜப்பான், சீனா, ஜேர்மன், பிரான்ஸ் இன்னும் அரேபிய நாடுகள் என பல முன்னணியில் இருப்பதற்காக காரணத்தையும் அதற்குள்ளாக அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்ட கல்விமுறை பற்றியும் அறிந்து நாமும் அதன்வழி எம்மை செப்பனிடுவது எமது நாட்டின் முழுமையான அபிவிருத்திக்கும் முன்னேற்றத்திற்கும் அது பெரிதும் உதவும். தாய்மொழிக்கு கொடுக்கப்படும் முக்கியத்துவத்தை இழந்து எமது கலை, கலாசாரம், பண்பாடு, விழுமியங்கள் இன்னும் வாழ்வியலை பிறமொழி கொடுக்கும் என எப்படி எதிர்பார்ப்பது?. விஞ்ஞான தொழில்நுட்பம் விரிந்து செல்லும் இப்பிரபஞ்சத்தில் மக்களின் இயல்பு வாழ்க்கைக்கும் அவர்களின் முன்னேற்றத்திற்கும் இந்த விஞ்ஞான தொழில்நுட்பத்தின் பயனை அடைவதற்கு அறிவியலாளர்கள், புலமையாளர்கள் உதவ வேண்டாமா? பிறமொழியிலுள்ளவற்றை தாய்மொழியாம் தமிழில் மாற்றி எமது மக்கள் அறிந்து கொள்வதற்கும் அதனை எம்மாலான கடமையாக உணரவேண்டாமா? தமக்குத் தெரிந்தவற்றை, அறிந்தவற்றை தாய்மொழியில் மொழிபெயர்க்க முடியாதிருப்பவர் தனது தாய்க்கு எதுவும் செய்யமுடியாத வாழாவெட்டியாகதான் இருக்க முடியும். முயன்று பாருங்கள். எமது சமூகத்தின் அபிவிருத்தி தானே எமது அபிவிருத்தியும், அதனை விடுத்து எங்கோ இருப்பவருக்காக நாம் எதற்காக எமது சக்தியையும் எமது பணத்தையும் செலவிட வேண்டும். எமது நாடு அழகான தேசம், அனைத்து வளங்களும் ஒருங்கிணைந்த இயற்கையாக அமைந்த தீவு. இங்குள்ள மக்கள் எம்மக்கள், இனிய உறவுகள், அனைவரும் சேர்ந்து இவ்வழகிய தீவினை உயர்வான நாடாக கல்வியில் சிறந்து பார் போற்றும் தேசமாக மாற்றவேண்டாமா? மாற்றம் முதலில் எம்முள் வேண்டும். அந்த மாற்றம் நிச்சயமாக சமூகத்தை உயர்த்தும் என்றோ ஒருநாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள் ஒழிப்புக்கு எதிரான நடவடிக்கையாக குண்டுத்தாக்குதல்!

## ஜனாதிபதி மைத்திரி சந்தேகம்



(கொழும்பு)

**போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பாக தாம் முன்னெடுத்துவரும் செயற்பாடுகளுக்கு எதிரான நடவடிக்கையாகக் கூட, நாட்டில் நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதல் இருக்கலாம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சந்தேகம் வெளியிட்டுள்ளார்.**

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகப் பிரதானிகளுடனான சந்திப்பின்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு சந்தேகம் வெளியிட்டார்.

மதப் பிரிவினைவாதத்திற்கும் போதைப்பொருள் கடத்தலுக்கும் தொடர்புள்ளதென குறிப்பிட்ட ஜனாதிபதி ஒருசிலரின் செயற்பாடுகளுக்காக அனைத்து முஸ்லிம்களையும் தவறாக நினைக்கக் கூடாதென்றும் வலியுறுத்தினார். அத்தோடு, முஸ்லிம்களுக்கு ஆதரவாக இருக்க வேண்டுமென ஏனைய மக்களைக் கேட்டுக்கொள்வதாகவும் தெரிவித்தார்.

குறிப்பாக இவ்விடயத்தை அரசியல் விவகாரமாக அரசியல் நலன்களுக்கு பயன்படுத்தாமல் சர்வதேச தீவிரவாதத்தின் தாக்கத்தை உணர்ந்து அனைவரும் செயற்பட வேண்டுமெனவும் ஜனாதிபதி கேட்டுக்கொண்டுள்ளார். (இ-7)

## குண்டுத்தாக்குதல்களில் உயிரிழந்தவர்களுக்கு சாவகச்சேரி பிரதேச சபையில் நேற்று அஞ்சலி





(யாழ்ப்பாணம்)

இலங்கையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை உயிர்த்த ஞாயிறு தினத்தில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களின் போது உயிர் நீத்தவர்களுக்கு சாவகச்சேரி பிரதேசசபையில் நேற்று வெள்ளிக்கிழமை காலை மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

சாவகச்சேரி பிரதேசசபையின் மாதாந்த அமர்வு நேற்று இடம்பெற்றது.

இதற்கு முன்னராக இந்த அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றுள்ளது. அத்துடன் குண்டுத் தாக்குதல்களின் போது காயமடைந்தவர்களும் விரைவாகக் குணமாக வேண்டுமென ஆண்டவனைப் பிரார்த்தித்தனர். இவ் அஞ்சலி நிகழ்வில் சாவகச்சேரி பிரதேசசபை தவிசாளர் க.வாமதேவன், பிரதேசசபை செயலாளர் மற்றும் சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர் (இ-30)

## தேடப்படுவோரில் அமெரிக்கப்பெண்ணின் படத்தைத் தவறாக வெளியிட்ட பொலிஸ்

(கொழும்பு)

குண்டுத்தாக்குதல் சந்தேக நபர்கள் தொடர்பாக தாம் வெளியிட்ட புகைப்படம் ஒன்று தவறானது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் நடந்த தொடர் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களுடன் தொடர்புடைய சிலரை அடையாளப்படுத்தி அவர்கள் தொடர்பான விபரங்கள் தெரிந்தால் உடன் அறிவிக்குமாறு பொதுமக்களைப் பொலிஸார் கேட்டுக் கொண்டனர்.

குறிப்பாக தேடப்படும் சந்தேக நபர்களின் புகைப்படங்கள் மற்றும் பெயர் விபரங்களை பொலிஸார் வெளியிட்டிருந்தனர்.

அவ்வகையில், மொஹமட் இவுஹய்ம் சாதிக் அப்துல்ஹக், பாத்திமா லதீபா, மொஹமட் இவுஹய்ம் ஷாஹிட் அப்துல் ஹக், புலஸ்தினி ராஜேந்திரன் எனப்படும் சாரா, அப்துல் காமர் பாத்திமா காதியா, மொஹமட் காசிம் மொஹமட் ரில்வான்



ஆகிய நபர்களின் பெயர்களையே பொலிஸார் வெளியிட்டனர்.

இவர்கள் தொடர்பான தகவல்கள் தெரிந்தவர்கள் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் 071 859 1771, 011 242 2176, 011 239 5605 ஆகிய இலக்கங்களுக்குத் தொடர்பு கொண்டு தகவல் தருமாறு பொலிஸ் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

இந்நிலையில், குறித்த சந்தேகநபர்களில் அப்துல் காதர் பாத்திமா காதியா என்பவர் தௌஹீத் ஜமாத் இயக்கத்தின் தலைவர் சஹ்ரான் ஹாசீமின் மனைவி என அடையாளப்படுத்தினர்.

இந்நிலையில், தீவிரவாதிகளுடன் தொடர்பு என தேடப்படும் பெண் என்று பொலிஸார் ஊடகங்களுக்கு கொடுத்த படம் தவறு என்று அமெரிக்காவைச் சேர்ந்த அவரது பெயர் Amara Majeed என்றும், தன்னுடைய படம் தவறாக வெளியிடப்பட்டுள்ளதாக அவர் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

அமார மயீட் என்பவர் இஸ்லாமிய செயற்பாட்டாளர் என்றும், பிபிசி வெளியிட்ட 100 பெண்கள் பட்டியலில் 2015 ஆம் ஆண்டு இடம்பெற்றிருந்தார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை தற்போது பொலிஸார் வெளியிட்டுள்ள விளக்கச் செய்தியில் உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பில், அப்துல்காதர் ஃபாதிமா காதியா என்ற பெண் தேடப்படுவதாகவும், அவரது புகைப்படம் என்று கூறி முன்பு வெளியிட்டிருந்த படம் தவறானது எனவும் தெரிவித்துள்ளனர். (இ-7)

## பொறுப்பை ஏற்கிறேன்

### சர்வமதத் தலைவர்களிடம் ஜனாதிபதி தெரிவிப்பு

பயங்கரவாதத்தை நாட்டிலிருந்து முற்றாக இல்லாதொழித்து நாட்டில் அமைதியும் சுதந்திரமுமிக்க சூழலை விரைவில் ஏற்படுத்தும் பொறுப்பை அரச தலைவர் என்ற வகையில் தான் ஏற்றுக் கொள்வதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற சர்வமத ஒன்றுகூடலின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொடூரப் பயங்கரவாதத்தை நாட்டிலிருந்து முற்றாக இல்லாதொழிப்பதற்கு அனைத்துத் தரப்பினரதும் ஒத்துழைப்பு தற்போது கிடைத்துள்ளதாக ஜனாதிபதி இதன்போது குறிப்பிட்டார். இச்செயற்பாடுகளில் நாட்டின் பாதுகாப்புத் துறையினர் மீது தான் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் எந்த வகையிலும் வெளிநாட்டு இராணுவத்தினரை நாட்டுக்குள் கொண்டுவர தான் நடவடிக்கை எடுக்கப் போவதில்லை என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

எதிர்பாராத இந்த சந்தர்ப்பத்தில் மக்களிடையே அமைதியின்மை ஏற்பட இடமளிக்காது பொதுமக்கள் மத்தியில் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்பும் பொறுப்பினை நிறைவேற்ற நாட்டின் அனைத்து மதத் தலைவர்களும் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றார்கள் என தான் நம்புவதாக ஜனாதிபதி தெரிவித்தார். நாட்டில் நிகழ்ந்த துன்பியல் சம்பவத்தையடுத்து பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை உள்ளிட்ட கிறிஸ்தவ மதகுருமார்களும் கிறிஸ்தவ மக்களும் செயற்பட்ட அமைதியான முறையை பாராட்டிய ஜனாதிபதி அந்தவகையில் அவர்கள் நாட்டிற்கு சிறந்த முன்னுதாரணமாக விளங்குகின்றனர் எனத் தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள அச்சமான சூழலை முடிவுக்கு கொண்டு வந்து மக்கள் மத்தியில் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் உறுதிப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து மகாசங்கத்தினர் உள்ளிட்ட சர்வ மத தலைவர்கள் விரிவாக கலந்துரையாடியதோடு தமது கருத்துக்களையும் ஆலோசனைகளையும் இதன் போது முன்வைத்தனர்.

இதனைத் தொடர்ந்து கருத்து தெரிவித்த பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, இந்த பயங்கரவாதத் தாக்குதல் ஒருபோதும் இஸ்லாமிய மக்களால் மேற்கொள்ளப்பட்ட ஒன்று அல்ல என்பதோடு பெரும்பான்மையான இஸ்லாமியர்கள் இதனை வன்மையாக கண்டிக்கின்றனர் என்றும் இதற்கு பொறுப்புக்கூற வேண்டிய பயங்கரவாத அமைப்பிற்கு எதிராக துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார். தேசிய பாதுகாப்பிற்காக நாட்டின் புலனாய்வுத்துறையை மேலும் பலப்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தை இதன் போது சுட்டிக்காட்டிய பேராயர் கடந்த சில வருடங்களுக்குள் இடம்பெற்ற சர்வதேச ஊடுருவல்கள் நாட்டின் புலனாய்வு துறையினரை செயலிழக்க செய்ய ஏதுவாகியுள்ளதாக தெரிவித்தார். (இ-7)

## சுகாதார அமைச்சின் இரண்டு பரீட்சைகள் பிற்போடப்பட்டன

சுகாதாரம், போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சால் நடத்தப்படவிருந்த குடும்ப சுகாதார அதிகாரிகளின் வினைத்திறன் காண் பரீட்சை மற்றும் வைத்திய அதிகாரிகளின் திணைக்களப் பரீட்சை என்பன பிற்போடப்பட்டுள்ளன.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலை காரணமாக குறித்த பரீட்சைகள் இன்று 27 மற்றும் நாளை 28 ஆம் திகதிகளில் நடைபெற திட்டமிடப்பட்டிருந்தன. அந்தப் பரீட்சைகள் மீண்டும் நடைபெறும் திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் என்று சுகா தாரம், போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு தெரிவித்துள்ளது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளைப் பயங்கரவாதிகள் என்றவர்கள் இன்று அவர்களை நற்சான்றுப்படுத்துகின்றனர்

## சிறீதரன் எம்.பி.சுட்டிக்காட்டு

(கண்டாவளை)

விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் எனக் கூறிவந்த அதே நபர்கள், விடுதலைப்புலிகள் தாக்குதல் மேற்கொள்ளக்கூடிய பல வகைகள் காணப்பட்டபோதிலும் இவ்வாறான தாக்குதல்களை மேற்கொண்டதில்லை என்று கூறுவதை சர்வதேச சமூகம் நோக்க வேண்டும் என தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குறித்த ஊடக சந்திப்பு நேற்று முன்தினம் கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் என கடந்த காலங்களில் கூறிவந்த அதே தலைமைகள் இன்று அவர்களை நற்சான்றுப்படுத்தும் வகையில் கருத்துக்கள் தெரிவித்து வருகின்றார்கள். இந்த நிலையில் சர்வதேசத்தின் பார்வை எவ்வாறு இருக்கும் என நம்புகின்றீர்கள் என ஊடகவியலாளர் வினவினார். இதற்கு பதில் அளித்த நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன்,

சிறந்ததொரு கேள்வியை எழுப்பியுள்ளீர்கள். உண்மையில் கடந்த காலங்களில் விடுதலைப் புலிகளை பய்ங்கரவாதிகள் என பல தரப்பினரும் கருத்துக்களை கூறி வந்தனர். அவர்களின் மரபுவழி போராட்டத்தை பயங்கரவாதத் தாக்குதல் என தெரிவித்து வந்தனர்.


இதேவேளை அண்மையில் இடம்பெற்ற தாக்குதலின் பின்னர் எதிர்க்கட்சி தலைவரும், முன் னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷ நாடாளு மன்றில் விடுதலைப்புலிகள் தொடர்பில் நல்ல மாதிரியாக குறிப்பிட்டுள்ளார்.



விடுதலைப்புலிகள் இவ்வாறான தாக்குதல்கள் மேற்கொள்ளக் கூடிய பல சந்தர்ப்பங்கள் இருந்த போதிலும், அவர்கள் தாக்க வில்லை எனவும் குறிப்பிட்டுப் பேசினார்.

இவ்வாறு இதே அரசாங்கம் கூறிய பொய்யான தகவல்களை வைத்து சர்வதேசம் விடுதலைப் புலிகளை பயங்கரவாத அமைப்பாக தடை செய்திருந்தது. இன்று அதே நபர்கள் விடுதலைப் புலிகள் தொடர்பில் கூறும் கருத்துக்கள் தொடர்பில் கவனம் செலுத்தும் என நம்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

அண்மையில் இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதலால், இறுதி யுத்தத்தில் இடம்பெற்ற படுகொலைகள், யுத்த குற்ற மீறல்கள் எவையும் மறையப்போவதில்லை எனவும் அவர் இவ் ஊடக சந்திப்பில் மேலும் தெரிவித்தார். (7-315)



கிளிநொச்சி சின்மயாமிஷனின் ஏற்பாட்டில் வாழ நினைத்தால் வாழலாம் என்ற தலைப்பில் ஆன்மீக அருளுரை கரைச்சி பிரதேச சபை மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. இதில் கொழும்பு சின்மயாமிஷன் தலைமைச் சுவாமிஜி குணாதீதானந்த சரஸ்வதி அருளுரை வழங்கியதோடு சின்மய அறநெறி மாணவர்களது கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (படங்கள்:-ஐ.சிவசாந்தன்)

# மகனால் தாக்கப்பட்ட தந்தை உயிரிழப்பு

(நவகமுவ)

நவகமுவ - கொரதொட பகுதியில் மகனொருவர் தந்தையை கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கொலைச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் இடம் பெற்றுள்ளதுடன் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தந்தைக்கும் மகனுக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் கைகலப்பாக மாறியுள்ள நிலையிலேயே மகன் தந்தையை கூரிய ஆயுதத்தால் தாக்கியுள்ளார்.

இதன்போது உயிரிழந்தவர் 61 வயதுடைய கடுவெல பகுதியை சேர்ந்த ரணவக ஆராச்சிகே சிறிமல் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

அதனையடுத்து சந்தேக நபரான உயிரிழந்தவரின் மகன் கைது செய்யப்பட்டுள்ளதுடன், சந்தேக நபர் மனநிலை பாதிக்கப்பட்டவர் என தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (7)

# கிளிநொச்சி மாவட்ட சிறுபோக நெற்செய்கையில் 21439 ஏக்கருக்கு மானிய உரம் வழங்கத்திட்டம்

## கமநல சேவைகள் உதவி ஆணையாளர் தகவல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் இவ்வருடம் (2019) இடம்பெற்று வருகின்ற சிறுபோக நெற் செய்கைக்காக 21439 ஏக்கர் காணியில் நெற்செய்கை செய்யப்பட்டு வருவதாக கிளிநொச்சி மாவட்ட கமநலசேவைகள்உதவி ஆணையாளர் எஸ்.ஆயகுலன் தெரிவித்தார்.

இரணைமடு நீர்ப்பாசனத்தை நம்பி இடம்பெறும் இச் செய்கையானது கிளிநொச்சியில் 10 ஆயிரத்து 399.5 ஏக்கரும் அக்கராயன் பிரதேசத்தில் 2 ஆயிரத்து 963 ஏக்கரும் இராமநாதபுரம் பிரதேசத்தில் 3 ஆயிரத்து 125 ஏக்கரும் உருத்திரபுரப் பிரதேசத்தில் 2 ஆயிரத்து 710.5 ஏக்கரும், பூநகரிப் பிரதேசத்தில் முன்னூற்று இருபத்தி இரண்டு ஏக்கரும் முழங்காவில் பிரதேசத்தில் ஐநூற்றுப்பத்து மற்றும் புளியம்பொக்கணைப் பிரதேசத்தில் ஆயிரத்து நானூற்று ஒன்பது ஏக்கரிலும் சிறுபோக நெற்செய்கை இடம் பெறுகின்றது.

கடந்த வருட இறுதியில் கிளிநொச்சி மாவட்டத்தில் பெய்த அடைமழையினால் சிறுபோக நெற்செய்கைக்கு தேவையான நீர் சேமிக்கப்பட்டதுடன் தற்போது இடையிடையே பெய்து வரும் மழையினாலும் சிறுபோக நெற் செய்கையாளர்களுக்கு போதிய நீர் கிடைக்கக் கூடியதாகவுள்ளது.

ஆகவே சிறப்பாக நடைபெற்று வரும் நெற்செய்கைக்கு தேவையான பசளை மானியத்தை வழங்கத் தாம் தயாராகவுள்ளதாகவும் அதற்கான வேலைத் திட்டங்கள் அனைத்தும் முடிவுறும் தறுவாயில் உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.(7-10)


# கடும் சோதனைக்கு பின்னரே தொழுகைக்கு அனுமதி



பொலிஸாரின் கடும் சோதனைக்கு பின்னரே வவுனியா பள்ளிவாசல்களில் நேற்று மதியம் தொழுகைக்கு அனுமதிக்கப் பட்டனர்.நாட்டில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் இடம்பெற்ற தொடர் குண்டுவெடிப்பு சம்பவத்தினையடுத்து இலங்கையிலுள்ள அனைத்து பள்ளிவாசலிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

அந்த வகையில் வவுனியா பெரிய பள்ளிவாசலிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன் பள்ளிவாசலுக்குள் பிரவேசிக்கும் அனைவரும் பொலிஸாரின் பலத்த சோதனைக்கு பின்னரே உட்செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

தலைக்கவசம் , பொதிகள் , மோட்டார்சைக்கிள்கள் போன்றன பள்ளிவாசலுக்குள் கொண்டு செல்வதற்கு தடை விதிக்கப்பட்டிருந்த துடன் 15நிமிடங்கள் மாத்திரமே தொழுகையும் நடைபெற்றிருந்தது. (7-250)




கல்வி, பொருளாதார அபிவிருத்தி அமைப்பின் பிரதான செயற்பாடுகளில் ஒன்றான, நெருக்கடியான பொருளாதார நிலைமைக்குள் வாழும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான உதவித் திட்டத்தின் கீழ் பயனடைந்து வரும் மாணவர்களுடனான சந்திப்பு மற்றும் கலந்துரையாடல் நிகழ்வு, கடந்த சனிக்கிழமை வவுனியாவில் நடைபெற்றது. தவிர்க்கமுடியாத காரணங்களால் சமுகமளிக்காத ஒரு சிலமாணவர்கள் தவிர்ந்த ஏனைய மாணவர்களும் தமது பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஒருவருடன் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

(படங்கள்: பனிக்கன்குளம் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைத்தொழில் அபிவிருத்தி சபை ஊடாக தற்கொலைக் குண்டுதாரிக்கு வெற்று ரவைகள்



(கொழும்பு)

கொழும்பு ஷங்கிரில்லா ஹோட்டலில் தாக்குதல் மேற்கொண்ட தற்கொலை குண்டுதாரி இன்சாப் அஹமட், இராணுவத்தில் இருந்து அகற்றப்படும் வெற்றுத் துப்பாக்கி ரவை கோப்புகளை, கைத்தொழில் அபிவிருத்தி சபை ஊடாக பெற்றுக் கொண்டுள்ளாரென தகவல்கள் வெளியாகியுள்ளன.

கழிவுகளை பெற்றுக்கொள்ளும் வசதியூட்டலின் மூலமே, குறித்த வெற்று ரவைகளை கைத்தொழில் அபிவிருத்தி சபை ஊடாக அவர் பெற்றுக்கொண்டுள்ளார் எனவும் வர்த்தகர் ஒருவர் என்ற அடிப்படையில், கைத்தொழில் அபிவிருத்தி சபையில் தம்மை அவர் பதிவுசெய்துள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல வருடங்களாக இவர் வெற்றுத் துப்பாக்கி ரவைகளை கொள்வனவு செய்து வந்துள்ளதுடன், செப்பு உற்பத்தி நடவடிக்கைகளுக்காக தமது தொழிற்சாலைக்கு இதனை கொள்வனவு செய்வதாகவும் கூறியிருக்கிறார்.

உயிர்த்த ஞாயிறன்று மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்துக்கு குறித்த செப்பு தொழில்சாலையில் குண்டுகள் உற்பத்தி செய்யபப்ட்டிருக்கலாம் என பாதுகாப்புப் பிரிவு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

# பனையில் பற்ற வைக்கப்பட்ட தீ பரவியதால் வீடு ஒன்று சேதம்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு நகர்ப்பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற தீ விபத்து காரணமாக வீடு ஒன்று தீப்பிடித்து எரிந்துள்ளது.

இந்த தீவிபத்து தொடர்பில் தெரியவருகையில்,

வீட்டின் பின்பக்கம் அமைந்துள்ள வெறும் காணியில் உள்ள பனைமரக்கூடலில் விசமிகள் தீயைப் பற்ற வைத்துள்ளனர்.


இதன்போது பனை மரங்களில் பற்றிய தீ பாரிய தீயாக பரவியபோது 50 இற்கும் மேற்பட்ட பனைமரங்கள் எரிந்துள்ளன.

காற்றில் தீ துகள் இழுத்துச் செல்லப்பட்டு அயலில் உள்ள வீடு ஒன்றின் மேல் விழுந்ததில் ஓலை வீடு தீப்பற்றியுள்ளதாக அயலவர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த வீட்டின் கூரை முற்றாக எரிந்துள்ளதுடன் வீட்டில் இருந்த பொருட்களுகம் எரிந்துள்ளன. வீட்டில் யாரும் இல்லாத காரணத்தால் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை

இச்சம்பவத்தினைச் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் மற்றும் படையினர் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினர் ஆகியோர் இணைந்து தீயினை கட்டுக்குள் கொண்டு வந்துள்ளதுடன் இச் இந்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (7-281)

# என்னை விமர்சிக்க வேண்டாம்! ஹரின், கர்தினாலிடம் கோரிக்கை



(கொழும்பு)

தம்மை வெளிப்படையாக விமர்சிக்க வேண்டாம் என்று அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ, கர்தினால் மல்கம் ரஞ்சித்திடம் கோரியுள்ளார்.

ஞாயிறு ஆதாரனைகளுக்குச் செல்ல வேண்டாம் என்று வைத்தியசாலையில் உள்ள தமது தந்தை தமக்கு அறிவுரை கூறியதாக தாக்குதல் நடந்த பின்னர் ஹரின் தெரிவித்திருந்தார்.

பாதுகாப்பு முன்னாள் அதிகாரிகள் இதனை தமது தந்தையிடம் கூறியதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

இதனை கோடிட்டிருந்த கர்தினால் மல்கம் ரஞ்சித், இந்த தகவல் தமக்கு கூறப்பட்டிருந்தால், ஞாயிறு ஆராதனைகளை நிறுத்தியிருக்கலாம் என்று தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து கர்தினாலை தொலைபேசியில் தொடர்பு கொண்ட அமைச்சர் ஹரின், கர்தினால் விமர்சனத்தினால் தாம் கவலையடைந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு புலனாய்வுப் பிரிவின் முன்னாள் அதிகாரிகளே தமது தந்தையிடம் இதனை கூறியிருந்தனர்.



எனினும் அதனை தாம் அதிமுக்கிய செய்தியாக எடுத்துக் கொள்ளவில்லை.

தாக்குதலின் பின்னரே இது தொடர்பில் பிரதமருக்கு தாம் இதனைக் கூறியதாகவும் ஹரின் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இந்தக் குற்றச்சாட்டுக்கள் காரணமாக, தமது வாழ்க்கையும் ஆபத்தை எதிர் நோக்கியிருப்பதாக ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (7)

# கிளிநொச்சி பாடசாலைகளின் பாதுகாப்பு செயற்பாடுகள் தொடர்பான விசேட கூட்டம்



(குருமன்காடு)

நாளை மறுதினம் 29 ஆம் திகதி பாடசாலைகள் கல்விச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில், பாதுகாப்பு செயற்பாடுகள் தொடர்பான விசேட கூட்டம் நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்றது. கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் குறித்த விசேட கூட்டம் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இக் கூட்டத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர், கிளிநொச்சி படைகளின் கட்டளை அதிகாரி சார்பில் 57 ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி உள்ளிட்ட உயர் அதிகாரிகளும் கிளிநொச்சி வலயக் கல்வி பணிப்பாளர், அதிபர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

கிளிநாச்சி மாவட்டத்தில் 104 பாடசாலைகளில் 32,800 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். பாடசாலைகள் திறந்து விடப்பட்டதன் பின்னர் மாணவர்கள் அச்சமின்றி கல்வியைத் தொடரும் வகையில் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டது.

அங்கு கருத்துத் தெரிவித்த 57 ஆவது படைப் பிரிவின் கட்டளை அதிகாரி குறிப்பிடுகையில்,

அச்சப்படவேண்டியதில்லை. அவதானமாக இருந்தால் போதும். பாடசாலைகள் நாளை மறுதினம் 29 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. மாணவர்களின் பாதுகாப்புத் தொடர்பில் நாம் கவனம் செலுத்த வேண்டும். நாளை ஞாயிற்றுக்கிழமை முக்கிய பாடசாலைகளில் சோதனைகளை முன்னெடுக்க உள்ளோம். ஏனைய பாடசாலைகளிலும் இவ்வாறு செய்வோம். தொடர்ந்தும் குண்டு செயலிழக்கும் பிரிவினரையும் அழைத்து விசேட சோதனைகளை முன்னெடுப்போம். அதன் பின்னர் படையினர் பாடசாலைகளில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்படுவர் எனத் தெரிவித்தார்.

இதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர், கிளிநாச்சி மாவட்டத்தில் உள்ள பாடசாலைகள் நாளை மறுதினம் ஆரம்பமாக உள்ள நிலையில், சில பாதுகாப்பு செயற்பாடுகளை எவ்வாறு முன்னெடுப்பது என்பது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்றை முன்னெடுத்திருந்தோம். இந்த கலந்துரையாடலில் அதிபர்களுக்கு வழங்கப்பட்ட ஆலோசனைகளுக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தார். (7-250)

# சந்தேகத்திற்கிடமான முறையில் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளால் வவுனியாவில் பதற்றம்

(குருமன்காடு)

வவுனியா, குருமன்காட்டுப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளினால், அப்பகுதியில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது.

குருமன்காட்டுப் பகுதியிலுள்ள கடையொன்றிற்கு முன்னால் மோட்டார் சைக்கிளொன்று நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் ஆனால் அந்தக் கடை மூடப்பட்டுள்ளதாகவும் நேற்றுக் காலை 6.30 மணியளவில் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு விரைந்த வவுனியா பொலிஸார், மோட்டார் சைக்கிளை சோதனையிட்டதுடன் யாருடையதென அறிவதற்கு அப்பகுதியில் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதன்போது கிராம உத்தியோகத்தரும் குறித்த இடத்திற்குச் சென்றிருந்தார்.

இதேவேளை குறித்த கடையில் பூட்டப்பட்டிருந்த சி.சி.ரி.வி. கமராவில், மோட்டார் சைக்கிளை ஒருவர் நிறுத்திச்செல்வது பதிவாகியிருந்தது.

பின்னர், விளம்பரப் பலகையில் காணப்பட்ட கடை உரிமையாளரின் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்ட பொலிஸார், அவரை உடனடியாக சம்பவ இடத்திற்கு வருகை தருமாறு பணித்தனர்.

அதனைத் தொடர்ந்து அவ்விடத்திற்கு வருகை தந்த கடை உரிமையாளர்,

மோட்டார் சைக்கிள் தனக்கு தெரிந்த ஒருவருடையது எனவும் அவர் மன்னார் கல்வித்திணைக்களத்தில் பணியாற்றுபவர் எனவும் மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு, தனக்கு தொலைபேசியில் தெரிவித்துச் சென்றதாகவும் பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டதையடுத்து பொலிஸார் கடை உரிமையாளருக்கு எச்சரித்ததுடன் அவரிடம் தொடர் விசாரணைகளை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (7-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## புதிய இந்தியாவில் தீவிரவாதிகளுக்கு கடுமையான பதிலடி வழங்கப்படும்

### பிரதமர் மோடி திட்டவட்டம்



(சென்னை)

புதிய இந்தியா, தீவிரவாதத்தை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது என்பதுடன் தீவிரவாதிகளுக்கு கடுமையான பதிலடி வழங்குமென பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

வாரணாசியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பாரிய பேரணியொன்று பா.ஜ.கவினால் நடத்தப்பட்டது. அதில் பிரதமர் நரேந்திர மோடியும் கலந்துகொண்டார்.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டபோதே மோடி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது,

"காசிநகர், நாடாளுமன்ற உறுப்பினராவதற்கு மட்டுமன்றி பிரதமராவதற்கும் தனக்கு ஆசி வழங்கியது. மேலும் தீவிரவாதிகளுக்கு ஏற்ற விதத்தில் பதிலடி கொடுக்கவும் காசி நகரம் பெரும் உதவியாக இருந்தது.

அந்தவகையில் புதிய இந்தியாவில், தீவிரவாதத்திற்கு கடுமையான பதிலடி கொடுக்கப்படும் என்பதில் எந்தவொரு சந்தேகமும் இல்லை. இதேவேளை மக்களின் நலனை மாத்திரமே கருத்திற்கொண்டு பா.ஜ.க. எப்போதும் செயற்படும்" என நரேந்திர மோடி மேலும் தெரிவித்தார். (7)

## இலங்கையில் குண்டு வெடிப்பு எதிரொலி; இந்திய புகையிரத நிலையங்களில் சோதனை

(சென்னை)

இலங்கையில் நடத்தப்பட்ட தற்கொலைக்குண்டுத் தாக்குதல்களை அடுத்து இந்தியாவின் புகையிரத நிலையங்களிலும் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதன்படி எழும்பூர் மற்றும் சென்னை மத்திய புகையிரத நிலையங்களிலும் நேற்று வெள்ளிக்கிழமை காலை திடீர் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இலங்கையில் இடம்பெற்ற தொடர் குண்டுத் தாக்குதல்களில் 250 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளதுடன் 500 இற்கும் மேற்பட்டவர்கள் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்நிலையில் குறித்த தாக்குதலுக்கு ஐ.எஸ். அமைப்பினர் பொறுப்பேற்றுள்ள நிலையில் குறித்த அமைப்பினர் இலங்கையின் அயல் நாடான இந்தியாவிலும் தாக்குதல் நடத்தக்கூடும் என்ற அச்சம் நிலவுகின்றது.

இதன்காரணமாக இந்தியாவின் சென்னை புகையிரதநிலையம் மற்றும் கடலோரப்பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

## பாகிஸ்தான் அமைதியை மட்டுமே நேசிக்கிறது இந்தியா தான் பயங்கரவாதத்தை ஊக்குவிக்கிறது

### அந்நாட்டு ஜனாதிபதி குற்றச்சாட்டு



(இஸ்லாமாபாத்)

எமது நாடு உண்மையாக அமைதியைத்தான் நேசிக்கின்றது. ஆனால் இந்தியாதான் பயங்கரவாதத்தை ஊக்குவிக்கின்றதென பாகிஸ்தான் ஜனாதிபதி ஆரிப் ஆல்வி குற்றம் சாட்டியுள்ளார்.

காஷ்மீர் மாநிலம், புல்வாமாப் பகுதியில் பாகிஸ்தான் பயங்கரவாதிகள் நடத்திய தற்கொலை தாக்குதலில் 40 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இதன்போது இந்தியாவும் அதற்கு பதிலடி வழங்கியது. இதனால் இரு நாடுகளுக்கும் இடையில் பதற்றமான சூழ்நிலை தொடர்ந்து நிலவி வருகின்றது.

இந்நிலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பாகிஸ்தான்- இஸ்லாமாபாத் பகுதியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட ஆரிப் ஆல்வி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"பாகிஸ்தான் அடிப்படைவாதத்தை ஒழிப்பதற்கு தற்போது தொடர்ச்சியாக பல முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. மேலும் அமைதியான முறையில் இந்தியாவை நாடுவதன் ஊடாக அனைவரும் அதனை புரிந்துகொள்ள முடியும்.

ஆனால் இந்தியாவின் செயற்பாடுகள் எமக்கு பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளதுடன் பயங்கரவாதத்தையே ஊக்குவித்து வருகின்றது.

இதேவேளை பாகிஸ்தான், கடுமையான உள்நாட்டு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்திருந்தது. இந்நிலையில் அப்பிரச்சினைகளை கடந்து சுமுகமான சூழ்நிலையை நோக்கி நகர்ந்து வருகின்றது" என ஆரிப் ஆல்வி மேலும் தெரிவித்துள்ளார். (7)

## மீண்டும் தாக்குதல் நட இலங்கைக்கு பயண

### ஆஸி, இங்கிலாந்து தத்தம

மீண்டும் தாக்குதல் நடத்த வாய்ப்பு உள்ளதால் இலங்கைக்கு பயணிக்க வேண்டாம் என்று அவுஸ்திரேலியா, இங்கிலாந்து ஆகிய நாடுகள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

இலங்கையில் கடந்த 21 ஆம் திகதி ஈஸ்டர் பண்டிகையன்று தொடர் குண்டுவெடிப்பு தாக்குதல் நடத்தப்பட்டது.

இதற்கு உள்நாட்டு பயங்கரவாத அமைப்பான தேசிய தௌஹீத் ஜமாத் மீது இலங்கை அரசு குற்றம் சாட்டியுள்ளது.

தாக்குதலுக்கு ஐ.எஸ். பயங்கரவாத இயக்கம் பொறுப்பேற்றுள்ளது.

இந்நிலையில், இலங்கையில் நேற்று முன்தினம் மீண்டும்



## நியூசிலாந்து தாக் பாதிக்கப்பட்ட ம சந்தித்த இளவரசர்



## மெக்சிக்கோ எல்லை மேலதிக படையினரை



### ட்ரம்ப் மிரட்டல்

(வோஷிங்டன்)

தெற்கு எல்லைப் பகுதியை மூடப்போவதாகவும் மேலதிக ஆயுதப் படையினரை நிலை நிறுத்தப் போவதாகவும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் அச்சுறுத்தல் விடுத்துள்ளார்.

அமெரிக்காவிற்குள் நுழையும் குடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## நடத்த வாய்ப்புள்ளதால்
## பணிக்க வேண்டாம்
### தமது மக்களுக்கு அறிவுறுத்து



குண்டு வெடித்தது. கொழும்பில் இருந்து 40 கி.மீ. தொலைவில் புகொடை என்ற நகரம் உள்ளது. அங்குள்ள நீதவான் நீதிமன்றுக்கு பின்னால் உள்ள வெற்றுக் காணியில் குண்டு வெடித்தது.

அங்கு யாரும் இல்லாததால், எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. இந்த குண்டுவெடிப்பு தொடர்பில் பொலிஸார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

இந் நிலையில், இலங்கையில் மீண்டும் தாக்குதல் நடத்த வாய்ப்பு உள்ளதால் தங்கள் நாட்டு மக்கள் இலங்கைக்கு பயணிக்க வேண்டாம் என்று இங்கிலாந்து. அவுஸ்திரேலிய நாடுகள் எச்சரிக்கை விடுத்துள்ளன. (7)

## மின்தூக்கி அறுந்து விழுந்து விபத்து; 11 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழப்பு



(பீஜிங்)

சீனாவில் அடுக்குமாடிக் கட்டடத்தில் மின்தூக்கியின் கேபிள் திடீரென அறுந்து விழுந்து விபத்துக்குள்ளானதில் 11 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர்.

சீனாவின் ஹேபேய் மாகாணத்தில் உள்ள ஹெங்சூய் நகரில் அடுக்குமாடி கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. இங்கு நேற்றுக் காலை ஏராளமான தொழிலாளர்கள் வழக்கமான பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது, தொழிலாளர்கள் சிலர் கட்டடத்தின் மேல் பகுதியில் இருந்து மின்தூக்கியில் கீழே இறங்கிக் கொண்டிருந்தனர். அப்போது சற்றும் எதிர்பாராத வகையில் கேபிள் திடீரென அறுந்தது.

இதனால் மின்தூக்கி அதிவேகத்தில் தரையில் விழுந்தது. இந்தக்கோர விபத்தில் 11 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் இருவர் படுகாயம் அடைந்தனர். அவர்கள் மீட்கப்பட்டு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (7)

## இருநாட்டு உறவை பலப்படுத்த உறுதி
### கிம்—புடின் சந்திப்பில் முடிவு



(மொஸ்கோ)

முதன்முறையாக சந்தித்து பேசிய வடகொரியா ஜனாதிபதி கிம் யாங் உன்னும், ரஷ்ய ஜனாதிபதி புடினும் இருநாட்டு உறவை பலப்படுத்த உறுதி பூண்டனர்.

பனிப்போர் காலத்தில் ரஷ்யாவை உள்ளடக்கிய கம்யூனிஷ்ட் கூட்டமைப்பான, சோவியத் ஒன்றியத்துக்கும் வடகொரியாவுக்கும் இடையில் நெருக்கமான உறவு இருந்தது. இராணுவம் மற்றும் வணிக ரீதியில் இந்த நட்புறவு பேணப்பட்டு வந்தது.

1991 ஆம் ஆண்டு சோவியத் ஒன்றியம் சிதைந்துபோனதற்கு பிறகு, முதலாளித்துவ நாடாக உருவெடுத்த ரஷ்யாவுடன் வடகொரியாவின் வணிக உறவுகள் சுருங்கிப்போயின. அதன்பிறகு வடகொரியா, சீனாவின் பக்கம் சாய்ந்து அதனை தனது முக்கிய கூட்டாளியாக ஆக்கிக்கொண்டது.

இதற்கிடையில் ஜனாதிபதி புடின் தலைமையின் கீழ் பொருளாதார ரீதியில் மீண்டெழுந்த ரஷ்யா, சோவியத் ஒன்றிய காலத்தில் வடகொரியா வாங்கிய கடன் முழுவதையும் நல்லெண்ண நடவடிக்கையாக தள்ளுபடி செய்தது. இதன்மூலம் ரஷ்யா, வடகொரியா இடையிலான நல்லுறவு மீண்டும் துளிர்த்தது.

இந்த நிலையில் அணு ஆயுத விவகாரம் தொடர்பாக அமெரிக்கா உடனான பேச்சுவார்த்தை முறிந்த நிலையில், தமக்கும் வலிமையான கூட்டாளிகள் உண்டு என்று காட்டவேண்டிய தேவை வடகொரியாவுக்கு எழுந்தது.

அதேபோல் தென்கொரியா உடனான நட்பின் வாயிலாக கொரிய தீபகற்பத்தில் ஆதிக்கம் செலுத்தி வரும் அமெரிக்காவிடம், கொரிய தீபகற்பத்தில் தனக்கும் செல்வாக்கு உண்டு என்று காட்ட வேண்டிய தேவை ரஷ்யாவுக்கு இருந்ததாக கருதப்படுகிறது.

இப்படியான சூழலில் முதன் முறையாக ரஷ்ய ஜனாதிபதி புடினை சந்தித்து பேசுவதற்காக வடகொரிய ஜனாதிபதி ரஷ்யாவுக்கு சென்றார். அந்நாட்டின் கிழக்குப் பகுதியில் உள்ள துறைமுக நகரமான விலாடிவோஸ்டாக்கில் உள்ள ரூஸ்கை தீவில் நேற்று முன்தினம் காலை இரு தலைவர்களும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

இந்த பேச்சுவார்த்தை மிகவும் இணக்கமாக நடந்தது. இந்த சந்திப்பில் ரஷ்யா-வடகொரிய உறவை மேம்படுத்த இருதரப்பிலும் உறுதி எடுத்துக்கொள்ளப்பட்டது. அத்துடன் கொரிய தீபகற்பத்தில் நிலவும் பதற்றத்தைத் தணிக்க ரஷ்யா தன்னால் முடிந்த உதவியை செய்யும் என புடின் உறுதியளித்தார். (7)

## ாக்குதலில்
## மக்களை
## ் வில்லியம்



(வெலிங்டன்)

கிறைஸ்ட்சேர்ச் மசூதித் தாக்குதலில் உயிர்தப்பிய ஐந்து வயது சிறுமியை நியூசிலாந்துக்கு இரண்டு நாட்கள் விஜயத்தை மேற்கொண்டுள்ள இள்வரசர் வில்லியம் சந்தித்துள்ளார்.

கிறைஸ்ட்சேர்ச் மசூதி தாக்குதலில் காயமடைந்து கோமா நிலைக்கு தள்ளப்பட்ட அலென் அல்சாட்டி இந்த வார ஆரம்பத்திலேயே இயல்பு நிலைக்கு திரும்பியிருந்தார்.

தனது விஜயத்தின் முதல் நாளான நேற்று முன்தினம் அலென் அல்சாட்டியை ஒக்லாண்ட் ஷ்டார் ஷிப் வைத்திய சாலையில் வைத்து இளவரசர் வில்லியம் சந்தித்துள்ளார்.

இதைத்தொடர்ந்து மசூதித் தாக்குதல்களின்போது மீட்புப் பணிகளில் ஈடுபட்ட பொலிஸ் அதிகாரிகள் மற்றும் மருத்துவ அதிகாரிகளையும் இளவரசர் வில்லியம் சந்தித்துள்ளார். (7)

## லைப்பகுதியை மூடி
## ரை நிலைநிறுத்துவேன்



யேற்றவாசிகளை தடுப்பதற்கு மெக்சிக்கோ நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் இந்நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும் என அவர் நேற்று அறிவுறுத்தியுள்ளார்.

சுமார் 20 ஆயிரம் பேர் மெக்சிக்கோ ஊடாக அமெரிக்காவிற்குள் நுழைவதற்கான பயணத்தை ஆரம்பித்துள்ளதாக ஜனாதிபதி ட்ரம்ப் தனது டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இதனை தடுப்பதற்கு மெக்சிக்கோ நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்றேல் தெற்கு எல்லையை மூட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் எனத் தெரிவித்தார்.

எல்லையில் ஏற்கனவே ஆயுதமேந்திய படையினர் நிறுத்தப்பட்டுள்ள நிலையில், அந்த எண்ணிக்கையை மேலும் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளது. (7)

## உருளைக்கிழங்கில் தங்கும் விடுதி
### ஒரு நாள் வாடகை ரூபா 14 ஆயிரம்



(நியூயோர்க்)

அமெரிக்காவின் இடாகோ மாகாணத்தில் தலைநகர் போய்சில் உருளைக்கிழங்கு பயிரிடுவதை ஊக்குவிக்கும் விதமாக, கடந்த 2012 ஆம் ஆண்டு மிகப் பெரிய உருளைக்கிழங்கு விளைவிக்கப்பட்டது.

28 அடி நீளம் மற்றும் 12 அடி அகலத்தில் 6 தொன் எடையுடன் விளைந்த இந்த உருளைக்கிழங்கு உலகிலேயே மிகப் பெரிய உருளைக்கிழங்காக அறியப்பட்டது. அதன் பின்னர் மக்களின் பார்வைக்காக இந்த உருளைக் கிழங்கு இராட்சத லொறி மூலம் அமெரிக்கா முழுவதும் சுற்றிவந்தது. கடந்த ஆண்டு இறுதியில் இந்த சுற்றுப்பயணம் முடிந்தது.


இந்த நிலையில், தற்போது இந்த உருளைக்கிழங்கு இரட்டை படுக்கை கொண்ட சிறிய தங்கும் விடுதியாக மாற்றப்பட்டுள்ளது. உருளைக்கிழங்கை குடைந்து உருவாக்கப்பட்டுள்ள இந்த தங்கும் விடுதியில், சொகுசு இருக்கைகள், படுக்கை மற்றும் கழிவறை என அனைத்து வசதிகளும் உள்ளன. இது பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்து வருகிறது. இந்த விடுதியில் ஒரு நாள் தங்குவதற்கு 200 டொலர் (இந்திய மதிப்பில் ரூ.14 ஆயிரம்) வசூலிக்கப்படுகிறது. அப்படி இருந்தும் மே மாதம் முழுவதும் இந்த விடுதி முன்பதிவு செய்யப்பட்டு விட்டதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமதித்தால் நிலைமை மேலும் மோசமாகும்

# தகுதியானவர்களிடம் பொறுப்பளித்தால் பயங்கரவாதத்தை இல்லாதொழிக்கலாம்

## பீல்ட்மார்ஷல் பொன்சேகா தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டில் தற்கொலை குண்டுத் தாக்குதலை மேற்கொண்ட பயங்கரவாதிகளை முறியடிப்பதற்கு அரசாங்கம் இதுவரை போதியளவு நடவடிக்கையை முன்னெடுக்கவில்லையென ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா குற்றம்சாட்டியுள்ளார்.

கட்டுவாப்பிட்டிய பிரதேசத்தில் தற்கொலை குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட கிறிஸ்தவ தேவாலயத்தை பார்வையிட்ட பின்னர் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த ஆலயத்தைப் பார்வையிடும் போது கடந்த 10 வருடங்களுக்கு முன்னைய ஞாபகத்தைத்தான் ஏற்படுத்துகின்றது. இது பயங்கரமான ஒன்று எனவும் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்குத் தேவையான வேலைத்திட்டம் ஒன்றுக்கு வருவது அவசியமானது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நகைச்சுவையான பேச்சுப் பேசுவதற்குரிய சந்தர்ப்பம் அல்ல இது. பாதுகாப்புச் செயலாளருக்கு இராஜினாமா செய்யுமாறு ஜனாதிபதி கூறத் தேவையில்லை. அவர் அதனை தானாக செய்திருக்க வேண்டும்.

ஜனாதிபதி இதுவரையில் தன்னை அழைத்து எந்தவிதமான பேச்சுவார்த்தையும் நடத்தவில்லை. தகுதியான பொருத்தமானவர்களைப் பாதுகாப்புப் பிரிவுக்கு நியமிப்பதை விடுத்து இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது.

ஜனாதிபதியும் பிரதமரும் இணைந்து விரைவாக தீர்மானத்துக்கு வரவேண்டும். தாமதித்தால் நிலைமை இன்னும் மோசமாகும் எனவும் பொன்சேகா எச்சரித்தார். (இ-7)

# வதந்தி பரப்புகிறார் சுமந்திரன்

## ஹிஸ்புல்லா வேதனை



(ஏறாவூர்)

தன்னைப் பற்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் நாடாளுமன்றத்தில் வதந்தி பரப்பியுள்ளதாக கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் காட்டமாகத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து ஹிஸ்புல்லாஹ் விடுத்துள்ள காணொலியில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், தமிழ் அரசுக் கட்சியின் செயலாளரும் மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான கே.துரைராசசிங்கம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய சில உறுப்பினர்கள் எல்லோருமாக கடந்த 22 ஆம் திகதி என்னைச் சந்தித்தார்கள். அச்சந்திப்பில் அண்மைய குண்டு வெடிப்பு சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டது. அதனைத் தொடர்ந்து வடக்கு-கிழக்கு மாகாணங்களிலே ஏப்ரல் 24 ஆம் திகதி துக்க தினத்தை அனுஷ்டிப்பதென்று பேசிக் கொள்ளப்பட்டது. அதனையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், நான், இராஜாங்க அமைச்சர் அலிஸாஹிர் மௌலானா ஆகியோர் இணைந்து ஊடகங்களுக்கு ஒரு பேட்டியளித்தோம்.

அந்தப் பேட்டியிலே நான் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்கு அருகிலே இருந்து கொண்டு அவர் பேட்டி அளித்து முடிந்த கையோடு மிகத் தெளிவாக நான் பேட்டியளித்தேன். "வடக்கு-கிழக்கு மாகாணங்களிலே வாழ்கின்ற சகல இன மக்களும் இன,மத வேறுபாடுகளுக்கப்பால் தங்களுடைய கடைகளைப் பூட்டி, தொழிலிடங்களுக்குச் செல்வதைத் தவிர்த்து மக்களுக்காகப் பிரார்த்தனை செய்து ஒரு துக்க தினத்தை அனுஷ்டியுங்கள்" என்று நான் சொன்னேன். இதை சுமந்திரன் என்னருகில் இருந்து செவிமடுத்து தலையாட்டிக் கொண்டிருந்தார். அப்போது எந்தச் சந்தர்ப்பத்திலும் துக்க தினம் என்பது கடைகளைப் பூட்டுவதென்றோ அல்லது காரியாலங்களுக்குப் போவதில்லை என்றோ அன்றைய நாள் பிரார்த்தனைகளில் ஈடுபடுவதில்லை என்றோ ஒரு வார்த்தைகூட அவர் சொல்லவில்லை. அவை எல்லாவற்றையும் என்னோடு சேர்ந்து ஏற்றுக்கொண்டு விட்டு கடந்த 24.04.2019 அன்று நாடாளுமன்றத்திலே நான் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்ததாகக் கூறியிருக்கின்றார். இது ஒரு மனவேனையான விடயம். நான் ஒருபோதும் "ஹர்த்தால்" என்ற வார்த்தையைக் கூட பயன்படுத்தவில்லை. அவ்வாறு அவர் நான் பேசிய போது அவர் அதற்கு உடன்படாவிட்டிருந்தால் அந்த இடத்தில் அதனை மறுத்திருக்கலாம். ஆனால் அவர் வாயே திறக்கவில்லை. இதனையிட்டு நான் மிகவும் வேதனையடைகின்றேன் எனத் தெரிவித்துள்ளார். (இ-7)

கருத்து வேறுபாடுகளை கைவிட்டுவிட்டு

# பாதுகாப்பு பிரச்சினைகள் குறித்து கூடிய கவனம் செலுத்த வேண்டும்

## இலங்கை அரசியல்வாதிகளுக்கு அமெரிக்கத் தூதுவர் அறிவுரை



(கொழும்பு)

இலங்கையின் அரசியல் தலைவர்கள் தங்கள் கருத்துவேறுபாடுகளை கைவிட்டுவிட்டு முக்கிய பாதுகாப்பு பொருளாதார பிரச்சினைகள் குறித்து கவனம் செலுத்த வேண்டும் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா டெப்பிளிட்ஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

புளும்பேர்க் சர்வதேச ஊடகத்திற்கு அளித்துள்ள பேட்டியில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அரசியலை அடிப்படையாகக் கொண்ட நிலைப்பாடுகள், நடவடிக்கைகள் எடுக்கப்படுவதை காண முடிகின்றது. இந்தத் தருணத்தைப் பயன்படுத்தி அரசியல் ரீதியில் இலாபமடைவதற்கு பலர் முயல்கின்றனர்.

குண்டுத்தாக்குதலில் கொல்லப்பட்டவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தவர்கள் குறித்து ஆழமாகச் சிந்திக்குமாறு நான் இலங்கை அரசியல்வாதிகளைக் கேட்டுக்கொள்கின்றேன்.

நாட்டிற்கான விளைவுகள் குறித்து ஆழமாகச் சிந்திக்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன்

அதிநவீன உத்திகளை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ள இந்தத் தாக்குதல் குறித்த விசாரணைகளில் அமெரிக்காவின் எவ்.பி.ஐ. இலங்கை அதிகாரிகளுக்கு உதவி வருகின்றது.

கடந்த வருட இறுதியில் இலங்கையில் உருவாகிய அரசமைப்பு நெருக்கடி முதலீட்டாளர்களையும் சுற்றுலாப்பயணிகளையும் ஒரு கணம் சிந்திக்க வைத்தது எனவும் அமெரிக்கத் தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

புலனாய்வு விடயத்தில் பாரிய தவறுகள் இழைக்கப்பட்டதை அரசாங்கமே ஏற்றுக்கொள்கின்றது எனவும் குறிப்பிட்டுள்ள அமெரிக்கத் தூதுவர் இந்த பலவீனங்களை நிவர்த்தி செய்வதற்கான முயற்சிகள் இடம்பெற வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பந்த பாசம்

போதிவனம் அமைதியாக இருந்தது. காற்று லேசாக வீசிக் கொண்டிருந்தது. இலைகள் மெதுவாக அசைந்து கொண்டிருந்தன. போதிசத்துவர் தியானத்தில் ஆழ்ந்திருந்தார். கண்கள் மூடியிருந்தன.

கொஞ்சத் தூரத்தில் ஒரு நடுத்தர வயசு ஆசாமி. இவர் எப்பொழுது கண்களைத் திறந்து பார்ப்பார் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.சிறிதுநேரமாயிற்று! போதி சத்துவர் மெதுவாகக் கண்களைத் திறந்தார். இவர் உடனே அவர் காலில் விழுந்து வணங்கினார். உன் பெயர் என்ன? என்று கேட்டார் சத்துவர். அபிநந்தன்! என்றான். உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டார்.

தேவா! நான் ஒரு ஏழை. எனக்கு மனைவி, மூன்று பிள்ளைகள். பந்த பாசங்களால் மாட்டிக்கொண்டு நான் சித்திரவதைகளை அனுபவித்து விட்டேன். அதுதான் உங்களிடம் வந்தேன். நீங்கதான் என்னைத் துறவியாக்கிவிட வேண்டும். ஞான மார்க்கத்தைக் காட்ட வேண்டும் என்றான்.போதி சத்துவர் சிறிது யோசித்தார். அதன்பின் மெதுவாகக் கூறினார். அபிநந்தா! இந்த மரங்களிலே இருக்கின்ற இலை களைப் பார்! அதெல்லாம் ஏன் ஆடுகின்றது தெரியுமா? காற்று மோதுகின்றது... அதுதான் ஆடுகின்றது.

பாசங்கள் என்னும் காற்று வந்து மோதுகின்ற போதெல்லாம் மனித இலைகள் இப்படித்தான் ஆடும்! முதலில் உன்னுடைய மனதில் இருக்கின்ற பாசத்தை அறவே விட்டு விடவேண்டும்! அது முடியுமா உன்னால் என்று கேட்டார். முடியும் என்றான் இவன்.

சரி! அப்படி என்றால் நீ இன்றிலிருந்து போதிவனத்திலேயே தங்கலாம் என்று கூறினார் போதி சத்துவர்.அபிநந்தன் அங்கேயே தங்கினான். கொஞ்சநாள் ஆகிவிட்டது. போதி சத்துவர் குளிப்பதற்காக போய்க் கொண்டிருந்தார். வழியில் அபிநந்தனை கவனித்தார். அவன் பக்கத்தில் ஒரு நாய்க்குட்டி இருக்கின்றதை பார்த்தார். என்னப்பா இது நாய்க்குட்டி? என்றார்.

பிரபு! இந்த நாய் எப்பொழுதும் என்னை விட்டு விலகுவதே இல்லை! இதை மட்டும் கூட வைத்திருப்பதற்கு அனுமதி கொடுங்கள் என்றார். போதி சத்துவர் சிரித்துக் கொண்டே சென்றார். கொஞ்சநாள் ஆகிவிட்டது. இவர் போய்க் கொண்டிருக்கின்ற வழியில் அபிநந்தனைப் பார்த்தார். அபிநந்தன் நின்று கொண்டிருந்தான். அவன் பக்கத்தில் அந்த நாய்க்குட்டி நின்று கொண்டிருந்தது. அந்த நாய்க் குட்டிக்குப் பக்கத்தில் ஒரு சின்னப் பையன் நின்று கொண்டிருந்தான்.

அபிநந்தா! யார் இந்த சின்னப்பையன்! என்று கேட்டார். பிரபு இவன் என் மகன்! இந்த நாயை விட்டு விட்டு இவனால் இருக்க முடியாது. அதனால் இவனை மட்டும் என்று இழுத்தான். போதி சத்துவர் இப்பவும் சிரித்துக் கொண்டே சென்றார். இன்னும் கொஞ்சநாள் ஆகிவிட்டது. போதிவனத்து குளத்தி ற்கு பக்கத்தில் அபிநந்தன் நின்றுகொண்டிருந்தான். பக்கத்தில் ஒரு பெண்ணை போதிசத்துவர் பார்த்தார்.

அபிநந்தா! யார் இந்த பெண்? என்று கேட்டார். தேவா இவள் என்னுடைய மனைவி! என் மகனை விட்டு விட்டு இவளால் ஒரு விநாடிகூட இருக்க முடியாது. அதனால் இவளையும்...என்று இழுத்தான். போதி சத்துவர் சிரித்தார். சிரித்துக்கொண்டே இரண்டு பாத்திரங்களை எடுத்தார். ஒரு பாத்திரத்திலே நிறையப் பண்டங்களும் இன்னொரு பாத்திரத்திரம் வெறுமையாகவும் இருந்தது. பண்டங்கள் இருந்த பாத்திரத்தை தண்ணீரில் விட்டார். அது அப்படியே மூழ்கி அடியில் போய்விட்டது. வெறுமையாக இருந்த பாத்திரத்தை தண்ணீரில் விட்டார். அது மிதந்து கொண்டே இருந்தது. போதி சத்துவர் சொன்னார்.கனமான பாத்திரம் அமிழ்ந்து போய் விடும். வெறுமையான பாத்திரம் இருக்கே அதுதான் ஞான பாத்திரம். கனத்த பாத்திரம் இருக்கே அது பாசப் பாத்திரம் அபிநந்தா!

உதிர்ந்து போக விரும்புகின்ற ரோமங்கள் உதிர்ந்து போய் விடுகின்றன. உதிர விரும்பாத ரோமங்கள் நரைத்து விடுகின்றன. உதிர்ந்த முடி ஓடிப் போய் விடுகின்றது. உதிராத முடி தலையில் இருந்துகொண்டே கேலி செய்கின்றது. விலக்க முடியாத பந்தங்களும் அப்படிப்பட்டதுதான்! உன்னுடைய இதயம் பாசத்திற்காகவே படைக்கப்பட்டது. சித்திரவதை என்பது அதற்கு நீ கொடுத்தே தீர வேண்டிய விலை... சென்று வா! என்று கூறி அபிநந்தனுக்கு விடை கொடுத்து அனுப்பி விட்டார் போதி சத்துவர்.

அதனால் நான் துறவியாகப் போகின்றேன்... ஞானியாகப் போகின்றேன் என்றெல்லாம் சொல்வது சுலபம். ஆனால் அப்படி ஆகின்றது மிகவும் கஷ்டம்.அதுவெல்லாம் சாதாரண விடயமல்ல... மிகவும் பெரிய விடயம். மொட்டை அடித்துக்கொண்டு காவி வேட்டியை கட்டிவிட்டால் பந்த பாசம் தானாகப் போய் விடுமா? போகாது!ஆசையை விடுவதற்கு மனிதன் பழகவேண்டும். அதற்காகத்தான் சில புண்ணிய நதிகளில் போய் முழுகிவிட்டு நமக்கு பிடித்த எதையாவது விட்டுவிட்டு வரவேண்டும் என்று வைத்திருக்கின்றார்கள். சில பேர் காசு பணம் எல்லாம் தண்ணீரில் வீசி விடுவார்கள்.

மனது நிறைந்து இருக்கின்றது. இனிமேல் அடிக்கடி வந்து இப்படி முழுகலாம் என்று தோன்றுகின்றது! என்றார் இவர். ஏன்?என்று கேட்டார் இவர். நான் தண்ணீருக்குள் மூழ்கின்ற வரைக்கும் எதையும் விட்டுவிட வேண்டும் என்கின்ற ஆசையில் தான் போனேன்! ஆனால் தண்ணீருக்கு அடியில் போய் பார்த்தால் ஏற்கனவே யாரோ வீசியெறிந்த பவுண் வளையல் ஒன்று கையில் தட்டுப்பட்டது. உடனே என் முடிவை மாற்றிக் கொண்டேன். மனைவிக்கு உதவும் என்று சொல்லி அதை எடுத்து மடியில் சொருகிக் கொண்டு வெளியில் வந்துவிட்டேன்! என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏப்ரல் 21 இலங்கையில் கரிநாள்

## அஞ்சலி நிகழ்வில் முதல்வர் ஆனல்ட்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் பல்வேறு இடங்களில் கடந்த 21ஆம் திகதி இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பவங்களில் உயிரிழந்தவர்களுக்கு யாழ்.மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் தலைமையில் நேற்று முன்தினம் மாநகர முன்றலில் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து முதல்வர் தனது அஞ்சலி உரையை நிகழ்த்தினார். நாங்கள் பல்வேறு போராட்டங்களைச் சந்தித்தவர்கள், பல்வேறு துன்பங்களை சந்தித்தவர்கள், அதனூடாக உயிர் பிழைத்து வாழ்ந்து கொண்டிருப்பவர்கள். இருப்பினும் அவ்வாறான ஒரு கொடூரமான யுத்தம் நடந்து கொண்டிருக்கின்ற கால கட்டத்தில்கூட இந்த நாட்டிலே ஒரே நாளில் இவ்வாறான ஒரு கொடூரமான சம்பவம் நடைபெற்றதில்லை.

ஒரே நாளிலே கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் நட்சத்திர விடுதிகள் உள்ளிட்ட எட்டு இடங்களை மையப்படுத்தி இடம்பெற்ற இந்த தற்கொலைத் தாக்குதலை இலங்கை வாழ் ஒவ்வொரு மக்களும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். மதரீதியாகவோ, இன ரீதியாகவோ, சமூக ரீதியாகவோ எந்தவொரு மனிதரும் இதை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். எவரும் இதை போதிப்பதில்லை. ஏன் என்று சொன்னால் தீவிரவாதிகளுக்கு மதங்கள் கிடையாது. அவர்கள் மதத்தின் பேரால் ஏதோ ஒரு மதத்தை சொல்லி அவ்வாறு மேற்கொள்ளப்படுகின்ற ஈனச்செயல்களுக்காக நாங்கள் ஒரு சமூகம் சார்ந்தோ, ஒரு மதம் சார்ந்தோ, ஒரு மக்கள் கூட்டம் சார்ந்தோ ஒரு குறை பார்வை கொண்டிருக்க முடியாது. ஏன் என்று சொன்னால் அவர்களுக்கு அவர்களுடைய இலட்சியம் அந்த ஈனச் செயலை செய்வதே தவிர, அவர்களுக்கென்று ஒரு அடிப்படை கொள்கையோ, இலக்கோ கிடையாது. அவர்களுக்கு மதங்கள் கிடையாது. அவ்வாறான ஈனச் செயல்களை செய்பவர்களிடம் நாங்கள் அந்த நன்றியை எதிர்பார்க்க முடியாது"

இவ்வாறானதொரு துன்பியல் நிகழ்வு இலங்கைத்தீவிலே நடைபெற்ற மிகக்கொடூரமான ஒரு நிகழ்வு. ஏப்ரல் 21ஆம் திகதி ஒரு கரிநாளாக இந்த நாட்டிலே அடையாளப்படுத்தப்பட்டிருக்கின்றது. எனவே இத் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கும், அவர்களின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங் களையும், எங்களுடைய இரங்கல் ளையும் நாங்கள் சமர்ப்பிக்கின்றோம். இவ்வாறான ஒரு கருமம் அது எந்த மதத்திற்கும் இடம்பெறக் கூடாது. இன்று கிறிஸ்தவர்களை நோக்கிய இந்த அநியாயம், நாளை எமது சகோதர மதங்களுக்கோ, உறவுகளுக்கோ ஏற்படாத வண்ணம் நாங்கள் விழிப்பாக இருக்க வேண்டும்.

எமது மண்ணை, மக்களை, வணக்கஸ்தலங்களை பாதுகாப்பதற்கு ஒவ்வொரு குடி மகனும் திட சங்கற்பம் பூண வேண்டும். எங்களுக்கு அறிமுகமில்லாதவர்கள் இனங்காணப்பட்டால் பாதுகாப்பு தரப்பினருக்கு அல்லது உரிய அரச உயரதிகாரிகள் அல்லது மக்கள் பிரதிநிதிகளுக்கு அறிவித்து அதனூடாக நாங்கள் எமது பாதுகாப்பையும், இருப்பையும் உறுதிப்படுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## தந்தை செல்வாவின் நினைவு தினத்தில் கொல்லப்பட்டவர்களுக்கு அஞ்சலி!





தந்தை செல்வாவின் நினைவு தினமும் தேவாலயங்கள் மற்றும் ஹோட்டல்களில் நடத்தப்பட்ட தீவிரவாத தற்கொலைத்தாக்குதலில் கொல்லப்பட்டவர்களுக்குமான நினைவேந்தல் நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் பிரதான வீதியிலுள்ள தந்தை செல்வா சதுக்கத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, த.சித்தார்த்தன், ஈ. சரவணபவன், யாழ்.மாநகர முதல்வர் இ.ஆனல்ட் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் தந்தை செல்வாவின் சதுக்கத்தில் உள்ள சமாதிக்கு மேல் மலர்களைத் தூவி அஞ்சலி செலுத்தினர். பின்னர் தீவிரவாத தற்கொலைத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களுக்காக தீபங்களை ஏற்றியும், அமைதியாக நின்றும் பிரார்த்தனையில் ஈடுபட்டனர். (இ-7)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்:அச்சுவினி 4<br>கி.பா:34<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L, USA<br>எதிர்பார்ப்பு:A/L,பட்டதாரி. ஆங்கில அறிவு விரும்பத்தக்கது.<br>தொ.இ: B/2181 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்:திருவோணம் 3<br>கி.பா: 17 ¼<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:HND IT, BIT Reading<br>எதிர்பார்ப்பு:Engineer, Lecturer, Land Survior<br>தொ.இ: G/4232 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்:திருவாதிரை 2<br>கி.பா: 11செவ் 12 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:O/L,அரச தொழில்<br>எதிர்பார்ப்பு: அரசதொழில்<br>தொ.இ: B/2222 | பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்:சதயம் 4<br>கி.பா: 22<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:BA பட்டதாரி, ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு அரச,தனியார் சொந்த தொழில்<br>தொ.இ: G/4246 |
| பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்:அச்சுவினி 2<br>கி.பா: 75 செவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:Dip.in Electronic Electrical Engineer, UK PR<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: B/2229 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்:உத்தரம் 3<br>கி.பா: 13 ½ உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: B.Comபட்டதாரி<br>எதிர்பார்ப்பு: B.Sc பட்டதாரி, Doctor, Engineer, Accountant, Bank Manager<br>தொ.இ: G/4252 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்:உத்தராடம் 2<br>கி.பா: 78செவ் 7 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:Diploma, QS (Oman)<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: B/2238 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்:பூராடம் 1<br>கி.பா: 72 ¼ உயரம்: 5'<br>தகைமை/தொழில்:A/L,ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: அரசஉத்தியோகம்<br>தொ.இ: G/4254 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொ...
சேவைக் கட்டணமாக ரூபா 300 அற...


## ஐ.எஸ்.தீவிரவாதியிடம் நடத்தப்பட்ட விசாரணை மூலமே இலங்கைக்கு தாக்குதல் எச்சரிக்கை விடுக்கப்பட்டது

### இந்திய உளவுப் பிரிவு மேலதிக தகவல்

(கொழும்பு)

கோவையில் கடந்த 6 மாதங்களுக்கு முன்னர் கைதான ஐ.எஸ். தீவிரவாதியிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அடிப்படையிலேயே இலங்கைக்கு தாக்குதல் குறித்த எச்சரிக்கை விடுக்கப்பட்டதாக இந்தியா அறிவித்துள்ளது. இந்திய உளவுப் பிரிவை மேற்கோள்காட்டி பி.டி.ஐ. செய்திச் சேவை இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

ஐ.எஸ். அமைப்புக்கு ஆதர வாகச் செயற்பட்ட கோவையைச் சேர்ந்த மொஹமட் ஆசிப், ஜாபர் சாதிக் அலி, சாகுல் அமீட் ஆகியோரை இந்திய புலனாய்வுத்துறை அதிகாரிகள் கடந்த செப்டெம்பரில் கைது செய்தனர்.


அவர்களிடமிருந்து கைபற்றப்பட்ட காணொலிக் காட்சிகளில், இலங்கை குண்டு வெடிப்புக்குக் காரணமாக கருதப்படும் தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் தலைவர் அசீம் தொடர்பான காணொலியும் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் குறித்த காணொலிகளில் இருந்த தகவல்கள் மற்றும் கைதானவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அடிப்படையில், இலங்கையில் குண்டுத்தாக்குதல்கள் நடத்தப்படவுள்ளமை குறித்த விடயங்களை அறிந்ததாக இந்திய உளவுப் பிரிவு தெரிவித்துள்ளார்.

இந்திய உளவுப் பிரிவின் இந்தத் தகவலை அடிப்படையாகக்கொண்டே, இலங்கையை கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் எச்சரித்தாகவும் பி.டி.ஐ. செய்திச் சேவை வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இந்த எச்சரிக் கையை இலங்கையின் பாதுகாப்பு அதிகாரிகள் கண்டுகொள் ளாததன் காரணமாகவே இவ்வாறான தாக்குதலுக்கு இலங்கை உள்ளானதாக இந்திய உளவுப் பிரிவை மேற கோள்காட்டி பி.டி.ஐ. செய்திச் சேவை செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7)

## உலகிலேயே மிகவும் உயரமான கட்டடத்தில் இலங்கையின் தேசியக்கொடி காட்சிப்படுத்தல்



(டுபாய்)

நாட்டில் கடந்த 21ஆம் திகதி இடம்பெற்ற எட்டு குண்டு வெடிப்பு சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் ஆத்ம சாந்தி வேண்டி இலங்கையின் பல பகுதிகளிலும் பிரார்த்தனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந் நிலையில் குண்டு வெடிப்பில் உயிரிழந்தவர்களை நினைவு கூரும் வகையில் டுபாய் நாட்டிலுள்ள உலகிலேயே மிக உயரமான கட்டடமான புர்ஜ் கலீஃபாவில் இலங்கையின் தேசியக்கொடி காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.


கொழும்பு, நீர்கொழும்பு, மட்டக்களப்பு உள்ளிட்ட இடங்களின் எட்டு பகுதிகளில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவங்களில் சுமார் 250 பேர் உயிரிழந்துள்ளதுடன், 500 பேர் வரையில் காயமடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச காணிகளின் முகாமைத்துவம் சார்பான சட்டங்களும் அவை செயற்படும் படிமுறைமைகளும் பகுதி-II

கலாநிதி க.தவலிங்கம், தவிசாளர் எல்லை நிர்ணய ஆணைக்குழு
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

12



வனங்கள் மற்றும் தாவர பாதுகாப்பு தொடர்பாக தற்போதைய சட்டங்களுக்கு 1907 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க வனக் கட்டளைச் சட்டம் அடிப்படையாக கொள்ளப்பட்டுள்ளது. இது நடைமுறைக்கு வந்த தினத்திலிருந்து இது வரையில் பல்வேறு முறை (1918, 1931, 1935, 1945,1947,1951, 1954, 1966, 1979,1982,1988,1995 ஆண்டுகளில்) திருத்தம் செய்யப்பட்டுள்ளதுடன், இறுதியாக 2009 ஆம் ஆண்டிலே திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

நடைமுறையிலுள்ள வன பாதுகாப்பு கட்டளைச் சட்டமான வன பாதுகாப்பு ஒதுக்கம் மற்றும் நிலையான முகாமைத்துவம் என்பவற்றுடன் தொடர்புடைய சட்டங்களை பலப்படுத்துவதற்கும் அவற்றில் திருத்தங்களை மேற்கொள்வதற்கும் பாரிய பங்களிப்பினைச் செய்துள்ளது.

> சிங்கராஜவனமானது மூன்றாம் இலக்க தேசிய மரபுரிமைகள் பூமி கட்டளைச் சட்டத்தின் கீழ் முதன் முதலில் பிரகடனப்படுத்தப்பட்ட வனப் பிரதேசமாகும்.

மூன்றாம் இலக்க தேசிய மரபுரிமைகள் பூமி கட்டளைச் சட்டமானது 1988 ஆம் ஆண்டிலே அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் முதல்தர சூழலியல் முறைமைகள், மரபணு வளங்கள் மற்றும் பிரசித்திபெற்ற இயற்கை தன்மைகள் என்பவற்றிற்கான பாதுகாப்பு வழங்கப்படுகின்ற வனப்பிரதேசங்களுக்கு விசேட பாதுகாப்பொன்று பெற்றுக்கொடுக்கப்படுகின்றது. உலக மரபுரிமையாக தற்போது பிரகடனப்படுத்தப்பட்டுள்ள சிங்கராஜவனம் இச்சட்டத்தின் கீழ் முதன் முதலில் பிரகடனப்படுத்தப்பட்ட வனப் பிரதேசமாகும். இச் சட்டமும் வனப் பாதுகாப்புத் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

### வனப்பாதுகாப்புச் சட்டம்

வன வளத்தின், வளர்ப்பின் பாதுகாப்பு மற்றும் நிலையான மேலாண்மை ஒருங்கிணைப்பு போன்றவற்றிற்கு ஒரு விதிமுறை உண்டாக்குவதே இச் சட்டத்தின்நோக்கமாகும். மேலும் வன உற்பத்தியை தகுந்த முறையில் பயன்படுத்துதல், மரம் மற்றும் வன உற்பத்தியைக் கொண்டு செல்லல், இடம் மாற்றல் போன்றவற்றை கட்டுப்படுத்துதல் போன்றவையும் இச் சட்டத்துள் உள்ளடங்கியுள்ளது.

### ஒதுக்கப்பட்ட வனப்பிரதேசம் - Forest Reserved

> காணி மீள ஏற்றல் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஏற்கப்பட்ட அரச காணிகள், தரவைக் காணிக்கட்டளைச் சட்டம் மற்றும் காணி நிர்ணயக் கட்டளைச் சட்டம் ஆகிய கட்டளைச் சட்டங்களால் பிரகடனப்படுத்தப்பட்ட அரச காணிகள், காணி சுவீகரிப்புச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட அரச காணிகள் போன்ற எல்லா அரச காணிகளும் வனப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒதுக் கப்பட்ட வனப்பிரதேசமாகக் (Forest Reserved) கருதப்படும்.

காணி மீள ஏற்றல் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஏற்கப்பட்ட அரச காணிகள், தரவைக் காணிக்கட்டளைச் சட்டம் மற்றும் காணி நிர்ணயக் கட்டளைச் சட்டம் ஆகிய கட்டளைச் சட்டங்களால் பிரகடனப்படுத்தப்பட்ட அரச காணிகள், காணி சுவீகரிப்புச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட அரச காணிகள் போன்ற எல்லா அரச காணிகளும் வனப்பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட வனப்பிரதேசமாகக் **(Forest Reserved)** கருதப்படும்.

ஆரம்பத்தில் வன பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் என்பவற்றால் நிர்வகிக்கப்படாத ஒதுக்கப்பட்ட காடுகள் அரச அதிபர்/ பிரதேசச் செயலாளரினல் நிர்வகிக்கப்பட்டன. ஆனால் அவையும் தற்போது வன பாதுகாப்புத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அவ்வாறு இருந்த போதிலும் தேவையான சந்தர்ப்பங்களில் அரச அதிபர்/ பிரதேசச் செயலாளர்களுக்கு இந்தக்காடுகளின் பாதுகாப்பிற்காக வனப்பாதுகார்ப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செயற்படுத்துவதற்கு தடைகள் ஏதும் இருக்காது என சட்டத்தில் கூறப்பட்டுள்ளது.

### பாதுகாக்கப்பட்ட வனப்பிரதேசம் -Conservation of Forest

சம்பந்தப்பட்ட அமைச்சரால் வனப் பிரதேசமாக ஒதுக்கப்பட்ட அரச காணிகளின் எந்தவொரு குறிப்பிட்ட பகுதியும் அல்லது முழுவதையும் ஒரு பாதுகாக்கப்பட்ட வனப்பிரதேசமாக **(Conservation of Forest)** வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்த முடியும். அவ்வாறு அறிவிக்கப்பட்ட காணிகள் யாவும் அதன் பின் வனப்பாதுகாப்பு ஆணையாளர் நாயகத்தின் மேலாண்மையின் கீழ் கொண்டுவரப்படும்.

காடுகளாக அறிவிக்கப்பட்ட காணிகளை பராதீனப்படுத்தும் **(alienation)** அதிகாரம் வனப் பாதுகாப்பு திணைக்களத்திற்கு கிடையாது. ஆனால் புதுப்பிக்கத்தக்க வருடாந்த அனுமதிப் பத்திரங்கள் மூலம் காட்டு நிலங்களை வனப் பாதுகாப்பு திணைக்களம் விடுவிக்க முடியும். மேலும் கண்டிப்பாக காடுகளாக ஒதுக்கப்பட்ட இடங்கள் மற்றும் பாதுகாப்பிற்கான நிலங்கள் ஆகியவற்றை விடுவிக்க முடியாது. என்றாலும் ஒரு பொது நோக்கத்திற்காக நிலம் தேவைப்பட்டால் அதனை ஆராய்ந்து வன பாதுகாப்பு திணைக்களம் நிலத்தை விடுவிக்க முடியும்.

### 30. மகாவலி அதிகாரசபைச் சட்டம்

மகாவலி அதிகாரசபைச் சட்டம் 1979 ஆம் வருடத்தின் 23ஆவது சட்டமாகும். அதன் முக்கிய நோக்கங்கள் உணவு உற்பத்தி, நீர்சக்தி உற்பத்தி, காணியில்லாதவருக்கு காணி வழங்கல் மற்றும் வெள்ளத்தடுப்பு ஆகியனவாகும். குறித்த சட்டத்தின் அதிகார வரம்பினுள் இருக்கும் வனங்கள், வனவிலங்குகள், நீர்ப்பாசனம், விவசாய சேவைகள், விவசாயம் போன்றவற்றின் நிர்வாகமும் அவற்றைக் கொண்ட நிலங்களும் மகாவலி அதிகார சபையின் கட்டுப்பாட்டுக்குள் வருவன.

> மகாவலி அதிகாரசபைச் சட்டம் 1979 ஆம் வருடத்தின் 23ஆவது சட்டமாகும். அதன் முக்கிய நோக்கங்கள் உணவு உற்பத்தி, நீர்சக்தி உற்பத்தி, காணியில்லாதவருக்கு காணி வழங்கல் மற்றும் வெள்ளத்தடுப்பு ஆகியனவாகும். குறித்த சட்டத்தின் அதிகார வரம்பினுள் இருக்கும் வனங்கள், வனவிலங்குகள், நீர்ப்பாசனம், விவசாய சேவைகள், விவசாயம் போன்றவற்றின் நிர்வாகமும் அவற்றைக் கொண்ட நிலங்களும் மகாவலி அதிகார சபையின் கட்டுப்பாட்டுக்குள் வருவன.

குறித்த சட்டத்தின் பிரிவு 3இன் கீழ் மகாவலிக்குப் பொறுப்பான அமைச்சர் ஜனாதிபதியின் ஒப்புதலுடன் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் கட்டளையின் மூலம் எந்த ஒரு நிலப் பகுதியையும் மகாவலி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் வரும் விசேட நிலப்பகுதியாகப் பிரகடனப்படுத்தலாம். குறித்த கட்டளைக்கு பாராளுமன்றத்தால் பின்னர் ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும். பிரகடனப்படுத்தப்பட்ட குறித்த விசேட நிலப்பரப்பில் பிரிவு 13இன் கீழ்க் குறிப்பிடப்படும் பலதையுஞ் செய்யலாம்.

36 விடயங்கள் பிரிவு 13இல் அடையாளம் காட்டப்பட்டுள்ளன. முக்கியமாக அப்பிரிவின் கீழ் மகாவலி அதிகார சபையானது ஒரு விசேட நிலப்பரப்பினுள் காணப்படும் காணிகளில், தோட்டங்களில் அல்லது நிலப்பகுதியில் மக்களைக் குடியிருத்த சகல நடவடிக்கைகளையும் எடுக்க முடியும். அவ்வாறு குடியேற்றப்படுவோர் தாம் பெற்ற காணிகளை, தோட்டங்களை, நிலப்பகுதிகளை மேம்படுத்துவதற்கு அதிகாரசபை அவர்களுக்கு சகல பண உதவிகளையும் மற்றைய உதவிகளையும் நல்கலாம்.

காணி விடயத்தில் மகாவலி அதிகார சபையானது காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம், அரச காணிகள் கட்டளைச் சட்டம், வன கட்டளைச் சட்டம் மற்றும் உரித்தினை மீளப் பெற்றுக் கொள்ளும் சட்டம் என்பவற்றின் பிரகாரம் செயற்படுகின்றது. அதன் பிரகாரம், காணி கையகப்படுத்தல், விவசாய குடும்பங்கள் மற்றும் விவசாயம் சாராத குடும்பங்கள் என்பவற்றுக்கு காணிகளை பகிர்ந்தளித்தல், அரச மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்கள், முதலீட்டு கருத்திட்டங்கள் மற்றும் வணிகச் செயற்பாடுகள் என்பவற்றுக்கென காணிகளை பகிர்ந்தளித்தல் போன்ற கருமங்களை மேற்கொண்டு வருகின்றது.

### மகாவலி அபிவிருத்தி திட்டம்

1950 களின் இறுதிப் பகுதியில் இலங்கைக்கு வருகை தந்த ஐக்கிய அமெரிக்க தூதுக் குழு மற்றும் நீர்ப் பாசன திணைக்களம் என்பன இணை ந்து ஓர் ஆய்வை மேற்கொண்டன. அந்த ஆய்வின் அடிப்படையில் மகாவலி கங் கையின் நீரை உலர் வலயத்தின் நீர்த் தட்டுப்பாடு நிலவி வரும் பிரதேசங்களுக்கு திசை திருப்புவதற்கென மகாவலி ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்தித் திட்டம் என்ற பெயரில் ஓர் அறிக்கை 1961 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வெளியிடப்பட்டது. இந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு மகாவலி கங்கை அண்மித்த பிரதேசங்களில் விவசாயத்திற்கென நீர்ப்பாசன வசதிகளை திட்டமிடுதல் மற்றும் நீர் மின்சார உற்பத்தி ஆகிய யோசனைகளை உள்ளடக்கிய மகாவலி அபிவிருத்தி பெருந்திட்டம் 1968 இல் வெளி யிடப்பட்டது. ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் மற்றும் உலக உணவு விவசாய தாபனம் என்பவற்றால் கூட்டாக இணைந்து தயாரித்த இந்த அறிக்கை நீர்ப்பாசன திணைக்களத்தினால் முன்வைக்கப்பட்டது.

அந்தத் திட்டத்தின் முதலாவது செயற்பாடாக விநாடியொன்றுக்கு 57 கன மீற்றர் நீரை உலர் வலயத்திற்கு விடுவிக்கும் நீர் மின் உற்பத்தி மற்றும் விவசாய மேம்பாட்டுக்கான பொல்கொல்ல திசை திருப்பல் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அதனையடுத்து 1959- 1977 கால கட்டத்தின் போது இத்திட்டத்தின் இரண்டாவது கட்டமாக போவதன்ன நீர்த்தேக்கம் நிர்மாணிக்கப்பட்டு, அங்கு ஒரு நீர் மின் உற்பத்தி திட்டமும் உருவாக்கப்பட்டது. அதன் மூலம் வெளியிடப்படும் நீர் கலாவெவ கீழ் பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்கென பயன்படுத்தப்பட்டது.

முப்பது வருட காலப் பிரிவை கொண்ட ஆரம்ப திட்டத்தை ஆறு வருடங்களுக்குள் பூர்த்தி செய்யும் துரிதப்படுத்தப்பட்ட மகாவலி அபிவிருத்தி திட்டம் 1978 இல் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. அதன் மூலம் பெரிய பிரித்தானியா, சுவீடன், மேற்கு ஜேர்மனி, கனடா போன்ற நாடுகளிலிருந்து கிடைத்த உதவியை பயன்படுத்தி விக்டோரியா, மாதுறுஓய, ரன்தெனிகல - ரன்தெம்பே , கொத்மலை ஆகிய நீர்த்தேக்கங்கள் நிர்மாணிக்கப்பட்டன. அந்த நீர்த்தேக்கங்களுக்கூடாக மகாவலி B, C, G, H வலயங்களில் அமைந்திருந்த பாரிய நிலப் பரப்புக்களில் புதிதாக விவசாயம் மேற்கொள்ளப்பட்டது.

அதனையடுத்து நாட்டில், உணவு உற்பத்திச் செயன்முறை வேகமடைந்ததுடன், அதனுடன் இணைந்த விதத்தில் நீர் மின்சார உற்பத்தியும் விருத்தி செய்யப்பட்டது.

அதனையடுத்து, மகாவலி பெருந் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் சமூக, பொருளாதார, அரசியல், சுற்றாடல் நிலைமைகளை அனுசரித்து ஹூருலுவெவ, மெதிரிகிரிய, உடவளவே, ரம்பக்கன்ஓயா, வெலிஓயா, பிரதேசத்தை உள்ளடக்கிய L வலயம் ஆகிய பிரதேசங்களும் மகாவலி வலயங்களாக பிரகடனப்படுத்தப்பட்டன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

232



பாலகங்காதர திலகர்

## பிரித்தானியர் அதிகாரமும் தமிழரின் ஆட்சியுரிமை நிராகரிப்பும் (கி.பி. 1833-கி.பி. 1948)

சமூக,பொருளாதார விடயங்களில் அநேகமாக ஈடுபட்டிருந்த வேறு சில அமைப்புக்களையும் இங்கு குறிப்பிடுதல் பயனுள்ளதாகும். தமிழரின் சார்பில் முனைப்பான அரசியல் பாத்திரத்தை வகித்த யாழ்ப்பாணச் சங்கத்துக்கு இவை ஆதரவளித்தமையும் குறிப்பிடக்கூடியது.

இவை ஐக்கிய நாணய சங்கம் (1913), யாழ்ப்பாண கூட்டுறவுச்சங்கம் (1918), திருகோணமலை மாதர் ஐக்கிய சங்கம் (1920), மட்டக்களப்புச் சுங்கம் (1920), முல்லைத்தீவு மகாஜன சபை (1921) ஆகும்.

இவற்றுள் முல்லைத்தீவு மகாஜன சபை 1921இல் உருவாக்கப்பட்ட தமிழர் மகாஜன சபையிலிருந்து தோன்றியிருக்கலாம். தமிழரால் நிறுவப்பட்ட அரசியல் அமைப்புக்களுள் தமிழர் மகாஜன சபையே அதிதீவிரமானது.

இவ் அத்தியாயத்தின் அடுத்த பகுதியில் தமிழ்த் தேசியவாதத்தின் மைய அரசியல் பிரச்சினை சம்பந்தமாக இச் சபையைப் பற்றி ஆராயப்படும்.

இந்த சமூக,பொருளாதார அமைப்புக்கள் முழுத்தமிழர் அமைப்புக்களிடையேயும் தோற்றம் பெற்றமை, அவற்றின் ஒருமித்த சமூக, பொருளாதார ஆர்வங்களும் அவற்றின் பரஸ்பர ஒற்றுமையும் ஒருமைப்பாடும் அவற்றின் முனைப்பான அரசியற் செயற்பாட்டிற்கு சாதகமானதொரு சூழ்நிலையை உருவாக்க உதவின என்பதை எம்மால் காணக்கூடியதாக உள்ளது.

இப்பேர்ப்பட்ட சூழ்நிலையில் யாழ்ப்பாணத் தமிழர் சங்கம் தமிழர் யாவரினதும் ஒருமித்த அரசியல் குரலாக இயங்கி தமிழரின் அரசியல் உரிமைகளையும் சுதந்திரத்தையும் மீள வென்றெடுக்க ஒரு ஸ்திரமான நிலையை எடுக்கக் கூடியதாகவும் இருந்தது.

இந்த அமைப்பு இருபதாம் நூற்றாண்டின் முதலிரு தசாப்தங்களிலும் செயற்பட்டது. தொடர்ந்து தமிழர் மகாஜன சபை ஒரு பரந்து பட்ட தமிழர் அரசியல் முன்னணியாக உருவெடுத்து, யாழ்ப்பாணச்சங்கத்தின் பணிகளை பெரும்பாலும் கையேற்றுக்கொண்டது.

இந்த வளர்நிலைகளையிட்டு மேலும் விபரமாகப் பார்ப்பதற்கு முன்னர் இலங்கைத் தமிழ்த் தேசியவாதமானது பிரதானமான தமிழ்ப் பிரதேசங்களில் வாழ்ந்த உள்ளூர் உயர்மட்டத்தினரினாலே தான் ஆரம்பத்தில் வழிநடத்தப்பட்டது என்பதை நாம் மனதிற் கொள்வது அவசியம்.

கொழும்பிலும் ஏனைய தெற்கு பிரதேசங்களிலும் நிலைகொண்டு விட்ட தமிழ் உயர் மட்டத்தினர் இலங்கையின் அனைத்து சமூகங்களையும் உள்ளடக்கும் இலங்கை தேசியவாதத்தை ஆதரித்தனர்.

எனவே இவர்களுக்கும் இவர்களையொத்த சிங்களவருக்கும் நெருங்கிய [illegible] துடன் இவர்கள் குடியேற்ற ஆட்சியிலிருந்து சுதந்திரத்தை மீள வென்றெடுப்பதற்காக சிங்களவர்களுடன் தோளோடு தோள் சேர்ந்து உழைத்தனர். சிங்களவருக்கும் தமிழருக்கும் இடையில் ஒரு பெரிய பிளவு ஏற்படும் வரையில் இது தொடர்ந்தது.

### 1910 ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சீர்திருத்தமும் தமிழரும் சிங்களவரும்

1833 இல் உருவாக்கப்பட்ட கோல்புறூக் அரசியலமைப்பு, சட்ட நிர்வாக சபை, சட்ட நிருபண சபை ஆகியவற்றை உருவாக்கி அவை ஒ்ரு சில சிறு திருத்தங் களைப் பெற்றுக் [illegible] எண்பது ஆண்டுகள் அதிகாரத்தில் இருந்தது.

வருடங்கள் கழிய சட்ட நிருபண சபையின் செல்வாக்கும் அதிகாரமும் அதிகரித்துச் சென்றபோதும் அது குடியேற்ற அதிகாரிகளின் பெரும்பான்மைக் கட்டுப்பாட்டினுள் தான் இருந்தது.

எனவே சட்ட நிருபண சபையின் உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவர், கொள்கை, சட்டம், நிதி எனும் பெரும் விடயங்களில் தமக்குக்கூடிய செல்வாக்கு இருக்கும் வகையில் தமது எண்ணிக்கையை அதிகரிக்குமாறு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்தனர்.

அப்போது சில தருணங்களில் அவர்கள் தமது கருத்தை மிக வெளிப்படையாகவே தெரிவித்தனர். இருந்த போதிலும் நிதியைப் பொறுத்த வரையில் தான் சபையினது அதிகூடிய தாக்கம் இருந்திருக்க வேண்டும்.

தேசாதிபதியின் உடன்பாடின்றி எந்தவொரு ஏற்பாடும் மேற்கொள்ளப்படமுடியாதெனினும் எல்லா நிதிப் பிரச்சினைகளும் சபைக்கு முன் வைக்கப்படுதல் வழமையான நடைமுறையாகி விட்டிருந்தது.

பிரேரிக்கப்படும் நிதி ஏற்பாடுகள் யாவும் இறுதியாகத் தேசாதிபதியினால் அங்கீகரிக்கப்படுவதற்கு முன்னர் பொது விவாதத்திற்காக சட்ட சபையின் முன்வைக்கப்படல் வேண்டுமென்பது அரச செயலாளரின் விருப்பமாக இருந்தமையால் இந்நிலைமை அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாகவும் இருந்தது.

சேர். ஹென்றி மக்கலம் (1907-13) இந்த நடைமுறையை மேலும் முன்னெடுத்து ஒரு நிதிச் செயற்குழுவை உருவாக்கினார்.

புதிய சபையின் கீழ் தொடர்ந்து இயங்கிய இந்தக் குழுவில் எல்லா உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவர்களும் குடியேற்றச் செயலாளர், வரி கட்டுப்பாட்டாளர், பொருளாளர் ஆகியோரும் இடம்பெற்றனர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மதத்துக்காக உயிரைத்தியாகம் செய்ய உணர்வு ஊட்டப்படும் இடம் மத்ரஸா

## ஓமல்பே சோபித தேரர்

(கொழும்பு)

இஸ்லாமிய அடிப்படைவாத கருத்துக்கள் கற்றுக் கொடுக்கும் கல்வி நிறுவனங்கள் குறித்த பொறுப்பை அரசாங்கம் ஏற்க வேண்டும் என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைவர் கலாநிதி ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.

அம்பிலிப்பிட்டிய போதிராஜ விகாரையில் இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கை யில் தேரர் மேற்கண்டவாறு கூறினார்.



தற்கொலைத் தாக்குதலில் ஒருவர் ஈடுபடுவதாக இருந்தால், அவரது உள்ளம் அதற்காகவே பண்படுத்தப்பட்டிருக்க வேண் டும்.

இந்த நாட்டில் காணப்படு கின்ற இஸ்லாமிய மத்ரஸாக்களி ல்தான் மதவாதம் ஊட்டப்படு கின்றது. சிறுவயது முதலே மத்ர ஸாக்களில் இந்த தீவிரவாத சிந்தனை விதைக்கப்படுகின்றது. தனது உயிரை மதத்துக்காக தியாகம் செய்ய போதிக்கப்படும் முக்கிய நிலையமே இந்த மத்ர ஸாவாகும்.

இந்த மத்ரஸாக்களில் ஆங் கிலம், தமிழ், அரபு என்பன மாத் திரமே போதிக்கப்படுகின்றன. சிங்களம் போதிக்கப்படுவதி ல்லை.

இந்த மத்ரஸாக்களுக்கான ஆலோசனைகள் கல்வி அமைச் சிடமிருந்து கோரப்படுவதுமி ல்லை. அவர்களுக்கு செல்ல அனுமதிப்பதுமில்லை.

கிழக்கு மாகாணத்தில் சரீஆ பல்கலைக்கழகம் ஒன்று ஆரம்பி க்கப்பட்டுள்ளதாகவும் தேரர் சுட் டிக்காட்டினார்.

எமது நாட்டில் எதிர்காலத்தில் இந்த அடிப்படை வாதத்தை இல் லாமல் செய்ய வேண்டுமாக இருந்தால், இந்த மத்ரஸா பற்றிய கண்காணிப்பை கல்வி அமை ச்சு மேற்கொள்ள வேண்டும் எனவும் தேரர் மேலும் தெரிவித் தார். (இ-7)

# தற்கொலைக் குண்டுதாரியின் தாய் காத்தான்குடியில் கைது

(காத்தான்குடி)

மட்டக்களப்பு சீயோன் தேவா லயம் மீது தற்கொலை குண்டுத் தாக்குதலை நடத்தியவர் புதிய காத்தான்குடியைச் சேர்ந்த முக மது நாசார் முகம்து ஆசாத் அல் லது றில்வான் என ஏற்கனவே அடையாளம் காணப்பட்டிருந் தார். அவரின் தாயாரே தாக்கு தல்தாரியை அடையாளம் காண் பித்துள்ளதாகவும் தாயாரை நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு கைது செய்துள்ளதாகவும் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற தற்கொலை குண்டுத் தாக்குதல் தொடர்பில் குற்றத்தடுப்பு பிரிவு மற்றும் பயங்கரவாத குற்றத் தடுப்பு பிரிவினர் தொடர் விசா ரணைகளை முன்னெடுத்திருந் தனர்.

நேற்று முன்தினம் இரவு புதிய காத்தான்குடி 4 ஆம் குறு க்கு ஒழுங்கையிலுள்ள றில்வா னின் தாயாரின் வீட்டை குற் றப்புலனாய்வுப் பிரிவினர் முற் றுகையிட்டு, அவரிடம் தற் கொலை குண்டுதாரியின் ஒளிப் படத்தை காட்டியபோது தாயார் அவரை அடையாளம் காட்டியுள் ளார். அதனைத் தொடர்ந்து தாய் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த குண்டுதாரி கல்மு னையில் திருமணம் முடித்துள்ள தாகவும் தெமட்டகொடையில் வசித்துவந்துள்ளதாகவும் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின் றன. (இ-7)

# வெசாக் தின நிகழ்வுகள் இரத்து

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர கோட்டை நாக விகாரை, ஸ்ரீ ஜெயவர்த்த னபுர கோட்டை மாநகர சபை மற்றும் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர கோட்டை செயலக காரியாலயம் ஆகியன ஒன்றிணைந்து வருடந் தோறும் நடத்திவரும் வெசாக் பண்டிகை தின கொண்டாட்ட த்தை இம்முறை இரத்துச்செய் துள்ளதாக, ஸ்ரீ ஜெயவர்த்தனபுர கோட்டை நாக விகாரையின் தலைவர், பண்டிதர் தர்ஷனபதி பூஜிய வதுருவில சிறி சுஜாத தெரிவித்துள்ளார்.


குறித்த விகாரையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக விலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கோட்டை சந்தியிலிருந்து ஜுபிலி பகுதி வரையில் முன் னெடுக்கப்படும் வெசாக் தின நிகழ்வுகள் அனைத்தும் கைவிட ப்பட்டுள்ளதென்றும் விசேட ஆன் மீக உரைகள் மற்றும் போதனை கள் மட்டுமே இடம்பெறுமென் றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் நாட்டில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் இடம் பெற்ற தொடர் குண்டுவெடிப்பு சம் பவங்களால் நாடு அசாதாரண நிலையில் இருந்து வருவதனா லேயே இந்த முடிவு எடுக்கப்ப ட்டதாக அவர் தெரிவித்தார். (இ-7)

# பாகிஸ்தான் உதவி வழங்கும்

(இஸ்லாமாபாத்)



இலங்கையில் இடம்பெற்ற தொடர் குண்டுத் தாக்குதல்களு க்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுக்க உதவிகளை வழ ங்குவதாகவும் குறித்த தாக்கு தல்களில் உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு தனது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்வதாகவும் பாகிஸ்தான் பிர தமர் இம்ரான் கான் தெரிவித் தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங் கவுடன் தொலைபேசியின் மூலம் உரையாடும் போது இவ்வாறு தெரிவித்துள்ளார். (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1704

### குமணன்

உங்கள் உடம்பில் கோடிக்கணக்கான செல்கள் இருந்தாலும் ஒரு செல்லில் கூட சிம் கார்ட் போட்டு பேச முடியாது... அதுதான் வாழ்க்கை வரட்டா




### ராசாத்தி

மேடம் என் மாமியாரை ஒரு வாரமா காணலை ஒரு வாரமா என்ன பண்ணீங்க, வேற வழியில்லாம ஒரு வாரமா என் நாத்தனாரோட சண்டை போட்டிட்டிருந்தேன்



### ராகுலன்

டை அடிச்ச மண்டையும் நண்பர்கள் போட்ட சண்டையும் ரொம்ப நாள் நிலைச்சதா சரித்திரமே இல்லை



### கதிரவன்

ஆனந்தமான வாழ்க்கை வாழ ஆடம்பரம் தேவையில்லை, அன்பானவர்கள் நம்முடன் இருந்தாலே போதும்



### விமலன்

வீட்டில் ஸ்டவ் ரிப்பியர் ஆனா மனைவிக்கு சந்தோசம், பிரிட்ஜ் ரிப்பியர் ஆனா கணவனுக்கு சந்தோசம்



### கந்தன்


ஏங்க மதுரைக்கு துரு பஸ் இருக்கா? இல்ஷீங்க எல்லாமே பெயிண்ட் அடிச்ச பஸ்தான்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளுநர்-பேராயருடன் சந்திப்பு



(கொழும்பு)

வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் நேற்று கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையை பேராயரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்தித்தார்.

கடந்த உயிர்த்த ஞாயிறு மத வழிபாடுகளில் ஈடுபட்டிருந்த கிறிஸ்தவர்கள் முகம்கொடுக்க நேர்ந்த துன்பியல் நிகழ்வு குறித்து வடமாகாண மக்கள் சார்பில் தன்னுடைய ஆழ்ந்த கவலையை பேராயரிடம் ஆளுநர் தெரிவித்தார். (இ-7)

### தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

# பொலிஸ் உயர் பதவிகளில் அதிரடி மாற்றம்!

(கொழும்பு)

**நாட்டில் ஏற்பட்டுள்ள, எதிர்காலத்தில் ஏற்படவுள்ள, பாதுகாப்பற்ற நிலைமை மற்றும் தேசிய பாதுகாப்புக்கான அச்சுறுத்தல் உள்ளிட்ட விடயங்களை ஆராய்ந்து பொலிஸ் திணைக்களத்தின் உயர் பதவிகள் பலவற்றில் மாற்றம் செய்ய தேசிய பொலிஸ் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.**

அதன்படி உயர் பொலிஸ் அதிகாரிகள் பலரை ஆணைக் குழு இடமாற்றியுள்ளது. வேறு நடவடிக்கைகளுக்கு உட்பட்டு குறித்த உயர் பொலிஸ் அதிகாரிகளை இடமாற்ற நேற்று முன்தினம் கூடிய தேசிய பொலிஸ் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

அதன்படி புதிய மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக இதுவரை வடமேல் மற்றும் வடமத்திய மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக கடமையாற்றிய அபே சிறி குணவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

மேல் மாகாணத்தின் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக இருந்த நந்தன முணசிங்க வடமேல் மற்றும் வட மத்திய மாகாணங்களுக்குப் பொறுப்பாக இடமாற்றப்பட்டுள்ளார்.

கொழும்பு பிரதிப் பொலிஸ்மா அதிபர் பதவியிலும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி கொழும்பின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் பத்திநாயக்க பொலிஸ் அபிவிருத்தி பகுதிக்கு மாற்றப்பட்டு, கொழும்புக்கு பொறுப்பாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் மேல் மாகாணத்தின் வடக்குக்குப் பொறுப்பாக இருந்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் புத்தளத்துக்கு மாற்றப்பட்டு அந்த இடத்துக்கு புத்தளம் பிரதிப் பொலிஸ்மா அதிபராக இதுவரை இருந்த சம்பிக்க சிறிவர்த்தனவை நியமிக்க பொலிஸ் ஆணைக் குழு தீர்மானித்துள்ளது.

நீர்கொழும்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக இருந்த சந்தன அத்துகோரள திருகோணமலைக்கு மாற்றப்பட்டு திருமலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே.கட்டுபிட்டிய நீர்கொழும்புக்கு பொறுப்பாக அழைக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு வடக்கு பொலிஸ் அத்தியட்சகர் சஞ்ஜீவ பண்டார சீத்தாவக்க பொலிஸ் பிரிவுக்கு மாற்றப்பட்டு கொழும்பு வடக்குக்குப் பொறுப்பாக ஏ.எம்.யூ. சந்தன நியமிக்கப்பட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மத்திய பிரிவுக்குப் பொறுப்பாக இருந்த பொலிஸ் அத்தியட்சகர் ஜே.ஏ.யூ.பி. ஜயசிங்க எல்பிட்டிய பொலிஸ் பிரிவுக்கு மாற்றப்பட்டு எல்பிட்டிய பொலிஸ் அத்தியட்சகர் தல்துவ கொழும்பு மத்திய பிரிவுக்கு அழைக்கப்படவுள்ளார்.

அத்துடன் பொலிஸ் அத்தியட்சகர் ரொஷான் டயஸ், களனி பொலிஸ் பிரிவுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதற்கான பொலிஸ் அறிவித்தல் விரைவில் வெளியிடப்படவுள்ளது. (இ-7)

# பள்ளிவாசல்களை இலக்குவைத்த சஹ்ரான் தலைமையிலான குழு

(கொழும்பு)

இலங்கையில் பதிவாகியுள்ள குண்டு வெடிப்புக்கள் தொடர்பாக, தமது கொள்கைக்கு மாற்றான கொள்கைகளையுடைய முஸ்லிம் பள்ளிவாசல்களை இலக்கு வைத்து தாக்குதல் நடத்த அடிப்படைவாத கொள்கை கொண்ட, மொஹமட் காசிம் சஹ்ரான் தலைமையிலான ஒழுங்கமைக்கப்பட்ட பயங்கரவாதக் குழு திட்டமிட்டுள்ளது என பொலிஸ்மா அதிபருக்கு. - சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி செனவிரத்ன அறிக்கை அனுப்பியுள்ளார்.



அதிலும் குறிப்பாக ஹூப்பு மற்றும் அவிலியா பள்ளிவாசல்கள் அவர்களது இலக்கில் உள்ளதாக தமக்கு மிக நம்பிக்கையான தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் அதனால் பள்ளிவாசல்களின் பாதுகாப்பு குறித்து நடவடிக்கை எடுக்குமாறும் அந்தக் கடிதத்தின் ஊடாக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி செனவிரத்ன் தெரியப்படுத்தியுள்ளார்.

ஹூப்பு அல்லது அவிலியா பள்ளிவாசல்கள் என்பது, முஸ்லிம் சமய பெரியார்களின் அடக்கஸ்தலங்கள் உள்ள பள்ளிவாசல்கள் என அதில் குறிப்பிட்டு கூறப்பட்டுள்ள நிலையில், பிரபுக்களின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறு கோரி பொலிஸ்மா அதிபரின் அலுவலக பிரதான பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த ஜயகொடி அக்கடிதத்தை பொலிஸ் உயரதிகாரிகளுக்கு நேற்று முன்தினம் அனுப்பி வைத்துள்ளார்.

அத்துடன் அந்த தகவல்கள் பிரகாரம் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க, அனைத்து பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள், பொலிஸ் பிரிவுகளுக்குப் பொறுப்பான அதிகாரிகளையும் தெளிவுபடுத்தியுள்ளதாக பொலிஸ் தலைமையகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-7)

# செய்தித்துளிகள்

## மாணவர் பாதுகாப்பு குறித்து பெற்றோர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் பெற்றோர்களுக்கான மாணவர் பாதுகாப்பு தொடர்பான கலந்துரையாடல் நாளை மறுதினம் 29 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரி சபாலிங்கம் அரங்கில் நடைபெறும்.

இதேவேளை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி க.பொ.த. உயர்தர வகுப்பு மாண வர்களின் கற்றல் செயற்பாடுகளை ஆரம் பிப்பது பற்றி பின்னர் அறிவிக்கப்படும் என அதிபர் அறிவித்துள்ளார். (இ)

## தொழில் முனைவோருக்கு வழிகாட்டல் கருத்தரங்கு

வடமாகாணத் தொழில் முனை வோருக்கான வழிகாட்டல் கருத்தரங்கு நோர்த் கேட்-ஜெட்விங் (புகையிரத நிலையம் அருகில்) ஹோட்டலில் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிமுதல் பிற்பகல் 2 மணி வரை இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.மாநகர சபை முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் கலந்து கொள்வார். (இ-10)

## மன்னிப்புக் கோரியது பொலிஸ்

(கொழும்பு)

பயங்கரவாதத் தாக்குதலுடன் தொடர்புடைய சந்தேகநபர்களின் புகைப்படங்களை வெளியிட்ட போது, தவறாக பெண் ஒருவரின் புகைப்படத்தை வெளியிட்டமைக்காக, சம்பந்தப்பட்ட பெண்ணிடம் பொலிஸார் மன்னிப்புக் கோரியுள்ளனர்.

அமார மயீட் என்ற பெண்ணிடமே, பொலிஸார் இவ்வாறு மன்னிப்புக் கோரியுள்ளனர். பொலிஸார் டுவிட்டர் ஊடாக, குறித்த பெண்ணிடம் மன்னிப்புக் கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## நடிகர் ரயனுக்கு மீண்டும் மறியல்

டுபாயில் கைதுசெய்யப்பட்ட பிரபல பாதாள உலகக்குழுவின் தலைவனான மாகந்துரே மதூஷுடன் கைதுசெய்யப்பட்ட பிரபல நடிகர் ரயன் வான் ரூயனை மீண்டும் விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

நடிகர் ரயன் வான் ரூயனை டுபாயிலிருந்து இலங்கைக்கு நாடுகடத்தி விளக்கமறியலில் வைத்து குற்றப்புலனாய்வுப் பிரிவின் சிறப்புக் குழுவினரும் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகளும் இணைந்து விசேட விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இந்நிலையில் நடிகர் ரயன் வான் ரூயனை மே மாதம் 2 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியில் வைக்குமாறு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 50 | 40 | 60 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 110 | 140 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 90 | 150 |
| தக்காளி | 60 | 70 | 110 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 130 | 100 | 80 |
| கோவா | 80 | 50 | 80 | 80 |
| கரட் | 100 | 100 | 90 | 140 |
| பூசணி | 40 | 50 | 30 | 40 |
| புடோல் | 80 | 100 | 70 | 80 |
| வாழைக்காய் | 50 | 70 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 120 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 90 | 100 |
| பாகற்காய் | 160 | 140 | 140 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 70 | 70 | 80 |
| கருணைக் கிழங்கு | 50 | 50 | 40 | 100 |
| பயற்றங்காய் | 100 | 120 | 60 | 80 |
| லீக்ஸ் | 120 | 100 | 100 | 120 |
| பீற்றூட் | 140 | 80 | 140 | 120 |
| கறிமிளகாய் | 100 | 100 | 80 | 100 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 170 | 200 |
| போஞ்சி | 150 | 200 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 40 | 30 | 20 | 50 |
| கீரை-1பிடி | 40 | 25 | 20 | 40 |
| தேசிக்காய் | 300 | 200 | 300 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 45 | 35 | 30-50 |
| இராசவள்ளி | 180 | 230 | 100 | 150 |
| வெங்காயப்பூ | 300 | — | — | — |
| முள்ளங்கி | 80 | 100 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | — | 110 | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஜெரி சொன்னா கேட்கணும்



ஒரு முறை புளியங்குடி காட்டில் மழை பெய்யாததால் மரம், செடி, கொடிகள் எல்லாம் வாடிக் கருகின. நீர் நிலைகள் வற்றி விலங்குகள் தவித்தன.

பறவைகள் நான்கு திக்கிலும் பறந்து சென்று செழிப்பான இடத்தைத் தேடின.

அப்படிச் சென்ற பறவைகளில் ஒரு ஜோடி கழுகுகளும் இருந்தன.

இரண்டு கழுகுகளும் வெகு தூரம் பறந்து தாங்கள் கூடு கட்டி, முட்டையிட்டு, குஞ்சு பொரித்து குதூகலமாக குடும்பம் நடத்தத் தகுதியான மரம் இருக்கிறதா? என்று பார்த்துக் கொண்டு வரும் பொழுது, ஒரு தோப்பு அவற்றின் பார்வையில் பட்டது.

தோப்பில் நிறைய மரங்களிருந்தன. அவற்றில் ஒரு மரம் கிளையுடன் செழித்து வளர்ந்திருந்தது. ஆனால், அது வயதான மரம். அந்த மரத்தில் யாருமே கூடு கட்டவில்லை, ஏன் என்றும் தெரியவில்லை.

யாருமே இல்லாததால் தாங்களே முழுமரத்தையும் உபயோகிக்கலாம், வேறு யாரையும் இனிமேல் அனுமதிக்கக்கூடாது என்று நினைத்து அம்மரத்தில் கூடு கட்டலாமென்று இரு கழுகுகளும் தீர்மானித்தன. அதன்படியே பலமான குச்சிகளைக் கொண்டு வந்து கூட்டைக் கட்டின. கூடு பலமாக, பாதுகாப்பாக இருப்பதை உறுதி செய்து கொண்டு அங்கு முட்டை இட்டு, குஞ்சு பொரிக்கலாமென்று அவை பேசிக் கொண்டன.

அப்போது அம்மரத்தடியில் வளை தோண்டி வசிக்கும் ஜெரி எலி ஒன்று வெளியே வந்து, மேலே கூடு கட்டிக் கொண்டிருக்கும் கழுகுகளைப் பார்த்தது. அதன் முகத்தில் கவலை குடி கொண்டது.

"கழுகுகளே... மேலே என்ன செய்கிறீர்கள்?" என்று கேட்டது ஜெரி.

"கூடு கட்டுகிறோம்!" என்றது ஆண் கழுகு.

"இந்த மரத்திலேயா தங்கப் போறீங்க?" என்று கேட்டது ஜெரி.

"ஆமாம்! அதற்காகத் தான் கூடு கட்டுகிறோம். தங்குவதோடு, முட்டையிட்டு குஞ்சும் பொரித்துக் கொள்ளப் போகிறோம்!, குஞ்சுகள் வந்த பின்பு அவைகள் இம்மரத்தின் மேலேயே கூடு கட்டும், இனி மேல் இது எங்களுக்கு மட்டுமே சொந்தமான மரம்" என்றது பெண் கழுகு.

"நீங்கள் கூடு கட்டி குஞ்சு பொரிப்பது பற்றி மிகவும் சந்தோசம்... ஆனால்?" என்று இழுத்தது ஜெரி எலி.

"என்ன ஆனால் என்று இழுக்கிறாய்?" என்று கேட்டது ஆண் கழுகு.

"நீங்கள் வேறு ஒரு மரத்தில் கூடு கட்டக்கூடாதா?"

"ஏன் இந்த மரத்துக்கு என்ன?"

"இந்த மரம் வயதான மரம். நான் இதன் கீழ் பூமியில் வளை தோண்டி வசிக்கிறேன். அதனால் இம்மரத்தின் வேர் எப்படிப்பட்டது என்று எனக்குத் தெரியும். இம்மரம் பார்ப்பதற்கு பெரியதாக இருக்கிறதே தவிர, இதன் வேர்கள் எல்லாம் பூமியில் பலம் குன்றியுள்ளன. இம் மரம் பலமான காற்றை தாங்குமா? என்பது சந்தேகம்தான். அதனால் தான் சொல்கிறேன்!" என்றது ஜெரி.

"நாங்கள் இங்கேதான் கூடு கட்டி குஞ்சு பொரித்து இருப்போம்... அற்ப ஜீவன் நீ...! யோசனை கூறவோ, அறிவுரை கூறவோ உனக்கு என்ன தகுதி இருக்கிறது?" என்றது ஆண் கழுகு.

"என்னமோ எனக்குத் தெரிந்ததைச் சொன்னேன். கேட்டால் கேளுங்கள் கேட்காவிட்டால் போங்கள்!" என்றது ஜெரி.

"அதிகமாகப் பேசினால், உன்னையே கொத்தி சாப்பிட்டு விடுவேன்...! வாயை மூடிக் கொண்டு போ!" என்றது பெண் கழுகு. பேசியதோடு இல்லாமல் எலியின் மீது பாய இரண்டு கழுகுகளும் ஆக்ரோஷமுடன் "சர்"ரென்று பறந்து வந்தன.

வளைக்குள் பாய்ந்து சென்று அவைகளிடமிருந்து தப்பிவிட்டது ஜெரி.

கூட்டை பலமாகக் கட்டிய பின்பு மூன்று முட்டையிட்டு குஞ்சு பொரிக்கக் காத்திருந்தன, சில நாட்களில் மூன்று கழுகு குஞ்சுகள் முட்டையை விட்டு வெளியில் வந்தன. ஆண் கழுகும், பெண் கழுகும் குஞ்சு கழுகுகளைப் பார்த்து, பார்த்து மகிழ்ந்தன.

சில நாட்கள் சென்றன. ஒரு நாள் மாலையில் இரு கழுகுகளும் உணவு தேட வெளியே சென்றன, அப்படியே வெகு தூரம் போய் விட்டன.

அப்போ முதலில் லேசாக ஒரு காற்று வீசிற்று. பிறகு அது கொஞ்சம் பலமானது. பிறகு இன்னும் கொஞ்சம் பலமானது. அப்புறம் மிக மிக பலமாகி புயலாக உருவெடுத்தது.

புயல் வரத்தொடங்கியதை அறிந்த இரு கழுகுகளும் வேகமாக தங்கள் கூட்டிற்கு வர நினைத்தன, ஆனால் காற்றில் அவற்றால் பறக்க முடியவில்லை. அன்று இரவு முழுவதும் ஒரு மலைக்குகையில் பதுங்கி இருந்தன.

மறுநாள் காலையில் வேக வேகமாக தங்கள் குஞ்சுகள் இருக்கும் மரத்திற்கு வந்து பார்த்த போது, அவற்றின் இதயமே நின்று போய்விட்டது.

ஆமாம், அங்கே இருந்த அந்த பெரிய வயதான மரம், அடியோடு சாய்ந்து விழுந்து கிடந்தது, மரக்கிளைகள் எல்லாம் நொறுங்கி தூள் தூளாகியிருந்தது. அதை பார்த்த இரு கழுகுகளும் தங்கள் 3 குஞ்சுகள் இறந்து போய் விட்டதே, சின்ன எலி அன்றே சொன்னது அதை கேட்காமல் தங்கள் அருமை குஞ்சுகளை இழந்து விட்டோமே என்று கதறி அழுதன.

அப்போ அங்கே வந்த ஜெரி எலி "இப்போ அழுது என்ன பயன், அன்றே நான் சொன்னதை கேட்டிருந்தால் இப்படி நடந்திருக்குமா, என் உருவத்தை பார்த்து, நான் சொன்ன நல்ல விசயத்தை ஏளனம் செய்தீங்களே!" என்றது.

உடனேகழுகுகள்"உண்மை தான், எங்களை மன்னியுங்கள், உங்கள் பேச்சை கேட்காததால் எங்கள் குழந்தைகள் இறந்து போய்விட்டன" என்றன.

உடனே ஜெரி "உங்க குழந்தைகள் இறந்து போனதாக யார் சொன்னார்கள்"?

பெண் கழுகு "அதோ அந்த பெரிய மரம் அடியோடு சாய்ந்து கிடக்கிறது, அதன் அடியில் தான் எங்கள் குழந்தைகள் நசுங்கி போயிருப்பாங்க".

ஜெரி "கவலை வேண்டாம் என் அருமை நண்பர்களே! காற்றுப் பலமாக அடிக்கத் தொடங்கியதும், நான் என் குரங்கு நண்பனிடம் சொல்லி, உங்கள் குழந்தைகளை அருகில் இருக்கும் மலைக்குகையில் பத்திரமாக பார்த்துக் கொள்ளச் சொல்லியிருக்கிறேன், அங்கே தான் அனைத்து பறவைகள், விலங்குகள் இருக்கின்றன, வாங்க போய் உங்க அருமை குழந்தைகளைப் பார்க்கலாம்" என்றது.

அதைக் கேட்ட இரு கழுகுகளுக்கும் ஆனந்தக் கண்ணீர், இருவரும் ஜெரியிடம் மீண்டும் மன்னிப்புக் கேட்டு, நன்றியைச் சொன்னார்கள்.

உடனே மலைக்குகைக்கு சென்று அங்கே குரங்குக்கும் நன்றி சொல்லி, தங்கள் குழந்தைகளை கட்டிப் பிடித்து முத்தமிட்டு மகிழ்ந்தார்கள். அன்று முதல் அந்த கழுகுகளும் ஜெரி எலியாரும், குரங்காரும் நல்ல நண்பர்கள்.

## அறிந்து கொள்வோம்

- வியாழன் கோளில் 300 ஆண்டுகளாகத் தொடரும் சூறாவளி, இன்னும் வலுவாக உள்ளது.
- கட்டுப்பாடற்ற வான்கோழிகள் மணிக்கு 40 கிலோமீற்றர் வேகத்தில் கூட ஓடும்!
- உலகின் மிகச் சிறிய குரங்கின் உயரம் - ஒரு டூத் ப்ரஷ் அளவுதான்!
- விண்வெளி வீரர்களின் பாதத் தடங்கள் என்றும் நிலவில் நிலைத்திருக்கும். அவற்றை அழிக்க அங்கே காற்றில்லையே!
- அமெரிக்காவில் நிஜ ஃப்ளமிங்கோ பறவைகளை விட, பிளாஸ்டிக் பறவைகளே அதிகம்.
- பார்வைக்கு, மூளையின் மொத்த சக்தியில் மூன்றில் ஒரு பங்கு தேவைப்படுகிறது.

## நல்ல நல்ல முயல் குட்டி



நல்ல நல்ல முயல் குட்டி
நான் வளர்க்கும் முயல் குட்டி
வெள்ளை வண்ணம் முயல் குட்

வீட்டில் வளரும் முயல் குட்டி!
கோசு முள்ளங்கி இலைகள்
கொறித்து தாளும் தின்னுமாம்

மேசைக் கீழும் தூங்குமாம்
மெத்தை மேலும் தூங்குமாம்!
ஆசை கொண்டே எவருமே

அன்பால் இதனைத் தூக்குவர்
மீசை தன்னை அசைத்துமே
அன்பாய் நன்றி சொல்லுமாம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> பெரும்பாலும் முதல் சிந்தனை தெளிவற்றவையாக இருக்கும். எதற்கும் மறுசிந்தனை செய்யுங்கள்.
> ~ யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## எச்சரிக்கைகளை எவரும் உதாசீனம் செய்யாதீர்கள்

வார இறுதி நாட்களில் தாக்குதல்கள் நடத்தப்படலாம் என்ற எச்சரிக்கையை அரச தரப்பு வெளியிட்டுள்ளது.

பொதுவில் எச்சரிக்கைகளை உதாசீனம் செய்கின்ற நடைமுறை பொதுமக்களிடம் உண்டு.

இவ்வாறாக எச்சரிக்கையை உதாசீனம் செய்வது மிகப்பெரும் ஆபத்துக்களை ஏற்படுத்தக்கூடியது.

தவிர, எச்சரிக்கை செய்யப்படவில்லை. எனவே நாம் அவதானமாகச் செயற்பட வேண்டியதில்லை என்றும் எவரும் நினைத்துவிடக் கூடாது.

பொதுவாக தீவிரவாதத் தாக்குதல் என்பது பொதுமக்கள் தாக்குதல் பற்றிக் கவனம் செலுத்தாத மனநிலையில் இருக்கும்போதே நடத்தப்படும்.

எனவே இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டு பொதுமக்கள் எக்கணமும் விழிப்பாக இருப்பது கட்டாயமானதாகும்.

ஏனெனில் இலங்கையில் கடந்த 21ஆம் திகதி இடம்பெற்ற குண்டுத்தாக்குதலின் பின்னணியைப் பார்க்கும்போது, அதனை ஓர் அதிரடியான தாக்குதல் என்றோ அல்லது குறித்த தினத்தோடு தாக்குதல் நின்றுவிட்டது என்றோ எண்ணத்தோன்ற முடியவில்லை.

மாறாக, கடந்த 21ஆம் திகதி நடந்த குண்டுத் தாக்குதலை பயங்கரவாதத்தின் ஒரு தொடக்கப் புள்ளியாகவே பார்க்க முடிகிறது.

அதாவது குண்டுத்தாக்குதலை நடத்திய தன் பின்னணியில், ஓர் அமைப்பின் இயங்கு நிலை, தாக்குதலுக்கான பயிற்சிகள், ஆயுத உற்பத்தி, தாக்குதலை நடத்தக்கூடியவர்கள் மறைந்திருக்கக்கூடியதான ஏற்பாடுகள், குறித்த அமைப்புக்கு நாடளாவிய ரீதியில் இருந்து புலனாய்வுத் தகவல்கள் கிடைக்கக்கூடியதான கட்டமைப்புகள் எனப் பெரியதொரு பின்புலம் இருப்பதை உணரமுடிகின்றது.

எனவே இலங்கைத் தீவின் சமகால நிலைமையை எவரும் சாதாரண ஒரு விடயமாகவோ தற்காலிகமான ஒரு சம்பவமாகவோ நினைத்துவிடக் கூடாது.

மாறாக, இலங்கையில் ஏற்பட்டுள்ள மிக மோசமான நெருக்கடி நிலைமையானது நாட்டிலுள்ள அனைத்து மக்களையும் நிம்மதியற்றவர்களாக ஆக்கிவிடப் போகிறது என்பதுடன் குறிப்பாக தமிழ் மக்களுக்கும் மேற்குறித்த பதற்றமான சூழ்நிலை பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தப் போகிறது என்பதையும் நாம் உணர்ந்தாக வேண்டும்.

எது எவ்வாறாயினும் நாட்டில் ஏற்பட்டுள்ள பயங்கரமான நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து; சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமாக இருந்தால், இதுவிடயத்தில் கணிசமான பங்களிப்பை முஸ்லிம் சகோதரர்களே வழங்க வேண்டும்.

ஆகையால் முஸ்லிம் மக்களின் ஒத்துழைப்பைப் பெறுவது பற்றி சிந்திப்பதே பொருத்தமானதாகும்.

இதைவிடுத்து மாறி மாறிக் குற்றம் சாட்டி நிற்பது நாட்டுக்கும் மக்களுக்கும் அவ்வளவு ஆரோக்கியமானதல்ல.

# மாணவர்களின் பாதுகாப்பின் பொருட்டு தனியார் கல்வி நிலைய செயற்பாடுகள் நிறுத்தம்

## பெற்றோர்களுக்கு யாழ். அரச அதிபர் கோரிக்கை

நாட்டில் நிலவும் அசாதாரண சூழல் காரணமாக மாணவர்களின் பாதுகாப்பின் பொருட்டு இன்று 27 ஆம் திகதியும் நாளை 28 ஆம் திகதியும் தனியார் கல்வி நிலையச் செயற்பாடுகளை நிறுத்துவதுடன் பெற்றோர் தங்கள் பிள்ளைகளை தனியார் கல்வி நிலைய கல்விச் செயற்பாடுகளுக்கு செல்வதனைத் தவிர்த்து பாதுகாப்புச்செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் என யாழ். மாவட்டஅரச அதிபர் நா. வேதநாயகன் அறிவித்துள்ளார். (இ)

# ஓமந்தை உருக்குத் தொழிற்சாலை தொடர்பில் பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## சிவில் பாதுகாப்புக் குழுக்கூட்டத்தில் கோரிக்கை

(குருமன்காடு)

வவுனியா, ஓமந்தையில் அமைந்துள்ள உருக்குத் தொழிற்சாலை தொடர்பாக விசாரணை செய்யப்பட வேண்டும் என அப்பகுதிமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வவுனியா, ஓமந்தை அரச வீட்டுத்திட்ட பகுதியில் ஈயம் மற்றும் உருக்கு தொழிற்சாலை இயங்கி வருகின்றது.

இதற்குள் எவரும் செல்ல முடியாதவாறு உயரமான சுவர்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன், மரக்குற்றிகள் மற்றும் வாகனங்களின் பழைய பற்றரிகள் என்பன உள்ளே வைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் வவுனியா வைரவபுளியங்குளத்தில் நேற்று முன்தினம் சிவில் பாதுகாப்பு குழுக் கூட்டம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது, குறித்த தொழிற்சாலை யாருடையது? மற்றும் உள்ளே எவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுகின்றன? என்பது தொடர்பில் பொலிஸார் ஆராய வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

அத்துடன் தொழிற்சாலையின் பதிவு விடயங்கள் தொடர்பாகவும் அரச அதிகாரிகளிடம் விடயங்களை பெற்று உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர். (2-250)

# தென்மராட்சியில் வாள்வெட்டு ஒருவர் படுகாயம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கெற்பேலிப் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை இரவு 7.30 மணியளவில் இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

படுகாயமடைந்த நபர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக உடனடியாக யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

வாள்வெட்டிற்கான காரணம் மற்றும் காயமடைந்தவரின் பெயர், விபரங்களை இதுவரை பெற்றுக்கொள்ள முடியவில்லை.

மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ம-3,10,30,114)

# பலத்த சோதனைக்கு பின்னர் பள்ளிக்கு செல்ல அனுமதி

வவுனியா நகரில் அமைந்துள்ள பெரிய பள்ளிவாசலுக்குள நேற்று பொலிஸார் பலத்த சோதனைக்குட்படுத்தபட்டு அனைவரும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நாட்டில் கடந்த சில நாட்களுக்கு முன் இடம்பெற்ற தொடர் குண்டுவெடிப்பு சம்பவத்தினையடுத்து அனைத்து பள்ளிவாசலிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

அந்த வகையில் வவுனியா பெரிய பள்ளிவாசலிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன் பள்ளிவாசலுக்குள் பிரவேசிக்கும் அனைவரும் பொலிஸாரின் பலத்த சோதனைக்கு பின்னரே உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டனர். (ம-250)

# திருமலையில் சந்தேகத்தின்பேரில் வெளிநாட்டவர் உள்ளிட்ட 14 பேர் கைது

திருகோணமலையில் 14 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் மற்றும் இராணுவத்தினரால் நேற்றைய தினம் (வெள்ளிக்கிழமை) முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களில் ஒரு இந்தியரும் ஒரு பாகிஸ்தானியரும் உள்ளடங்குவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தநிலையில் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களிடம் தொடர்ச்சியாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

இதேவேளை, கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதல்களை தொடர்ந்து நாடளாவிய ரீதியில் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை ,குறிப்பிடத்தக்கது. (ம-3)

# பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு இலங்கைக்கு முழுமையான உதவி

## மாலைதீவு ஜனாதிபதி மைத்திரியிடம் உறுதி

பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு இலங்கைக்கு முழுமையாக உதவுவதாக மாலைதீவு ஜனாதிபதி இப்ராஹிம் முஹமட் சொலிஹ், தொலைபேசி மூலம் ஜனாதிபதி மைதிரிபால சிறிசேனவிடம் தெரிவித்துள்ளார்.

இந்த கொடூர தாக்குதலை வன்மையாக கண்டிப்பதுடன், இச்சந்தர்ப்பத்தில் சகோதர நாடு என்ற வகையில் மாலைதீவு இலங்கையுடன் கைகோர்த்திருப்பதாகவும் இப்ராஹிம் முஹமட் சொலிஹ் தெரிவித்தார்.

இந்த துன்பியல் சம்பவத்தில் பலியான அனைவரினதும் குடும்ப உறுப்பினர்களுக்கு தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்த மாலைதீவு ஜனாதிபதி, காயமடைந்தவர்கள் விரைவில்குணமடைய பிரார்த்திப்பதாகவும் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு கவலை தெரிவித்தமை தொடர்பில் மாலைதீவு ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்த இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இந்த நாசகார பயங்கரவாத இயக்கத்தை இலங்கையிலிருந்து முற்றாக ஒழித்துக் கட்டுவதற்கு இலங்கை பாதுகாப்பு துறையின் பங்களிப்புடன் விரைவில் மேற்கொள்ள முடியுமென்றும் தெரிவித்தார். (ம-3)


# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- நீங்கள் வலிமையான தசையும், இரும்பு போன்ற எலும்பும் கொண்டவர்களாக விளங்குங்கள்.
- கீதை படிப்பதை விட, கால்பந்து விளையாடிய பின் அதை படித்தால் இன்னும் நன்றாகப் புரியும். ஏனென்றால், வலிமை படைத்தவர்கள் மட்டுமே ஆன்மிகவாழ்வில் முன்னேற்றம் காண முடியும்.
- இறந்த காலத்தை மறந்து விடுங்கள். எதிர்காலம் பற்றியும் கவலை வேண்டாம். நிகழ்காலத்தை மட்டும் சிந்தித்து செயலாற்றுங்கள்.
- யார் உங்களைத் தூற்றிப் பேசினாலும் கவலை கொள்ளாதீர்கள். அவர்களையும் வாழ்த்துங்கள்.
- பொறுப்பை உங்கள் தோள் மீது சுமந்து கொள்ளுங்கள். உங்களுக்குரிய விதியை நீங்களே வகுத்துக் கொள்ளுங்கள்.
- வலிமையும் உதவியும் உங்களுக்கு உள்ளேயே குடி கொண்டிருக்கிறது என்பதை உணருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர் தோல்வி ஏமாற்றமளிக்கிறது
# தோல்வி குறித்து தினேஷ் கார்த்திக்




ஐ.பி.எல். கிரிக்கெட்டில் நேற்று முன்தினம் கொல்கத்தாவில் நடந்த 43 ஆவது லீக் ஆட்டத்தில் கொல்கத்தா நைட் ரைடர்சை 3 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் ராஜஸ்தான் ராயல்ஸ் தோற்கடித்தது.

கொல்கத்தா தொடர்ந்து 6 தோல்வியை சந்தித்துள்ளது. தோல்வி குறித்து கொல்கத்தா அணித் தலைவர் தினேஷ் கார்த்திக் கூறியதாவது.

இந்தத் தோல்வி சிறிது ஏமாற்றம் அளிக்கிறது.

வெற்றி பெற முடியும் என்று நினைத்தேன். ஆனால் எங்களது நாளாக அமையவில்லை. வெற்றி பெறும் போது எப்போதுமே நல்ல உணர்வை அளிக்கும். ஆனால் வெற்றிக்கு அருகில் வந்து தோற் கும்போது ஏமாற்றம் அளிக்கும்.

பந்து வீச்சாளர்கள் மீது அதிக நெருக்கடியைத் திணிக்க முடியாது. பனியின் தாக்கத்தால் பந்து ஈரபதமானது.

எங்களது அணி வீரர்கள் போராடிய விதத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால் முடிவைக் கண்டு மகிழ்ச்சி அடையவில்லை.

டிரெசிங் அறையில் நல்ல சூழ்நிலையை வைத்திருப்பது முக்கியம்.

உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் வெற்றி எல்லையை அடைய முடியாதது எங்களுக்கு நல்ல உணர்வை அளிக்கவில்லை. (க)


வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# சிக்சர் அடித்து விட்டாயென நினைக்கிறாயா?
# அஸ்வினைக் கிண்டல் செய்த விராட் ஹோலி

டிவில்லியர்ஸின் அதிரடியில் பஞ்சாப் அணிக்கு எதிரான ஆட்டத்தில் பெங்களூர் அணி 17 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

தொடர் தோல்விகளை சந்தித்து வந்த ஹோலி தலைமையிலான பெங்களூர் அணிக்கு இந்த ஹாட்ரிக் வெற்றி உற்சாகத்தை கொடுத்துள்ளது. மேலும், வேடிக்கையாக விளையாடித்தான் இந்த ஆட்டத்தில் வெற்றி பெற்றோம் என ஹோலி கூறியுள்ளார். இதற்கிடையில், இந்த ஆட்டத்தில் பஞ்சாப் வீரர் அஸ்வினின் ஆட்டத்தை கேலி செய்யும் வகையிலான உடல் மொழியை ஹோலி வெளிப்படுத்தினார்.

கடைசி ஓவரில் 27 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் அஸ்வின் களத்திற்கு வந்தார். முதல் பந்தில் சிக்ஸர் அடித்தார். இரண்டாவது பந்தையும் சிக்ஸருக்கு அஸ்வின் தூக்கி அடித்த போது அந்தப் பந்தை பாய்ந்து சென்று ஹோலி கட்ச் பிடித்து அஸ்வினை ஆட்டமிழக்கச் செய்தார்.



பந்தை பிடித்தவுடன் சிக்ஸர் அடிச்சியா? எனக் கேட்பது போல அஸ்வினைப் பார்த்து சைகை செய்தார். அந்த நேரத்தில் ஹோலியின் உடல்மொழி சற்று அநாகரிமாக இருந்தது. எப்போதும் மைதானத்தில் ஆக் ரோஷமாக இருக்கும் ஹோலி, இவ்வாறு நடந்து கொள்வது முதல்முறையல்ல, அவர் பல முறை இவ்வாறு எதிரணி வீரர்களைக் கிண்டல் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

**உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்**

# துயரங்களை மறப்போம் இலங்கைக்கு வாருங்கள்
## தரங்க வேண்டுகோள்

இலங்கையில் அண்மையில் துயரங்கள் நடந்த போதிலும் உலகின் பல்வேறு இடங்களில் இருந்து இலங்கையை காண மக்கள் வருகை தருவார்கள் என நம்புவதாக இலங்கை கிரிக்கெட் வீரர் உபுல் தரங்க கூறியுள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணி வீரர் உபுல் தரங்க தனது டுவிட்டர் பக்கத்தில் இலங்கை குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் காண பல இடங்கள் உள்ளன, அண்மையில் இங்கு துயரங்கள் நடந்த போதிலும் உலகின் பல்வேறு இடங்களில் இருந்து இலங்கைக்கு மக்கள் வருகை தருவார்கள் என தான் நம்புவதாக தரங்க தெரிவித்துள்ளார். (க)






நேற்று முன்தினம் நடந்த ராஜஸ் தான் றோயல் அணிக்கெதிரான போட்டியில் கொல்கத்தா அணிக்கெதிரான போட்டியில் கொல் கத் தா அணித் தலைவர் தினேஸ் கார்த்திக் அடித்த சிக்ஸர் ஒன்று நடராஜர் சிக்சர் என ஐ.பி.எல்.நிர்வாகத்தால் வர்ணிக்கப்பட்டது.

ஏற்கனவே டோனியின் ஹெலிகொப்டர் சொட் பிரபல்யம் என்பது குறிப்பிடத்தக்க விடயம்.

# கிரிக்கெட்டை ரசித்து விளையாடுகின்றோம்
# கெட்ட வார்த்தை பேசியதற்கு அஸ்வின் விளக்கம்




பெங்களூர் அணிக்கெதிரான போட்டியின் போது தமிழக வீரர் அஸ்வின் கெட்ட வார்த்தையில் திட்டிய வீடியோ வைரலான நிலையில் அது குறித்து அவர் விளக்கமளித்துள்ளார்.

ஐ.பி.எல்.தொடரின் போட்டியில் ஹோலி தலைமையிலான பெங்களூர் அணியும் அஸ்வின் தலைமையிலான பஞ்சாப் அணியும் மோதின. பரபரப்பாக நடைபெற்ற இப் போட்டியில் பெங்களூர் அணி 17 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இப்போட்டியில் ஹோலியை அவுட்டாக்கியவுடன் அஸ்வின் மிகவும் மோசமான வார்த்தையில் திட்டினார்.

இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில், ஹோலியும் அவர் அடித்த பந்தை சிக்ஸர் லயனில் பிடித்தவுடன் பந்து சிக்ஸர் போகும் என்று நினைத்தாயோ எனக் கிண்டல் செய்தார்.

இந்நிலையில் இது குறித்து அஸ்வின் கூறுகையில்,

நானும் விராட் ஹோலியும் கிரிக்கெட்டை ரசித்து உணர்ச்சிகரமாக விளையாடி வருகிறோம்.

அதனால் இதுபோன்று நடப்பது இயல்பு தான். இதனை பெரிதுபடுத்தத் தேவை இல்லை என்று கூறியுள்ளார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையிலிரு...

நாட்டில் அமைதியை ஏற்படுத்த முடியும் என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

நேற்று கொழும்பு கோட்டையில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற ஊடக நிறுவனங்களின் தலைவர்களுடனான சந்திப்பின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இலத்திரனியல் ஊடக நிறுவனங்களின் பணிப்பாளர்கள், பத்திரிகை ஆசிரியர்கள், வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட பெருமளவு ஊடகவியலாளர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இவர்கள் மத்தியில் உரையாற்றிய ஜனாதிபதி, நாட்டில் ஏற்பட்டிருக்கும் இந்த எதிர்பாராத நிலைமைகளுக்கு மத்தியில் அரசாங்கம் எடுத்துள்ள உடனடி நடவடிக்கைகள் குறித்து விளக்கமளித்தார்.

இது தொடர்பான பொறுப்பிலிருந்து விலகிக்கொள்ள தான் தயாராக இல்லை என்றும் ஜனாதிப்தி குறிப்பிட்டார். இந்த பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கையில் எந்தவொரு வெளிநாட்டு இராணுவத்தையும் நாட்டிற்குள் கொண்டுவருவதற்கு தான் தயாராக இல்லை என்றும் இலங்கை பாதுகாப்பு துறை மீது தான் அதிக நம்பிக்கை வைத்துள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பொலிஸ், விசேட அதிரடிப்படை, குற்றப் புலனாய்வு திணைக்களம் மற்றும் முப்படையினர் மிகவும் வெற்றிகரமாக இந்த நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதுடன், விசாரணை நடவடிக்கைகளுக்கு உதவுவதற்காக ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாத இயக்கம் பற்றிய அனுபவமுள்ள உலகின் முன்னணி நாடுகளின் நிபுணர் குழுக்கள் நாட்டிற்கு வருகை தந்திருப்பதாகவும், அவர்கள் எமது பாதுகாப்பு படையினருடன் இணைந்து விசாரணை நடவடிக்கைகளை ஆரம்பித்திருப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

மேலும் கிடைக்கப்பெற்றுள்ள பாதுகாப்பு தகவல்களுக்கு ஏற்ப இந்த பயங்கரவாத இயக்கத்துடன் சம்பந்தப்பட்ட சுமார் 130 பேர் இலங்கையில் இருப்பதாகவும் அவர்களில் சுமார் 70 பேர் தற்போது கைது செய்யப்பட்டிருப்பதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (ம-3)

## வடக்கில் சிறப்பு...

களத்தால் அமைக்கப்பட்டுள்ளன.

பொதுமக்கள் தமக்கு அவசியமான பாதுகாப்பு மற்றும் சந்தேகத்துக்கு இடமான விடயங்கள் தொடர்பில் இந்த சிறப்பு பொலிஸ் நடவடிக்கைப் பிரிவுகளுக்கு அறிவிக்க முடியும் என்று பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.

வடக்கு (காங்கேசன்துறை) தொ.பே - 0212059901 தொ.நகல்- 0212220008

தென் மாகாணம் (மாத்தறை) தொ.பே - 011 2014999 தொ.நகல்- 0412234412

ஊவா மாகாணம் (பதுளை) : தொ.பே- 0112014599, 0112014517 தொ.நகல்- 0552228033

மத்திய மாகாணம் (கண்டி) : தொ.பே- 0812229933, 0812229999 மின்னஞ்சல்- sdigep@gmail.com

கிழக்கு மாகாணம் (மட்டக்களப்பு) : தொ.பே- 0652224427 தொ.நகல்- 065 2228808

சப்ரகமுவ மாகாணம் (இரத்தினபுரி) : தொ.பே- 0452222797 தொ.நகல்- 045 2222480

வடமேல் மாகாணம் (குருநாகல்) : தொ.பே- 0372234260 தொ.நகல்- 037 2225000

வடமத்திய மாகாணம் (அநுராதபுரம்) : தொ.பே- 0252234862 தொ.நகல்- 025 2234862

களுத்துறை டி.ஐ.ஜி அலுவலகம்: தொ.பே- 034 2222227

பாணந்துறை அத்தியட்சகர் அலுவலகம்: தொ.பே- 0382233228

கொழும்பு டிஐஜி அலுவலகம்: தொ.பே- 0112431031

மேல் மாகாணம் (தெற்கு) மிரிகான: தொ.பே- 0112852057

மேல் மாகாணம் (வடக்கு) பேலியகொட: தொ.பே- 0112908888 (ம-3)

## பத்தாயிரம் இரா...

ணுவ பேச்சாளரான பிரிகேடியர் சுமித் அத்தபத்து தெரிவித்தார்.

அத்துடன் நாட்டில் தற்போது வெளிவரும் பொய்யான வதந்திகள் தொடர்பாக விழிப்புணர்வுடன் பொது மக்கள் இருக்க வேண்டும் எனவும் சந்தேக நபர்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக தகவல் தெரிந்தால் கீழ் காணப்படும் தொலைபேசி இலக்கங்களான 011-2434251, 011-4055105, 011-4055106, 0766911640 குண்டு செயலிழப்பு பிரிவு 011-2433335 என்ற இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு தெரிவிக்குமாறும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை கடற்படையினரால் 11 சந்தேக நபர்கள் தற்போது கைது செய்யப்பட்டுள்ளதாகவும் மீன்பிடி தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் தங்களது தேசிய அடையாள அட்டை மற்றும் படகுகளுக்கான ஆவண உத்தரவு பத்திரங்களுடன் செல்லவேண்டும் என கடற்படை பேச்சாளரான லெப்டினன்ட் கொமாண்டர் இசுரு சூரியபண்டார தெரிவித்தார்.

அத்துடன் விமானப்படை பேச்சாளரான குரூப் கெப்டன் ஹு கான் செனவிரத்ன, பாதுகாப்பு நடவடிக்கை பணிகளில் விமானப் படையினர் ஆயிரம் பேர் அனைத்து பிரதேசங்களிலும் ஈடுபட்டுள்ளதுடன் சர்வதேச விமான நிலையங்களான கொழும்பு, மாத்தளை, இரத்மலானை மற்றும் களுத்துறை போன்ற பிரதேசங்களில் ஈடுபட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார். (ம-3)

## 2 மணி நேரம்...

ஆராய்வதற்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட மூவரடங்கிய விசாரணைக்குழு முன்னிலையில் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர நேற்று முன்னிலையாகி சுமார் இரண்டு மணிநேரம் வாக்குமூலம் வழங்கினார்.

விசாரணைக் குழுவினால் விடுக்கப்பட்ட அழைப்பிற்கிணங்க வாக்குமூலம் வழங்குவதற்காக அவர் முன்னிலையானார்.

உயர் நீதிமன்ற நீதியரசர் விஜித் மலல்கொட, அமைச்சின் முன்னாள் செயலாளர் பத்மசிறி ஜயமான்ன மற்றும் முன்னாள் பொலிஸ்மா அதிபர் என்.கே. இளங்கோன் ஆகியோர் இந்த மூவரடங்கிய விசாரணைக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

பொலிஸ்மா அதிபர் வருகை தந்த சந்தர்ப்பத்தில் மூவரடங்கிய விசாரணைக்குழு அமைந்துள்ள வளாகத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. சுமார் 2 மணி நேரம் பொலிஸ்மா அதிபரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

நாட்டின் சில பகுதிகளில் கடந்த 21 ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதல்கள் தொடர்பில் ஆராய்ந்து 2 வாரங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு இந்த மூவரடங்கிய குழுவினருக்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார். (ம-3)

## வதந்திகளை பரப்...

துறையினரையும் தவறான முறையில் வழிநடத்தும் வகையில் செயற்படும் நபர்களுக்கு எதிராக கடுமையான தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு விசேட அறிவித்தல் ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளது.

முகநூல், வட்ஸ்அப், டுவிட்டர் மற்றும் இணையத்தளம் என்பவற்றின் ஊடாக போலியான தகவல்களை வெளியிட்டு மக்களை தவறான முறையில் வழிநடத்துபவர்களை இனம்காண பொலிஸ் மற்றும் பாதுகாப்புப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுபோன்ற தவறான குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு 3 வருடங்கள் முதல் 5 வருடங்கள் வரையான சிறைத்தண்டனை வழங்க சட்ட ஏற்பாடுகள் காணப்படுவதாகவும் மேலும் அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ம-3)

## ஐ.எஸ் அமைப்பி...

கல்முனை, சாய்ந்தமருது பகுதியில் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது சந்தேகத்திற்கிடமான குழுவினருக்கும் பாதுகாப்பு படையினருக்குமிடையில் மோதல் இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில் குறித்த பகுதியில் 3 பெரும் வெடிச்சத்தங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் குறித்த வெடிப்பு தற்கொலை குண்டுத்தாக்குதலாக இருக்கலாமென படைத்தரப்பு சந்தேகிக்கின்றது.

தற்கொலை குண்டுத் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்படும் தற்கொலை அங்கிகள் தயாரிக்கப்படுவதாக கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைவாக இராணுவம் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் உள்ளிட்ட பாதுகாப்பு குழுவினர் முன்னெடுத்த சுற்றிவளைப்பின்போதே சந்தேக குழுவினருடன் பரஸ்பர துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

இதேவேளை தேசிய உளவுத்துறையினருக்கு கிடைத்த தகவல் ஒன்றுக்கு அமைவாக சம்மாந்துறை பகுதியில் உள்ள வீடொன்றினை சுற்றி வளைத்து, அதிரடிப் படையினரும் சி.ஐ.டி எனப்படும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரும் அம்பாறை பொலிஸ் அத்தியட்சர் அலுவலகமும் முன்னெடுத்த விசேட நடவடிக்கையிலேயே இவை கைப்பற்றப்பட்டதாக பொலிஸ் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சர் ருவன் குணசேகர கூறினார்.

தேசிய உளவுத்துறைக்கு, சம்மாந்துறையில் உள்ள வீட்டில் தற்கொலை குண்டு அங்கிகள் மற்றும் குண்டுகள் தயாரிக்கப்படுவதாக தகவல் கிடைத்துள்ளது. இதனையடுத்தே அந்த தகவல் சி.ஐ.டிக்கு மாற்றப்பட்டு அவர்களது ஆலோசனை பிரகாரம் இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது. பொலிஸ் விசேட அதிரடிப்படை, அம்பாறை பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் மற்றும் கிழக்கு இராணுவ கட்டளை மையம் ஆகியவற்றின் உதவியும் பெறப்பட்டுள்ளது.

இதன்போது அவ்வீட்டிலிருந்து குண்டு தயாரிக்கப் பயன்படுத்தப்படும் சிறிய உருளைகள் ஒரு இலட்சமும், 150 ஜெலட் நைட் கூறுகளும், மின்கலங்கள், வயர்கள், அமில வகைகள் என ஏராளமான வெடிபொருள் மூலக்கூறுகள் மீட்கப்பட்டுள்ளன. இதனைவிட ஒரு மடிக்கணினி மற்றும் ட்ரோன் கமராவும் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதேவேளை அதே வீட்டில் இருந்து இலங்கையில் இடம்பெற்ற தொடர் தற்கொலை குண்டுத் தாக்குதல்களுக்கு பொறுப்பேற்று ஐ.எஸ்.ஐ.எஸ். சர்வதேச பயங்கரவாத அமைப்பு வெளியிட்ட புகைப்படம் மற்றும் காணொளியில் உள்ள நபர்கள் அணிந்திருக்கும் முகத்தை மறைத்திருக்கும் ஆடைகளை ஒத்த ஆடைத் தொகுதிகள் மற்றும் அப்படங்களின் பின்னால் காட்சிப்படுத்தப்பட்டுள்ள பதாதையை (பெனர்) ஒத்த பதாதையையும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸ் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

மேலும் இது தொடர்பில் 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ம-3)

## கல்முனை- சாய்...

குண்டுத் தாக்குதலில் பொதுமகன் ஒருவர் உயிரிழந்ததுடன் மேலும் மூவர் படுகாயமடைந்தனர்.

அத்துடன், தற்கொலைத் தாக்குதலை நடத்திய சந்தேகநபர்கள் இருவரும் உயிரிழந்துள்ளனர். இந்த தாக்குதலையடுத்து அந்தப் பகுதியில் சுற்றிவளைப்புத் தேடுதல்கள் முன்னெடுக்கப்பட்டன.

எனினும் இந்தத் தாக்குதலில் இராணுவத்தினருக்கு எந்தப் பாதிப்பும் இல்லை. இந்த தகவலை இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ம-3)

## தீவிரவாதத்தை...

ளர் கோத்தாபய ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

இந்த ஆண்டு நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் நான் போட்டியிடுவேன். ஜனாதிபதியாக வந்தவுடன் நாட்டில் தலைதூக்கியுள்ள இஸ்லாமிய தீவிரவாதத்தை ஒழிப்பதுடன் நாட்டின் புலனாய்வுப் பிரிவை வலுப்படுத்தி பொது மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வேன் என்று கோத்தபாய ராஜபக்ஷ சர்வதேச ஊடகமான ரொய்ட்டருக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார். இந்த செவ்வியை அவர் நேற்று வெள்ளிக்கிழமை வழங்கினார்.

தற்போதைய தாக்குதல்கள் தடுக்கப்பட்டிருக்கலாம். ஆனால் தற்போதைய அரசு புலனாய்வு வலைப்பின்னலை இறுக்கமாக வைத்திருக்கவில்லை., அத்துடன், போரின் போதிருந்த கண்காணிப்புக்களும் கைவிடப்பட்டுள்ளன.

தற்போதைய அரசு தயார் நிலையில் இல்லாமல் இருந்ததால்தான் நாட்டில் தற்போது அச்சநிலை ஏற்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ம-3)

## தேடப்பட்டு வந்த சந்தேக நபரான பாத்திமா லதீபா பொலிஸாரால் அதிரடிக் கைது



(கொழும்பு)

இலங்கையில் சமீப காலமாக பொலிஸாரால் தேடப்பட்டு வந்த பாத்திமா லதீபா என்ற முஸ்லிம் பெண் மாவனல்லை பிரதேசத்தில் உள்ள வீடொன்றிலிருந்து நேற்றிரவு பொலிஸாரால் அதிரடியாக கைது செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்நிலையில் குறித்த பெண்ணிடம் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளதாக தகவல் தெரிவித்துள்ளனர். (ம-3)


வீடு வாடகைக்கு

யாழ் திருநெல்வேலி பரமேஸ்வரா சந்திக்கு அருகாமையில் பலாலி வீதியில் இணைந்த குளியலறைகளுடன் கூடிய தளபாடம் இடப்பட்ட வீடுகள் மற்றும் தனிவழிப் பாதை கொண்ட அறைகள் வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 076 554 1472

மெகா பவர்
திகதி 26/04/2019
சீட்டிழுப்பு இலக்கம் 372
வெற்றி இலக்கங்கள்: S 07 02 48 70 74

தன நிதானய
திகதி 2019-04-26
சீட்டிழுப்பு இலக்கம் 141
ஆங்கில எழுத்து: X வெற்றி இலக்கங்கள்: 17 18 41 53

மஹஜன சம்பத
திகதி 2019/04/26
சீட்டிழுப்பு இலக்கம் 3904
ஆங்கில எழுத்து: D வெல்லப்பட்ட இலக்கங்கள்: 4 7 3 9 3 8

கொவிசெத
திகதி 2019.04.26
சீட்டிழுப்பு இலக்கம் 2101
ஆங்கில எழுத்து: D வெல்லப்பட்ட இலக்கங்கள்: 02 17 24 69
தேசிய லொத்தர் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காண்டம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிக வும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம்.

**தொடர்பு: 076 835 1932, 021 223 2222 (உரும்பிராய்)**

(8589)



## விரைவு பொதிகள் சேவை

**விசேட விலை குறைப்பு**

UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg

DELIVERY IN 3-5 DAYS

(நிபந்தனைகளுக்குட்பட்டது)

0768226240

V2 TRAVELS

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

(C-6164)



## கட்டடம் வாடகைக்கு

மானிப்பாய் வீதி ஆறுகால்மடம் பிரதான வீதியருகே வாகனத்தரிப்பிடத்துடன் கூடிய களஞ்சியமாகவும், கடையாகவும் பாவிக் கக்கூடிய கட்டடம் (70 அடி நீளம், 30 அடி அகலம்) ஒன்றும் எதிரே கடையாக பாவிக் கக் கூடிய கட்டிடம் ஒன்றும் வாடகைக்கு உண்டு.

**தொடர்பு : 077 283 5005, 076 085 5501**

(8582)


## பாடசாலைகள்...

பாதுகாப்புச் சபைக் கூட்டத்திலேயே இந் தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தொடர் குண்டுவெடிப்புக்களை அடுத்து ஏற்பட்ட அவசர நிலையால் அரச, தனியார் பாடசாலைகள் வரும் 29ஆம் திகதி வரை மூடப்படும் என கல்வி அமைச்சு அறி வித்திருந்தது.

அத்துடன், பல்கலைக்கழகங்கள் மறு அறிவித்தல் வரை மூடப்படுவதாக பல்கலை க்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழு அறிவித்திருந்தது. இந்த நிலையில் ஜனாதி பதி ஊடகப் பிரிவு இந்த அறிவிப்பை வெளி யிட்டுள்ளது. (ம-3)


## ரூமேனியா

**ஹொட்டேல்துறை வேலைவாய்ப்பு**

Pastry Cook, Baker/Bread maker
Bartender(Male/Female), Kebab Cook(Helpers)
Bartender Mixology, Waiter & Helpers (Ladies)
Western Cook, Asian Cook, Dish Washer

சம்பளம்: ரூ.61,215 - ரூ.139,920 வரை

சான்றிதழ்கள், அனுபவ கடிதங்களுடன் நேரில் வரவும்

பயிற்சி, முன்னனுபவம் இல்லாதவர்களுக்கு ஹொட்டேல்துறை பயிற்சியுடன் வேலைவாய்ப்பு!

Emerald Isle
Manpower & Travel Services
The Sri Lankan Recruitment Specialists
License No. 2268

0777 324 004
077 36 16 798
021 221 9 221

221-1/1, மின்சார நிலைய வீதி, (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
இஷாரா புடவையகம், The Loverக்கு அருகே)
www.emeraldisle.lk email: jaffna@emeraldisle.lk

(C-6214)


## வட பகுதியின்...

பொலிஸ் அதிகாரிகள் மற்றும் சர்வமத குருமார்கள் சிவில் சமூக பிரதிநிதிகள் ஆகி யோருடனான கலந்துரையாடல்கள் இடம் பெற்றதனை தொடர்ந்து ஊடகவியலாளர் களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாணத்தின் அனைத்து மாவட்ட ங்களிலும் இந்தக் கலந்துரையாடல் இடம் பெற்று வருகிறது. பொலிஸ் தலைமையக த்தின் பணிப்புக்க மைய இவ்வாறான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு ள்ளன.

வடக்கு மாகாண த்தில் இராணுவம், கடற்படை, விமானப் படை ஆகியவற்றின் பங்களிப்புடன் பாது காப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு ள்ளன. அந்த வகை யில் வடக்கின் பாது காப்பு உறுதிப்படுத்த ப்பட்டுள்ளது.

இக் கலந்துரை யாடலில் கிளிநொச்சி முல்லைத்தீவு பிரதி பொலிஸ்மா அதிபர் மகிந்த குணரட்ன, கிளிநொச்சி பொலிஸ் அத்தியட்சர் ஜெயந்த ரத்நாயக்க சர்வ மத த் தலைவர்கள், சிவில் சமூக பிரதி நிதிகள் ஆகியோர் கலந்து கொண்ட னர். (ம-312)

## நாட...

விசேட சுற்றி வளைப்பு நடவடிக் கைகள் முன்னெடு க்கப்பட்டுவருகின்றமை குறிப் பிடத் தக் கது. (ம-3)


**வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்**

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக் கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

**தொடர்பு: றாஜ் - 077 679 6623**

(8593)



## பணிப் பெண் தேவை

**(வயது 35 – 55 வரை)**

கொழும்பு பம்பலப்பிட்டியில் உள்ள வீடுகள் இரண்டிற்கு பணிப் பெண்கள் தேவை. ஒரு வீட்டிற்கு இருவருக்கு சமையல், மறு வீட்டிற்கு நான்கு பேருக்கு சமையல் செய்ய வேண்டும். இருப்பிட வசதியுண்டு. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**தொடர்புகளுக்கு: 075 053 2761**

(8587)


**யாழ்ப்பாண மாநகரசபைக்குட்பட்ட வட்டாரங்களின் மக்கள் பங்கேற்பு அபிவிருத்தித் திட்ட ஆவணம் தயாரித்தல் தொடர்பான கூட்டம்**

**1-ம் வட்டாரம் : - ஜே/98, ஜே/99**

**இடம் :** ஸ்ரீ காமாட்சி சனசமூக முன்றல் நாச்சிமார் கோவிலடி

**காலம் :** 28/04/2019 நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணி

அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

– இராசரட்ணம் கணேசராசா

(8591)


IBC தமிழ்

NOBLE INTERNATIONAL
Papers Lanka (Private) Limited

# Noble International Papers Lanka (Pvt) Ltd

அச்சுவேலியில் இயங்கும் காகித தொழிற்சாலையில் பின்வரும் பணிநிலைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### ● தொழிற்சாலை மேற்பார்வையாளர்கள்

**தகுதி** : G.C.E A/L உடன் தொழில்நுட்ப அறிவு
**அனுபவம்** : ஆகக்குறைந்தது 5 வருட குறையாத தொழில் அனுபவம்.
**வயது எல்லை** : 30 - 50 வயதுக்குட்பட்டோர்.

### ● தொழிற்சாலை தொழிலாளர்கள்

**தகுதி** : G.C.E O/L
**வயது எல்லை** : 30 - 50 வயதுக்குட்பட்டோர்.

(C-6221)

சுயவிபரக்கோவை அனுப்ப வேண்டிய முகவரி:

**மனிதவள பிரிவு,
Noble International
Papers Lanka (Pvt) Ltd,
Industrial Estate, Achchuvelly.**

Email : Noblehrm5@gmail.com


# மரண அறிவித்தல்



## திருமதி கௌரி மகேந்திரன்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாய் மத்தியை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி கௌரி மகேந்திரன் அவர்கள் கடந்த (22.04.2019) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து - சரஸ்வதி தம்பதியினரின் மகளும், காலஞ்சென்றவர்களான கனகு - இரத்தினம் தம்பதியினரின் மருமக ளும், மகேந்திரன் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் தே.வீ.அ அதிகாரசபை) அவர்களின் அன்பு மனைவியும், திருத்தணீசன் (லண்டன்), பிரசன்னா (லண் டன்), ரகுநாத் (பிரான்ஸ்), ஹம்சானந்தி, பைரவநாத், ஜெகதாம்பிகை ஆகி யோரின் அன்புத் தாயாரும், நதியா (லண்டன்), தர்சினி (லண்டன்), சத்தியா (பிரான்ஸ்), சுயதாஸ் (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச சபை, மானிப் பாய்), சதீஸ் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், மேஷாக், மைக், லதுசன், கிருத்திக், விபின்சா, சுரபி, ஆரிஸ் ஆகியோரின் பேர்த்தியு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.04.2019) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டுப் பனை இந்து மயானத்துக்கு முற்பகல் 11 மணியளவில் எடுத்துச் செல்லப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சண்டிலிப்பாய் மத்தி,
சண்டிலிப்பாய்.

தகவல் : குடும்பத்தினர்
077 936 3944, 077 404 7756

(8595)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.04.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org